T. 1399.

முருகன் துணை.

[ஸ்ரீ]சிவன் பார்வதிக் குபதேசித்த

# [ஞான]கவிமூலமும் உரையும்

இஃது,

மதுரை சோதிட வித்துவான்

த. குப்புசாமி நாயுடு அவர்களால்

உரை எழுதப்பெற்று

சென்னை-இட்டா,

[பார]த்தசாரதி நாயுடு அண்டு சன்ஸ்

அவர்களால்

சென்னை-சக்கரவர்த்தி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றது.

1935

[... கா]ப்பிரயிட்] விலை ரூபா 1—0—0.

முருகன் துணை.

# நான்முகம்

நெடிய கடல்சூழ்ந்த படிமிசையதனில் வடிவுளமாந்தர் திரிகாலத்தும் பயனைத் தெரிந்துணரும் பொருட்டு, இறைவன் கருணையால் அருளப்பெற்றதாகக் கருதப்படும் வேதத்திற்குச் சோதிட சாத்திரமே நேத்திரமாமெனக்கொண்டாடப் பெற்று வருகிறது.

இச்சோதிடத்தைப் பலகாலங்களிற் பல அறிஞர்கள் பல நூல்களாகச் செய்துள்ளார். அவைகளில் ஒன்றாகிய "வீமகவியை" இது வரையில் சென்னை-இட்டா, பார்த்தசாரதி நாயுடு அவர்கள், திருச்சிராப்பள்ளி மன்னச்சி நல்லூர்பேட்டை சோதிடம், குப்பமுத்து செட்டியாரவர்களிட மிருந்த தலாபத்திரமாகிய ஓலையேட்டுப் பிரதியைக்கொண்டு, சுமார் நாற்பது வருடகாலமாக அச்சுப்போட்டு வந்தப் பதிப்புக ளனந்தம். ஆனால், அப்புத்தகத்துக்கு உரையெழுதி அச்சிடாமலிருந்துவிட்டார்கள். அதையும் நம்முன்னோர்கள் தொன்று தொட்டுக்கையாண்டு வந்தார்கள். அதுவும் தற்சமயம் புத்தகக்கடைகளில் அகப்படுவது முயற்கொம்புபோலும், ஒருவேளை அது கிடைத்தாலும், மணற்சோற்றிற் கல்லாராய்வது போலு மிருக்கிறது. இக்குறையை இக்கணமே நீக்கவேண்டுமென ஷை இட்டா, பார்த்தசாரதி நாயுடு அவர்கள் புத்திர ரத்தினம், இட்டா, சக்கரபாணி நாயுடு அவர்கள் கருதி செய்யுளாராய்ச்சி குறைந்த தற்காலத்திற் செய்யுளுருவா யிருப்பது பலருக்கும் பெரிதும் பயனளிக்காதென வறிந்து எம்பால் வந்து எம்மை இந்நூற்கு உரையெழுதும்படி விரும்பிக்கேட்டனர். அவ்வாறு உரையெழுதுந் தரமுடையே னல்லேன் என்பதை நன்கு தெரிந்தும்யாம்அவர்பால் அவ்வரிய செய்கையை நிறைவேற்றும் ஆற்றலுடையேனல்லேமென விடையளித்தனம்.

அவ்வாறு விடையளித்தும், அவரும், அவராருகிலிருந்த சில ஜ்சோதிட நிபுணர்களும் எம்மைவிடாது தம்மிடமிருந்த பழைய புத்தகப் பிரதிகளைக் கொடுத்துத், தாங்களே இந்நூற்குரியரென யாம் கருதுவதைத்தாங்கள்மறுக்கற்பாலதன்றெனப் பன்முறைவிரும்பிக் கேட்டுக்கொண்டமையால், அவர்கள் கருத்துக்கிசைந்து, என் சிற்றறிவுக் கெட்டியவாறு சகல பொருள்களையும் சுலபமாக அறியும் வண்ணம், பொருத்தமான அருத்தங்களைத்திருத்தமாக விளக்கியும், நுட்பா நுட்பங்களனைத்தையும் விரித்தும் ஒருவாறு உரையெழுதியிருப்பதை, சென்னை, இட்டா-பார்த்தசாரதி நாயுடு அண்டுசன்ஸ் அவர்களால் உலகோபகாரமாக வெளிப்படுத்தலாயிற்று. ஆயினும் கற்றுத் தெளிந்த மேதாவிகளுக்கு இவ்வுரையில் ஆங்காங்கு சில தவறுகள் தோற்றினுந்தோற்றலாம். அதை ஏழையாகிய எம்மீது தயவுவைத்துத் திருத்தி வாசித்துக்கொள்ளுமாறு அவர்களைவேண்டிக் கொள்ளுகின்றோம்.

இப்படிக்கு,

த. குப்புசாமி நாயுடு,

சோதிட வித்வான்,

ப[redacted]வை.

# சாற்றுக்கவி

ஸ்ரீ வில்லிபுத்தூர், பாரதப்பிரசங்கம்,

பாலசுப்பிரமணிய பிள்ளை அவர்கள்

இயற்றியது.

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

தன்னையே தன்னு லறிந்தவன் மதுரைத்
தலத்தினிற் றம்புசா மிக்குப்
பொன்னையே யனைய கான்முளை யான
புகழுறுங் குப்புசா மியுமே
முன்னையோர் தமிழைப் பார்வையிட் டினிய
மூதறி வுள்ளவர்க் கெல்லா
நன்னயமாக வச்சிடத் தகுந்த
நாவல ராமென நவில்வாம்.

---

வடவலாபுரம்,

சின்னச்சாமி ஆச்சாரியரவர்கள்

இயற்றியது.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

உரைசெய் மறைமுதற் பொருளம் பிகைவளரும்
கூடல்நக ருவந்தோன்
விரவுகலா நிதிபீட மனையகுப்புச் சாமியெனும்
விபுதர் கோமான்
பரவுமிய லிசைநடன நூலறிந்தோர் நன்கியற்றும்
பன்னூ லியாவும்
கரிசரச்சீர் திருத்திநல்ல வச்சியற்றிப் புகழ்முழுதுங்
கைக்கொண் டானே.

முருகன் துணை.

# வீமகவி செய்யுளக்ராதி


| பாட்டு | பக்கம் |
|---|---|
| அ | |
| அஞ்சாமிடத்திற் | 19 |
| அஞ்சாமிடத்திற் | 61 |
| அஞ்சியே அஞ்சானென்பா | 16 |
| அஞ்சினி விரவிகாரி | 68 |
| அஞ்சுடனெட்டுப் பத்தில் | 44 |
| அஞ்சுடனெட்டு மூன்றாம் | 14 |
| அஞ்சுடனேழு பத்தாகும் | 60 |
| அஞ்சுடனாறு மூன்றாம் | 40 |
| அஞ்சுடன் ஏழுபத்தில் | 28 |
| அஞ்சேழிற் பாவர்நிற்க | 58 |
| அப்படியாறும் வீட்டோன் | 67 |
| அரியென்னுஞ் சிங்கமதின் | 77 |
| அரியவே தண்டிரண்டாம் | 72 |
| அறியும் ராசிக்கதிபதி | 97 |
| அறிவதென்ன விருச்சிகத் | 81 |
| அன்னமே அரவிருக்க | 62 |
| அன்னமே இன்னமொருவர் | 63 |
| அன்னமே செவ்வாயாலே | 26 |
| அன்றேகாரி செய்மதியும் | 49 |
| ஆ | |
| ஆகவே அவனிமீதே | 33 |
| ஆகிய இரண்டு மூன்றில் | 17 |
| ஆகிய மனைக்குள்ளாக | 18 |
| ஆகுமிரவி சனிபுந்தி | 17 |
| ஆகுமே செவ்வாய்புந்தி | 59 |
| ஆகும் மனைக்குத்தென்புற | 61 |
| ஆடதில் மூன்றாம்பாதம் | 69 |
| ஆட்சியோடுச்ச கேந்திர | 57 |
| ஆதித்தன் நின்றநிலை | 102 |
| ஆமென லக்கினத்தான் | 13 |
| ஆமேடத் ததிபன்றானும் | 48 |
| ஆரென்றால் மாமனுடவர்க் | 63 |
| ஆறாமிடத்திலம் லியும் | 20 |
| ஆறிரண்டேழு மொன்பான் | 10 |
| ஆறினில் மூன்று நான்கில் | 59 |
| ஆறினிற்குருவும் புந்தி | 19 |
| ஆறுடன் நான்கு மூன்றா | 42 |
| ஆறுடன் மூன்று நாலில் | 27 |
| ஆறுடன் மூன்று நான்காம் | 38 |
| இ | |
| இப்படியேழு பத்தில் | 42 |
| இருக்கப்பாவருடன்கூடி | 18 |
| இருப்பதோ ரிலக்கினாதி | 2[illegible] |
| இலக்கினந்தனக்குமே | 40 |
| இல்லெனச் சோமன்காரி | 23 |
| இன்னமுஞ் சொல்லக்கேளு | 36 |
| ஈ | |
| ஈசர் பாதத்திறைஞ்சிய | 97 |
| உ | |
| உயர்கனியெனுமிச்சங்கனி | 21 |
| உருத்துயிரோனுமாட்சி | 9 |
| உரைக்கவே யின்னங்கேளு | 18 |
| உரைக்கிலொன்று முதற் | 91 |
| உரைக்குஞ்சாடியும் | 99 |
| உறையுமேடத்ததிபதிதா | 51 |
| எ | |
| எட்டிற்காரி குஜன்கூடி | 48 |
| எட்டு ஆறுக்குடையவன் | 55 |
| எட்டுக்குடையோன் சனி | 50 |
| எட்டுடன் பதினொன்றஞ் | 26 |
| எட்டும் ஆறும்பனிரெண் | 53 |
| எட்டெனவெட்டாம் வீட் | 15 |
| ஏ | |
| ஏதினால் நொடித்ததென | 65 |
| ஏதுவெனும் மகரமது | 85 |
| ஏழுட னெட்டிற்பத்தில் | 30 |
| ஏறுமுதையந்தனிற்காரி | 37 |
| ஏற்கும் நாற்கண்டத் | 96 |
| ஐ | |
| ஐயமில்லை வையமதில் | 64 |
| ஐயமேயின்னங்கேளு | 58 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| ஐயமேனுங்கள் வீட்டில் | 16 |
| **ஒ** | |
| ஒன்றுய்க்காரிபாம்புச்சி | 50 |
| **க** | |
| கண்டகீழ்மேல் வரையெட்டு | 93 |
| கண்டமாமெட்டிற் பத்திற் | 40 |
| கண்டுகொள்வாய் தனங்கள் | 102 |
| கதிரவன் ஆறுளட்டிற் | 47 |
| கன்னிமுதற்பாத மதில் | 77 |
| **கா** | |
| காணலக்கினத்திற் செவ்வாய் | 17 |
| காணலாம் ராகுவாலே | 25 |
| காணவந்திக்கும்மல் முக | 93 |
| காணுமுதயம் மூன்றேழிற் | 59 |
| காணுமெயெட்டு நாலிற் | 30 |
| காணுமே எட்டுபத்திற் | 40 |
| காணுமே எட்டுபத்திற் | 42 |
| காணும்லக்கினம் கண்டமே | 26 |
| காணும்லக்கினத்தான்நாலிற் | 11 |
| காண்டீபமெனுந் தனுசு | 84 |
| காரகன்சனியுமெட்டிற் | 44 |
| காரணமதியுஞ்சுங்கன் | 29 |
| காரணமாம் பதினென்றுக் | 66 |
| காரணமாய்ப் புதனிருக்கக் | 62 |
| காரிகட் செவியுமொன்றுய் | 27 |
| காரிசேயுதயம் நோக்கக் | 36 |
| காரியானவனும் மூன்றிற் | 32 |
| காரியும் புதனுமேழிற் | 35 |
| காரியும் மதியும்இன்றுல் | 30 |
| காரியோடெட்டுப்பத்திற் | 35 |
| கார்முகமாமெனுந்தனுசு | 84 |
| **கு** | |
| குடமதனில் மூன்றுங்கால் | 87 |
| கும்பமுதற் பாதமதிலுதித்த | 87 |
| குருவும் பாவிமனேயேறி | 49 |
| குருவும்பாவியுடன் சனி | 54 |
| குருவும்புந்திசனி நான்கிற் | 56 |
| குருவைச் சனியைப்புதன் | 38 |
| குறித்தலக்கினத்தானுட்சி | 13 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| **கூ** | |
| கூறதுவே கொம்புவிடை | 71 |
| கூறலாங்கன்னியதில் காலா | 79 |
| கூறிய லாபந்தன்னிற் | 58 |
| **கே** | |
| கேதுவுஞ் சனியுமெட்டிற் | 41 |
| கேளப்பா ஆடதிலே நாலா | 70 |
| **கொ** | |
| கொஞ்சிடுமெட்டு பத்திற் | 10 |
| கொண்டிடுஞ் செவ்வாய்ராகு | 15 |
| கொற்றவனுர் மூன்றுனுக் | 45 |
| **கோ** | |
| கோதையேஆருமவீட்டோன் | 68 |
| கோலதிலே இவன்ஜெனனம் | 80 |
| **ச** | |
| சந்திரனி லக்கினத்திற் | 35 |
| சந்திரனுதயமேழிற் | 36 |
| சந்திரனெட்டு நாலில் | 34 |
| சந்திரனேழு பத்தில் | 43 |
| சந்திரனேழு பத்திற்சனி | 42 |
| சந்திரன் ஏழுபத்திற்றுன் | 30 |
| சந்திரன் மூன்றுநாலிற் | 27 |
| சந்திரன் மூன்றிற் | 29 |
| சந்திரன் மூன்றிராறிற் | 30 |
| சந்திரன் வியாழன் றன்னை | 44 |
| சனியினுற் காலிசேதம் | 46 |
| **சா** | |
| சாடியிரண்டாம் பாதம் | 87 |
| சாத்துமக்கினிதன் முதல் | 93 |
| சாரவுதயந்தனக்காறுங் | 37 |
| சாரவே எட்டிற்பத்திற் | 41 |
| சாரிடமொன்பான் றன்னிற் | 32 |
| சாருஞ்சசியு மோரேழிற் | 50 |
| சாற்றலாங்கெண்டை | 89 |
| **சி** | |
| சிங்கமதுலக்கினந்தா | 76 |
| சிங்கமெனுஞ் சீயமதின் | 75 |
| **சீ** | |
| சீரானதுலாமதனின் | 79 |
| சீரெனயெட்டிராறிற் | 24 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| சு | |
| சுக்கிரனுடனே புந்தி | 27 |
| செ | |
| செட்டியெனுந் துலாம்ராசி | 80 |
| செந்தீவண்ணன் நாலேந்திற் | 38 |
| செப்பலாம் இடபத்தின் | 71 |
| செப்புமந்தமனேக்குவடபுறம் | 53 |
| செப்புமேழில் மதியு | 100 |
| செருக்குள செவ்வாயேழு | 11 |
| சே | |
| சேடியாங் கன்னிமூன்றும் | 78 |
| சேய்புதனிருவரொன்ருய் | 39 |
| சேய்புதன் நீசம்பெற்ருல் | 37 |
| சேருமே சீதனென்றாழ் | 16 |
| சொ | |
| சொல்லது ரெண்டாமாதி | 18 |
| சொல்லீதா ரிலக்கினத்திற் | 34 |
| சொல்லதோ ரைந்தில்ராகு | 19 |
| சொல்லீதார் சோமலக்கின | 20 |
| சொல்லவே இன்னங்கேளு | 32 |
| சொல்லவே யின்னங்கேளு | 12 |
| சொல்லவே மிதுனமுதற் | 72 |
| சொல்லிய மூன்றுநாலில் | 31 |
| சொல்லிய மூன்றுநான்கிற் | 35 |
| சொல்லிய மூன்றையேழை | 36 |
| சொல்லிய ராகுசோமன் | 23 |
| சொல்லிய லக்கினுதிசுடர் | 24 |
| சொல்லினேம் மிதுனமதின் | 73 |
| சொல்லுமஞ்சாமிடத்தில் | 100 |
| சொல்லும் புதனும்சுங்க | 51 |
| சொல்லே காரிலாபத்திற் | 57 |
| சொன்னதோ ரொன்பான் | 58 |
| சொன்னதோர் தானத்தாதி | 23 |
| த | |
| தக்கவன் செவ்வாய்ராகு | 14 |
| தப்பாதுரையும் சேய்மதி | 48 |
| தப்பாதுரையும்மேடத்தோன் | 50 |
| தனுசுமூதற் பாதமதிற் | 83 |
| தா | |
| தானமாம் சிங்கமதின்மூன்ரு | 76 |
| தானவன் லக்கினத்தான் | 12 |
| தானுமே வென்பான்பத்திற் | 11 |
| தானெனச் சொல்லக்கேளு | 24 |
| து | |
| துன்னியர் மேலேசொன்ன | 30 |
| தெ | |
| தெரிவையெனுங் கன்னியதி | 78 |
| தே | |
| தேருவாய் நண்டதனில் | 75 |
| தேளெனும் விருச்சிகந்தா | 82 |
| தேறியே இரண்டுநான்கில் | 34 |
| தோ | |
| தோற்றமதி லின்னமொரு | 64 |
| தோற்றிடு கேந்திரத்திற் | 20 |
| ந | |
| நண்டிலிவன் ஜெனனமதி | 74 |
| நண்டென்னுங் கடகமுதற் | 74 |
| நல்ல ஏழிற்குஜன்சனியும் | 52 |
| நல்லதொரு நாயகியே | 66 |
| நல்லவர்க்கெட்டிலாறில் | 14 |
| நள்ளியெனும் நண்டதனில் | 75 |
| நன்னிய லக்கினத்தோன் | 25 |
| நா | |
| நாலாமேழோன்லாபத்தோன் | 56 |
| நாலுமூன்றேழுதன்னில் | 28 |
| நீ | |
| நீடிய வியத்திற்பொன்னன் | 57 |
| நெ | |
| நெட்டுப் போட்டரை | 101 |
| ப | |
| பனியும் ரெண்டுக்குடையவ | 60 |
| பனியும் ரெண்டுக்குடைய | 55 |
| பதியும் ரெண்டுக்குடையவ | 55 |
| பத்துடனேந்து ஏழாம் | 44 |
| பத்துடன் மூன்னும்பின்னும் | 12 |
| பத்துநாலேழோடொன் | 45 |
| பத்துடைய விருச்சிகந்தா | 81 |
| பத்தினுற் கண்டத்திற்சுபர் | 93 |
| பலிக்கு மீசர்தாளன்பருக் | 101 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| பா | |
| பாரப்பால் மகரமதுநாலாம் | 96 |
| பாரமற்பாழ்மனையேயாகு | 65 |
| பாரினிலேழு பத்திற்பனி | 53 |
| பாரெனவுதையத்தானும் | 13 |
| பாரெனக் குருவுஞ்சுங்கன் | 24 |
| பாரெனப் புதனுமேழிற் | 11 |
| பாரென்று சொன்னபோது | 25 |
| பார்க்குமே மதிநின்றிட | 98 |
| பாருடன் பத்துஅஞ்சிற் | 29 |
| பு | |
| புகலவே மச்சமது | 90 |
| புந்திதா னெட்டில்நிற்கப் | 39 |
| புந்திதா னெட்டுப்பத்திற் | 41 |
| புந்திபத்தெட்டில் நிற்கப் | 33 |
| புந்தியேழெட்டில் நிற்கப் | 31 |
| பே | |
| பேசிடும் நாலாமாதி | 17 |
| பேசிவரும் நாலாதிபாவனுகி | 54 |
| பேசினோம் மிதுனமதின் | 73 |
| பேசும் ராசியிடத்ததிபன் | 52 |
| பை | |
| பையநான் காதியேழிடஞ் | 47 |
| பொ | |
| பொன்னவன் சென்மங் | 43 |
| பொன்னுறையும் வேத | 9 |
| ம | |
| மகரமுதற் பாதமதில் | 85 |
| மதியுங் கேந்திரமேசுபர் | 98 |
| மதியேசுங்கன் சனிகூடி | 51 |
| மந்திரி கணக்கனேழில் | 19 |
| மந்திரியேழில் நிற்க | 43 |
| மனையதில் வந்துநின்றே | 46 |
| மன்னவனுயத்தோனும் | 15 |
| மன்னவனுதயத்தோனும் | 10 |
| மா | |
| மாட்டிச்சொல்சவங்கண் | 102 |
| மாமன்சிறுவன் தாய்தந்தை | 28 |
| மாமன் வீட்டிலிருப்பானும் | 61 |
| மானவர்தமக்குஜென்மத்தி | 21 |
| மானமேடத்ததிபதியும் | 49 |
| மீ | |
| மீனமதுலக்கினந்தானிரண் | 89 |
| மீனமுதற்பாதமதிற் | 88 |
| மு | |
| முன்னம்பனிரண்டாமிடத் | 52 |
| பாட்டு | பக்கம் |
| மே | |
| மேஷமுதற்பாதமதி | 68 |
| மேஷமென்றலக்கினந்தா | 69 |
| மொ | |
| மொழியும்நாற் கண்டத் | 96 |
| ல | |
| லக்கினம் நான்கோடேழில் | 59 |
| வ | |
| வணங்கியே நாலாமாதி | 20 |
| வணிகனெனுந்துலாமதனில் | 81 |
| வந்திக்கும்சாடிநாலாம் | 88 |
| வருமே மிதுனத்ததிபதியும் | 56 |
| வலுத்திருப்பானொருமாம | 67 |
| வலமை நாலாமாதி | 47 |
| வழுத்திடவே இடபமுதற் | 70 |
| வனிதைகேளைந்தாம் வீட் | 45 |
| வா | |
| வாட்டமுறுஞ் சட்டமத்துக் | 61 |
| வாதித்தபுதனு மைந்தில் | 33 |
| வாழ்வதாம்புகர் தன்னுட | 99 |
| வி | |
| விடையிலிவன் பிறந்துவந்த | 70 |
| விட்டனெனும் விருச்சிகந் | 82 |
| வில்லென்ற தனுசுதனி | 83 |
| விளம்பலாம் மகரமதில் | 86 |
| வினவும்போதிலளங்க அடி | 91 |
| வீ | |
| வீறுள செவ்வாய்புந்தி | 14 |
| வீமனார் சொன்னநூலில் | 23 |
| வீமனும் பலனைச்சொல்ல | 22 |
| வெ | |
| வெள்ளி வீட்டிற் சனி | 46 |


வீமகவி செய்யுளகராதி முற்றிற்று.

கடவுள் துணை.

# பரமசிவன் பார்வதிக் குபதேசித்த

# வீமகவிமூலமும் உரையும்

காப்பு வெண்பா.

பொன்னுறையும் வேதபுராண கமந்தனக்கு
முன்னுரையும் அத்தி முகவனது—பொன்னடியைத்
தோத்திரிப்போம் இங்குநாம் சோதிடமாம் வீமகவி
சாத்திரத்தை முற்றிலுமோத.

இதன் பொருள். நவமணிபோற் பிரகாசம்பொருந்திய நான்கு வேதம், ஆறுசாஸ்திரம், பதினென்புராணம், முப்பத்திரண்டு உபநிடதம், அறுபத்துநான்கு கலைக்கியானம், தொண்ணூற்றாறு தத்துவம், ஆக இதிகாசங்களுக்கும், முதற்காரணப் பொருளாய் ஆதிவஸ்துவாய் பிரணவ சொரூபமாய் விளங்காநின்ற விநாயகமூர்த்தியின் திருவடியைச் சிந்தித்து வந்தித்து ஏற்றிப் போற்றித் தோத்திரஞ்செய்து அவனருளைக்கொண்டு சோதிடசாகரமென்னும் நூல்களிலுள்ள பல சாராம்சங்களை யொருங்கே திரட்டி ஓர் சாஸ்திரமாக்கி அதற்கு நாம் இங்கு "சோதிட வீமகவி" எனத் திருநாமஞ் சூட்டி முற்றிலும் சம்பூரணமாகச் சொல்லத்துணிந்தனம் என்றவாறு.

உருத்துயி ரோனுமாட்சி யொள்ளியோ னென்னுஞ் சுங்கன்
பொருத்தமாய்ச் சேர்ந்து நிற்கப்புறந்தெற்கு மனையேபாழாம்
மிருத்திசே யேழில்நிற்க மிக்கசஞ்சலமு முண்டாம்
கருத்திடுங் குழலினாளே கண்டுகோள் கருத்தாய்த் தானே. 1

இ-ள். மாநிலத்துதித்த மானிடவர்க்கு ஆரூடலக்கினத்தில், மாட்சிமைதங்கிய லக்கினாதிபதி ஆட்சியாயிருக்க, அவருடன் தாட்சணையுள்ள சுக்கிரனுஞ் சேர்ந்து நிற்க, ஜாதகன் வசிக்கும் மனைக்குத் தென்புறமிருக்கும் மனை பாழாய்க்கிடக்கும். செவ்வாய்- செவ்வையாய் ஏழாமிடத்தி லிருந்தால் மனச்சஞ்சலம் மிகவுண்டாகும் என்று இருள்போன்ற கரிய கூந்தலை யுடைய பெண்ணே! கருத்தாய்க்கண்டு சொல்லுவாய் எ-று.

மன்னவனுதையத் தோனும் மருவிட வெட்டிற் பத்திற்
பின்னவன் பிலவானுகிற் பின்மனை வடபால் பாழாம்
சொன்னபெண்டாட்டி யில்லை சூரியன் நீசம் பெற்றால்
வின்னமாங் கீழ்புரத்தில் விளையுமாண்டி ரண்டிலம்மா. 2

இ-ள். மன்னவனாகிய குருவும், தன்னுயிராகிய லக்கினாதி பதி கூடி, எட்டாமிடத்திலாவது (அல்லது) பத்தாமிடத்திலாவது சேர்ந்து பிலவானாக நின்றால், ஜாதகன் மனைக்கு வடக்குப் பக்கமிருக்கும் மனைபாழாயிருக்கும். சூரியன் நீசம் பெற்றிருந்தால் பெண்டாட்டியில்லை இரண்டாண்டுக்குள் தானிருக்கும் மனைக்குக் கீழ்புறமிருக்கும் மனை பாழாகும். எ-று.

ஆறிரண்டேழு மொன்பான் அவரவர் வீட்டில் நிற்க
வேறுளோன் மனையைவாங்க விரைவினில் வருவான்பாரு
கூறிய மனைக்குத் தெற்கே குடியுமே யில்லையப்பா
வீறில மிகவே மன்னன் வேந்தனாற் கெடுதிபாமே. 3

இ-ள். இலக்கினத்துக்கு இரண்டு, ஆறு, ஏழு, ஒன்பதாமிடத்துக்குடையவர்கள் தங்கள் தங்கள் சொந்தவீட்டில் இருப்பார்களாகில், இன்வன்மனையை அன்னியனொருவன் தன்னினம் போல் முன்னம் விலைகொடுத்து வாங்கவருவான். ஆனால் அம்மனைக்குத் தெற்கு குடியிருப்பில்லை. வேந்தரால் மிகவும் நஷ்டமடைவன் எ-று.

பாரெனப் புந்தி யெட்டிற் பனிரண்டிலேறினாலும்
ஆரெனச் சுபர்கடானும் அவரவர் வீட்டில் நிற்க
கூரென மாமன் வர்க்கங் குடும்பமுமில்லைகண்டாய்
சாரெனத் தெய்வத்தாலே சந்ததி யற்றுப்போமே. 4

இ-ள். எட்டுப் பன்னிரண்டில் திட்டமாய்ப் புதன் நின்றாலும், சுபர்கள் அவரவர்கள் சொந்தவீட்டி லிருந்தாலும், மாதுலனாகிய மாமன் வமிசத்தில் குலதெய்வத்தினாலெ குடும்பங்குறைந்து புத்திர சந்தானமில்லாமற் சந்ததியற்றுப்போகும். எ-று.

கொஞ்சிடும் மெட்டுபத்திற் குருவுமே யரவினோடு
தஞ்சமாய் நின்றாராகிற் சாற்றுவாய் கிழக்கே பாழாம்
வஞ்சமாய் சனியன் நிற்கில் மாமன்றன் வமிசமில்லை
கிஞ்சுக மொழியினாளே கெடுதியென் றுரைத்தார்தானே. 5

இ-ள். ஆரூட லக்கினத்துக்கு எட்டுப்பத்திற் கரும் பாம்பும், குருவுங்கூடி நின்றால், இவன்மனைக்குக் கீழ்புறமிருக்கும் மனைபாழா ய்க்கிடக்கும். அத்தானத்திலே சனியிருந்தால் மாமன் வமிசங்குறை ந்து காட்டும். எ-று.

தானுமே ஒன்பான்பத்திற் சனியுறில் மனைக்குத்தீம்பு
நானுமே உரைப்பேன் கேளுநயமுள மனையும் பாழாம்
ஆனுமே குருவுஞ்சேர்ந்தால் அழகுளமைந்தர் நாசம்
கோனுட மனைகளெல்லாங் குணமிலே யறிந்துபாரே. 6

இ-ள். ஒன்பது - பத்தாமிடத்தில் இன்பமாய் சனிவந்திருந் தால், அவன் மனைக்குத் தீம்புண்டாகும். அம்மனை பாழாய்ப்போ கும். அச்சனியுடன் குருவுஞ்சேர்ந்தால் மைந்தரும் நாசமாம். மனையும் பாழாம். எ-று.

பாரென புதனுமேழிற் பணிசெய்வா யுடனேகூட
ஆரென மனைகிழக்கு அனர்த்தமாய்ப் போகுமில்லம்
வீரெனப் புதனும்நிற்க விளங்காத மனையாம் பாரு
சாரென நாலாம் வீட்டிற் றூன்குடிதட்டுவாணி. 7

இ-ள். ஏழாமிடத்தில் புதனும், இராகுவும், செவ்வாயும், சேர் ந்திருப்பாராகில், அம்மனைக்குக் கீழ்புறமிருக்கும் வீடு பாழாகும். புதன்மட்டுமிருந்தால் ஜாதகன் வீடு பாழாகும். அதற்கு நாலாம் வீட்டிற் குடியிருப்பது, கமலசாஸ்வதியாகிய வேசி வாசஞ் செய் வாள். எ-று.

காணும் லக்கினத்தான் நாலிற் கண்டிட அவன் றன்னோடு
மாணுமே ராகுபுத்தி வகையுடன் சேர்ந்தாராகில்
வேணுமென்மனை கிழக்கில் வேசியுங் குடியிருப்பாள்
ஆணுமே யில்லாதாகில் அம்மனை பாழதாமே. 8

இ-ள், இலக்கினாதிபதி நாலாமிடத்திலிருக்க, அவனோடு இரா குவும் புதனும் சேர்ந்திருப்பார்களாகில், தானிருக்கும் மனைக்குக் கீழ்புறம் வேசி குடியிருப்பாள். ஆண் சந்ததியில்லாதாகில் அம்மனை பாழாகுமென்க. எ-று.

செருக்குள செவ்வாயேழு மெட்டு நான் கதனிற்சேரில்
வருக்கமாம் மனைக்குத்தெற்கு வமிசமுமற்றுப்போகும்
பெருக்கமாம்பிள்ளையெல்லாம் பெலமிலை சாவுசொல்லும்
இருக்கமாம் பாவர்பார்க்க இல்லறம் பாழதாமே. 9

இ-ள். செவ்வாய் ஏழு - எட்டு - நாலா மிடங்களிலிருந்தால் தானிருக்கும் மனைக்குத்தெற்குப் புறமுள்ள மனையில் வமிச பரம்பரையில்லாமற் போகும். (அதாவது) கொள்ளிக்குப் பிள்ளை யில்லாமற் பிறந்த தெல்லாம் இறந்துபோகும். அச்செவ்வாயைப் பாவர்கள் பார்ததால் குடும்பங்கெட்டு மனையும் பாழாய்ப்போகும். எ-று.

தானவன் லக்கினத்தான் தானஞ்சு பத்தில்நிற்க
கானவன் றூனும்முன்னே கட்டிவாழ்ந் திருந்தவீடாம்
மானவனொருவன்செய்த வஞ்சமும் போச்சுதையா
வானவன் விதியாலிப்போ வாழ்வுதா னென்றுசொல்லே. 10

இ-ள். இலக்ஞாதிபதி தக்க அஞ்சபத்தாமிடத்தி லிருக்கக் காடுகளில் கூடுகட்டிவாழும் பேடு புறாமுதலிய பட்சிஜாதிகளைத் தேடி ஓடி நாடியலைந்து வேட்டையாடும் வேடுவனால் வீடு கட்டி வாழ்ந்திருந்தவீடாகும். மானியான மனிதன் வஞ்சகஞ் செய்ததும் பஞ்சாய்ப்பறந்து விட்டது, ஊழ்வலி தாழ்விலா திருப்பதால் வாழ்வதிகமாம். ஆகையால் அம்மனையிற் சும்மாசுகமாய்க் குடியிருந்து வாழலாமென்று சொல்லுவாயாக. எ-று.

சொல்லவே யின்னங்கேளு சூரியன் செவ்வாய்ராகு
வல்லமை கேந்திரத்தில் வகையுடன் நின்றூராகில்
நல்லறி வுடையமைந்தர் நாலும்பேர் தானுமுண்டு
இல்லிடம் சுகமுண்டென்றே இயம்பினர் வீமர்தாமே. 11

இ-ள். வீமகவி சொன்னதை வாமகவியென்றே இன்னங் கேட்பாயாக! கேமமாய்க் கேந்திர ஸ்தானமாகிய ஒன்று, நான்கு, ஏழு, பத்தாமிடத்தில் சூரியனும், செவ்வாயும், இராகும், இம்மூவரும் ஒன்றுசேர்ந்து நின்றூராகில், நல்லறிவுடையபுதல்வர்கள் நால்வரைப்பெற்று வல்லமையாக இல்லறம் வழுவாது குடும்பம் வளுத்து சுகமாக வாழ்வானென்று சொல்லுவாயாக. எ-று.

பத்துடன் மூன்றும் பின்னும் பசுங்கதித் தேவுஞ்சுக்கன்
அத்துடன் அரவுசெவ்வாய் அணுகியே நின்றூராகில்
கத்துடன் பிறந்தார்பூவிற் காணும்பிரா தாவிரண்டு
ஒத்துடன் புதனேபார்க்கில் உண்டெனச் செப்பலாமே. 12

இ-ள். பத்துடன் முன்றும் பின்னும் என்று சொன்னதினால் ஒன்பது-பத்து-பதினோராமிடங்களில் எதிலாவது ஓரிடத்திற் பசுங்

கதிர்த்தேவாகிய சந்திரபகவானும், சுங்கனாகிய சுக்கிர பகவானும் அரவாகிய இராகு பகவானும், செவ்வாயாகிய அங்காரகபகவானும் சேர்ந்துநிற்க, அவர்களைப் புதன் பார்க்கப் பிறந்த ஜாதகனுக்குப் பிராதாவாகிய சகோதரங்களிரண்டு உண்டென்று கண்டு மொழியாளே! விண்டு சொல்லுவாயாக எ-று.

ஆமென லக்கினத்தான் அவனுமே பாவரோடே
தாமெனச் செவ்வாய்சேரில் தன்மனை பாழதாகும்
ஏமென வுதையந்தன்னில் எட்டவன் நிற்கத்தானும்
சாமெனக் கொள்ளைபோகும் சண்டையு மிகவுண்டாமே. 13

இ-ள். பாவிகளோடு ஆவியாகிய லக்கினாதிபதியும், பூவினுக்குடையசெவ்வாயுஞ் சேர்ந்திருக்க, ஜாதகன் தன்மனை பாழாகும். எட்டுக்குடையவன் திட்டமாம் உதயத்திலிருக்கப் பிறந்தவனுக்கு அம்மனையில்கொண்ட கஷ்டமும் பண்டுபாத்திரமும், பணநஷ்டமும், சண்டைசச்சரவும் மிகவே உண்டாகும், கொள்ளையும் போம், குடும்பத்தில் மரணம் நேரிடும். எ-று.

குறித்தலக் கினத்தானாட்சி கூடிநற் சுபர்களோடு
தெரித்தங்கே நின்றாராகில் தென்புறத் தில்லம்பாழாம்
பிரித்திடும் ராகுகேது பிறங்கநற் சுபருங்கூடில்
எரித்திடும் ஆண்டுபத்தில் இல்லரம்பாழாம்பாரே. 14

இ-ள். மாட்சி தங்குஞ் சுபர்களோடு கூடிய லக்கினாதிபதி ஆட்சிபெற்றிருந்தால் ஜாதகன் மனைக்குத் தென்புறமிருக்கும் மனை பாழாகும். சுபர்களோடு உபயகட் செவியாகிய இராகு (அல்லது) கேது கூடியிருந்தாலும், அம்பனை நெருப்புப்பட்டு எரிந்துவிடும். ஆண்டு பத்துக்குள்வேண்டும் இல்லம் பூண்டில்லாமற் பாழாய்ப் போம் எ-று.

பாரென வுதயத்தானும் பனிரண்டு மெட்டிரண்டும்
சாரெனக்கோணந்தன்னிற் றங்கிடப்பிள்ளைசாவாம்
ஆமெனக் கன்னியாலே அதற்குள தனமும் நாசம்
நேரென வீமர்சொன்ன நிச்சய மறிந்துசொல்லே. 15

இ-ள். எங்கும் புகழும் லக்கினாதிபதி தங்குமிடம் இரண்டு-எட்டு-பனிரண்டு-திரிகோணமாகிய, ஒன்று-அஞ்சு-ஒன்பது- இவ்விடங்களில் எவ்விடங்களிலாவது உதயாதிபதியிருந்தால், ஜாதகனுக்குப் பிறந்த பிள்ளை யிறந்துவிடும். கொண்ட பெண்டீராலே உண்

டானதனமும்போம் என்று வீமக்கவிசொன்ன நேமகவியறிந்துதாம தமன்றிப் பூமியோர்க்குச் சொல்லுவாயாக. எ—று.

தக்கவன் செவ்வாய்ராகு சனியெட்டிற் சார்ந்து நிற்க
மிக்கவன் மனைக்குள்ளாக வியாதியும் வந்தேகொல்லும்
மக்களும் பொருளும் நாசம் வாழ்வெலாம் நாஸ்தியாகும்
மிக்கவே வீமர் சொன்ன விவரத்தை யறிந்து செப்பே. 16

இ-ள். வீமகவிசொன்னவிவரத்தையறிந்துசெப்புவது ஏதென்றால், பூனுகிய செவ்வாயும், ஈமனுகிய இராகுவும், தீமனுகிய சனியும் எட்டாமிடத்திற்கட்டாக விட்டகலாது நிற்கப்பிரந்த ஜாதகனுக்கு, மக்களும், மிக்கபொருளும், தக்கவாழ்வும், நாசமாகும். தானிருக்கும் மனைக்குள்ளாக, வல்லமையுற்ற பொல்லாத வியாதியால் நல்லோர்களையும் கொல்லாமல் விடாது. எ-று.

அஞ்சுடன் எட்டுமூன்றும் ஆறுமீராறுதன்னில்
கொஞ்சுத யம்பன்னென்றிற் கூடியே சனியும் நிற்கில்
தஞ்சமா மனைக்குத்தெற்குத் தானவன் வமிசம்போகும்
வஞ்சியிவ் விடத்தில்நிற்க மனைக்குளோன் சாவான்பாரே. 17

இ-ள். இலக்கினதிபதி - மூன்று-அஞ்சி-ஆறு-எட்டு- பனிரண்டாமிடங்களில்ஏதாவதொரிடத்திலிருக்கச் சனிபதினோராமிடத்தில் நிற்க வந்த ஜாதகனுக்குத் தான்வசிக்கும் மனைக்குத் தென்புறமிருக்கும், மனையில் வாழ்வோன் தாழ்வடைந்து வமிசமும் நாசமாய்ப்போம். அம்மனைக்குளோனும் மரணமாவான். எ-று.

வீணுள செவ்வாய்புந்தி வியத்தின்கோ ளுடனேகூடிப்
பூணுள விரண்டாரெட்டிற் பொருந்திட வஞ்சுமொன்பான்
காணுமே நாலாம்பாட்டன் கணக்கது மூன்றேசெப்பு
ஆணுமே யில்லாதாலே அலைந்தவ னல்லமாதோ. 18

இ-ள். செவ்வாய் புதன் பனிரண்டாமிடத்ததிபதியோடு கூடி, இரண்டு—அஞ்சு-ஆறு-எட்டு, ஒன்பதாமிடங்களிற் பொருந்தியிருந்தால், ஜாதகனுக்கு பாட்டன்மார்கள் மூன்று பேர்களென்று சொல்லவும், அவர்கள் ஆண்சந்ததியில்லை யென்று வீண்கவலை கொள்ளவுமில்லை. எ-று.

நல்லவர்க் கெட்டிலாறில்நற்சுபக்கோளே நிற்க
வல்லவனிரண்டாம்பாட்டன் வகையுடனிரண்டே செப்பு

அல்லது சனியுமெட்டில் அம்புலியுடனேகூடத்
தொல்லுலகத்திற் பாட்டன் தோன்றினாராறுபேரே. 19

இ-ள். ஆறு, எட்டிற் சுபக்கோள் நிற்கப் பிறந்த ஜாதகனுக்கு பேரு பெற்ற இரண்டாவதுபாட்டன்மார் இரண்டுபேருண்டென்று சொல்லவும் (அல்லது) எட்டாமிடத்திற் கெட்ட சனிபகவான் வட்டச்சந்திரனோடு கூடியிருந்தால் பாட்டன்மார் ஆறுபேருண் டென்று விண்டுரைக்கவும். எ-று.

மன்னவனுதயத்தோனும் மருவிட லாபகேந்த்ரம்
பின்னுமே யிரவி செவ்வாய் நின்றிட பிள்ளையில்லை
சொன்னதோர் மனைக்குள்ளாகச் சூனியமிருக்குமென்க
உன்னலா யாதிகாலம் ஊமையனிருந்தானென்னே. 20

இ-ள். சுக்கிரனாகிய வியாழபகவானும், லக்கினனாகிய உதயத்தோனும், உக்கிரனாகிய சூரியனும், வக்கிரனாகிய செவ்வாயுங் கூடி ஒன்று- நான்கு- ஏழு- பத்து- பதினோரா மிடங்களிலிருந்தால் புத்திர பாக்கியம் சுத்தமாயில்லையாம். மானியாகிய ஜாதகன் வசிக்கும் வீட்டுக்குள் சூனிய மிருப்பதாகவும், பூர்வகாலத்தில் பேரு பெறுத ஊமையன் இவ் வீட்டிற் குடி யிருந்ததாகச் சொல்லவும். எ-று.

எட்டென வெட்டாம் வீட்டான் இருந்திடப்பாவரோடே
மட்டெனச் சோமன் காரி மார்த்தாண்டனொன்றாய்ச் சேரப்
பொட்டென மனையே நாசம் போய்விடும் ஆண்டு எட்டிற்
சட்டெனப் போகுமென்றே சாற்றினர் வீமராமே. 21

இ-ள் எட்டுக் குடையவன் எவனோ? அவன் எட்டாமிடத்திலிருந்திட அத்துடன் துட்டராகிய பாவர்களோடே சந்திரன் சனி சவிதாவாகிய சூரியன் இவர்களொன்றாய்ச் சேரப் பிறந்தோனுக்கு அவன் குடியிருக்கும் வீடு எட்டாண்டுக்குள் கெட்டுக் குட்டிச் சுவராய்ப்போகு மொன்று வீமகவி வாமகவியாகச் சொன்னார். எ-று

கொண்டிடுஞ் செவ்வாய் ராகுகூடியே ஏழில் நிற்கக்
கண்டிடு முலகோர்க்கெல்லாம் கடினமாய்த் தூங்கும்பாரு
விண்டிடும் புதனே பார்க்கமேல் புறத்துற்றோன் சாவான்
சண்டியாய்த் தட்டுவாணி தான் குடியிருப்பாள் மேற்கே. 22

இ-ள். ஏழாமிடத்தில் இராகுவும், செவ்வாயுங் கூடி நிற்கப் பிறந்தோனுக்குத் தூக்கம் அதிகமாம், மனையுந் தூங்கிப்போகும்

அத்துடன் புதனுஞ் சேர்ந்தால் மேல்புறத்துற்றோன் சாவான். வருணனிருக்குந் திசையில் அத்தருணம் தட்டுவாணி குடியிருப்பாள். எ-று.

சேருமே சீதனென்றாழ் சிகிகுரு சனியும் நிற்கச்
சாருமே செவ்வாய்ராகு தானிவர் தம்மைப்பார்க்கச்
சீருமே அஞ்சில்நிற்கத் தெய்வமம் மனையிற்செப்பு
வேருமே அத்துப்போகும் வீடதுபாழாய்போமே. 23

இ-ள். ஐந்தாமிடத்திற் சந்திரன் சூரியன்-கேது-வியாழன்-சனி கூடியிருக்க, இவர்களைச் செவ்வாயும் இராகுவும் இருக்கப் பார்க்கப் பிறந்தவன் வீட்டில் தெய்வம் ஒன்றுண்டு. அத்தெய்வத்தினால் சந்ததியற்று வீடும் பாழாய்ப்போகும். எ-று.

அஞ்சியே அஞ்சானென்பான் அவனுட திரிகோணத்தில்
கொஞ்சியே சுபரும்நிற்கக் குழவியும் நாசமாகும்
வஞ்சியே பாட்டன்மூனும் வாழ்ந்தனர் நால்வரென்று
கஞ்சமாமுகத்தினாளே கழறினர் வீமர்தாமே. 24

இ-ள். வண்டுகள் கொண்டாடித்துத் தேனை யுண்ணுந் தண்டாமரைபோன்ற முகத்தினாளே! வீமகவி வாமகவியாகச் சொன்னதைக் கேட்பாயாக. அஞ்சு, ஒன்பதுக்குடையோர் இருக்கும் ஸ்தானத்துக்குத் திரிகோணமாகிய ஒன்று. அஞ்சு-ஒன்பதில் சுபக்கோள் நின்றால், அக்குழந்தை பிறந்தும் பூமியிற் பொருந்தாது பாலருந்தாது சிலநாள் வருந்தாது இறந்துபோகும். பாட்டன்மார் நால்வர் வீட்டில் அவர்கள் பாட்டில் தாட்டிகமாக வாழ்ந்தார்களென்று சொல்லவும் எ-று.

ஐயமேனுங்கள் வீட்டில் அருமையா யின்னங்கேளு
உய்யவேலங்கினத்தில் உக்கிரன் நிற்க வேசித்
தையலுங் குடியிருப்பாள் சந்ததி மட்டாமென்க
வையமே நகைக்கச் செய்யும் வாழ்வதி சயமுமாமே. 25

இ-ள். லக்கினத்தில் உக்கிரனாகிய இராகு நிற்கப் பிறந்த ஜாதகனுக்கு முக்கியமாய்ச் சொல்வதைக் கேட்பாய் பெண்ணே! சந்தேகப் படவேண்டாம். அவன் வீட்டில் தட்டுவாணி குடியிருப்பாள். சந்ததிமட்டாம். எந்தநேரமும் வீட்டில் வந்தபேருடன் சந்தோஷமாய்ப் பேசாது சண்டைக் கிழித்துக் கண்டோர் நகைக்க வாழ்வது அதிசயமாக இருக்கும் எ-று.

பேசிடும் நாலாமாதி பெலத்திரி கோணமேறில்
காசியாத்திரையே போவான் கணக்கனும் பார்வையுற்ருல்
தேசமும் சுற்றி மன்னன் திசையெட்டும் பேருமோங்க
வாசமாயிருக்கப்பூவில் வணங்குவாரிவரைத்தானே 26

இ-ள். நாலுக்குடையவன் பெலத்து ஒன்று- அஞ்சு - ஒன்பதி லிருக்கப் புதன்பார்க்கப் பிறந்தோன் காசியாத்திரை போவான். பலதேசங்களுஞ் சுற்றுவான். பின்பு தானிருக்குந் தாவளம் வந்து யாவருந் தன்னை வணங்கப் பூமியில் சாமியைப்போலே வாழ்ந் திருப்பான் எ-று

ஆகுமிரவி சனிபுந்தி யரத்தன் கூடிப் பாவர்மனை
வாகு பெறவே யிருந்தாலும் மனையைத் தோர்பன் தப்பாமற்
மேகுமனையி லிருந்தோர்கள் வெருண்டே செல்வார் தங்காது
பாகுமனையே பாழாகும் பரிந்து நாலாமிடந்தனிலே. 27

இ-ள். நாலாமிடத்தில ஏழ்பரியோனாகிய சூரியன் சனி புதன்- செவ்வாய்-இவர்கள் கூடிபாவமனையிலிருந்தால், ஜாதகன் தப்பாமல் மனையைத தோற்பான் அம்மனையி லிருந்தவர்கள் தங்காது எங்கா வது செல்வார்கள். மனையும் பாழாகும் எ-று.

ஆகிய இரண்டு மூன்றில் அரவமும் அரசன் நின்ருல்
தாகிய தகப்பனோடு சகோதர மெட்டன் றூது
ஏகியதெல்லாம் நாஸ்தி யிருப்பது ரெண்டே சொல்லு
வாகிய தாயாருக்கு வாயது ஊமையாமே. 28

இ—ள் இரண்டாமிடம் -மூன்றுமிடத்தில் தண்டாகிய இராகு வும், தொண்டாகிய வியாழனுங் கூடிநின்ருல் ஜாதகன் தகப்பனோடு கூடப்பிரந்த சகோதரர்கள் எட்டு. அதிற்போனதுபோக இப்போ திருப்பது இரண்டென்று சொல்லவும். மாதாஊமையாவாள் எ-று

காணலங்கினத்திற்செவ்வாய் கரும்பாம்பு மதியும் நின்ருல்
மாணலாம்|வீட்டுக்குள்ளே வமிசமும் அஞ்சதாகும்
கோணலா மிரண்டுபேர்குக் குழவியுமில்லை பின்பு
பேணலா மொருவனுக்குப் பெண்டிரண்டு சொல்லே. 29

இ-ள் லக்கினத்தில் வக்கிரனாகிய செவ்வாய் இராகு சந்திரன் இம்மூவருஞ் சேர்ந்து நிற்க, அம்மனையில் அஞ்சுபேரிருப்பார்கள். அதில் இரண்டுபேருக்குப் புத்திரப்பேரில்லை. |ஒருவனுக்குப் பெண் குழந்தை இரண்டிருக்குமென்று சொல்லவும் எ-று.

சொல்வது ரெண்டாமாதி சூரியனுடனே கூட
நல்ல செவ்வாய்பார்க்க நயம்பெற மாட்டாதென்பர்
அல்லது அஞ்சாரில்லை மாகிலும் பணம்சேராது
மல்லது கியாதிபெற்ற மனையென வழுததுவாயே. 30

இ-ள். சொல்லுதற்கரிய நேத்திரஸ்தானாதிபதி மார்த்தாண்டனாகியசூரியனுடன் நாலாமிடத்திற்கூட, அவர்களைச் செவ்வாய் பார்க்கப் பிறந்த ஜாதகன் நன்மையடைய மாட்டான். அஞ்சாறு மனையிருந்தும் மிஞ்சாது பணங்கள். கொஞ்சமேனும் சுகமில்லை ஆண்டுமுடிந்த மனையானதால் பாண்டலடையும் என்று சொல்லவும் எ-று.

ஆகிய மனைக்குள்ளாக அம்மிதா னிரண்டென்க
ஊகிய உலக்கைமூன்று முரலுங்குந் தாணிரெண்டாம்
கூகிய மனையில்ரெண்டு குழியது குணமாய்த்தோன்றும்
ஏகிய சூனியங்கள் இருக்குமென் றியம்பலாமே. 31

இ-ள். அவ்வீட்டுக்குள்ளாக அம்மி இரண்டு, உலக்கைமூன்று உரல்-குந்தாணி இரண்டு, குழி யிரண்டு இவைகளெல்லாமிருக்கும் அம்மனையில் சூனியம் வைத்திருப்பார்களென்று சொல்லவும் எ-று.

உரைக்கவே யின்னங்கேளு ஒன்பதிற் சனிபொன்நிற்க
விரைக்கவே யிவன் தகப்பன் வெருகெனும் பூனைகொன்றான்
நிரைக்கவேபசுவுங்காட்டில் நீள்பயிர் தன்னை மேயப்
புரைக்கவே அடித்ததோஷம் புத்திரரில்லைதானே. 32

இ-ள். ஒன்பதாமிடத்தில் அன்புற்ற குருவும், இன்பற்றசனியுங் கூடியிருந்த ஜாதகன் தகப்பன் பூனையைக்கொல்லுவான். இதுவுமன்றி காட்டில் பயிரைத்தின்ற பசுமாட்டை ஒட்டிவிடாமல் வாட்டமுறவடித்தான். அத்தோஷத்தினாலே புத்திரரில்லையாம்எ-று.

இருக்கப் பாவருடன் கூடியேழில் அஞ்சில் குருசனியும்
பெருக்கமாக நின்றுக் காற்பேணிச்சொல்லே ஒரு பாலன்
உருக்கமாகத் தகப்பனுக்கே உற்ற கருமஞ் செய்யானே
திருக்க தாகவேறொருவன் செய்வான் கருமமெனச் சொல்லே.

இ-ள். குருவுஞ் சனியும் பாவருடன் கூடி அஞ்சு, அல்லது ஏழாமிடத்தில் நிற்க, ஜாதகனுக்கு ஒருபாலனுண்டாம். அப்பாலன் பெற்ற தகப்பனுக்கு உற்றகருமஞ் செய்யமாட்டான், விட்டதுறை

தொட்டகுறையால் மற்றொருவன் கருமஞ் செய்வானென்று சொல்லவும் எ-று.

மந்திரிகணக்கனேழில் மன்னவன் வெய்யோன்சேர்ந்து
வந்திடக் கரியபாம்பு வகையுடன் லாபமேறில்
விந்தையாய் மனைக்குத்தெற்கு வீதியுஞ் சந்துமுண்டாம்
சுந்தர மனைக்குக்கீழ்பால் சுகமிலா மனையேசொல்வாய். 34

இ-ள். ஏழாமிடத்தில் வியாழன் - புதன்-செவ்வாய் - சூரியன் சேர்ந்திருக்க, பதினோராமிடத்தில் இராகு நிற்கப் பிறந்த ஜாதகன் மனைக்குத் தென்புறம் வீதியுஞ் சந்தும் உண்டாம், கீழ்புற மிருக்கும் மனை சுகமில்லை யென்று சொல்லவும் எ-று.

அஞ்சாமிடத்திற்கரும்பாம்பு அணுகி யிருக்கமகவில்லை
கொஞ்சம் பாவக்கோளுடனே கூடி யிருக்கமகவில்லை
வஞ்சஞ் செய்யவயிறெறிந்து மாதாசொன்ன சாபமதாம்
தஞ்சமாக வதனுலேசாற்றும் பாலரிலை யென்னே 35

இ-ள். பெற்ற மாதாவுக்குற்ற உணவு போடாமல் குற்றம் பாராட்டிச் சற்றும் பாராமலிருக்கப் பெற்றவன் வயிறு தீயாய்ப் பற்றி யெரியச் சீற்றங்கொண்டு சாபமிட்டதினாலும், பாவங்கேட்களும், இராகுவும் அஞ்சாமிடத்தி லிருப்பதினாலும், ஜாதகனுக்குமகவில்லை என்று சொல்லவும் எ-று.

சொல்லதோ ரைந்தில்ராகு சூரியன் சனியுங்கூட
நல்லதோர் செவ்வாய்பார்க்க நயமிலை மகவுந்துஷ்டன்
அல்லதோர் நெய்வான்பிள்ளை யாகுமா யிழையேநீயும்
வல்லதோர் முனிவர்சொன்ன வாறுகண்டறிந்துசொல்லே.

இ-ள். புத்திரத்தானத்தில் இராகு சூரியன் சனிமூவரும் கூடியிருக்க அத்தானத்தைச் செவ்வாய் பார்க்க நன்மையில்லையாம், பிறந்திருந்தாலும், துஷ்டப்பிள்ளையாம் (அல்லது) நெசவுநெய்யும் பிள்ளையாம், ஆயிழையே நீயும் முனிவர் சொன்னவாறு கண்டறிந்து சொல்லுவாய் எ-று.

ஆறினிற் குருவும்புந்தி யம்புலி யவளேச்சாரிற்
சேறிலாப்பிறந்தபிள்ளை செட்டிக்கே பிறந்ததாகும்
பாறிலா தவரஞ்சேரிற் பாப்பானுக் கீன்றபிள்ளை
கூறிலா தீரெட்டாண்டிற் கொண்டுமே போவசனேமன். 37

இ-ள். ஜாதகிக்கு ஆறுமிடத்திற் குருவும் புதனும் சந்திரனும் கூடியிருக்கில், அவள் செட்டியைச்சேர்ந்து பெற்ற பிள்ளையாம்

அவராகிய இராகுசேரில் பாப்பானுக்குப் பெற்ற பிள்ளையாம். அப் பிள்ளையை யீரெட்டாண்டில் ஏமன் தன்னூர்க்கு அழைத்துக் கொள்ளுவான் எ-று.

தோற்றிடு கேந்திரத்திற் சூரியன் புந்திகூடில்
சாற்றிடு மனைக்கு நல்லாண் சந்ததி யிரண்டேசொல்லு
போற்றிடு பாவர்சேரிற் புத்துமே யிருந்த வீடாம்
தேற்றியே வாழுமென்று செப்பினர் கணிதவல்லோர். 38

இ-ள். ஒன்று-நான்கு-ஏழு - பத்தாகிய கேந்திரத்தானத்தில் சூரியன்-புதன்-சேர்ந்திருக்கில் ஜாதகனுக்கு இரண்டு புத்திருண்டென்று சொல்லவும். அத்துடன் பாலர்கள் சேரில் அவன் மனையில்லை, பாம்புப்புத்துவளர்ந்திருந்த வீடாகும். ஆகையால் அம்மனையில் சும்மாயிருந்து சுகமாய் வாழலாமென்று சொல்லவும் எ-று-

வணங்கியே காலாமாதி மன்னவன் சுங்கன்சேரில்
இணங்கியே ஆறுமெட்டும் யீராறிருந்தாரேனும்
அணங்குளதாரம் ரெண்டு அண்ணவன் செய்து கொள்வான்
பணங்களுஞ் சேதமாகிப் பாரிற் பின்றங்குமுன்னே. 39

இ-ள். சுகாதிபதியும், சுக்கிரனும் சுரர்குருவுஞ் சேர்ந்து ஆறு எட்டுப்பன்னிரண்டாமிடத்திலிருந்தால் ஜாதகன் இரண்டுதாரம்கலியாணஞ் செய்வான், திரவியஞ் சேதமாகிப் பின் தங்குமெனச் சொல்லுவாயாக எ-று.

ஆறுமிடத்திலப் புலியும் அமர்ந்து பாவருடன்கூடிக்
கூறுயிருக்கத் தென்புரத்திற் குல்வுந்தெய்வம் விளங்காது
ஆறுமனையும் நாஸ்தியதாம் அடியோடத்துப்போகுமது
சேறுமனையுஞ் சேர்ந்ததினாற் சேயும் விளங்காதெனச்செப்பே.

இ-ள். சட்டமத்திற் சந்திரனும் பாவக்கோளுடன் கூடியிருந்தால், ஜாதகன் மனைக்குத் தென்புரத்தில் ஒருதெய்வம்உண்டு. அதனாற் பிரகாசிக்கப்பட மாட்டாது. ஆறுமனையும் அடியோடத்துப் போகும். சேறுமனையுஞ் சேர்ந்ததினால் சேயும் விளங்கா தெனச் செப்பே என்றார் வீமகவி எ-று.

வே று.

சொல்லதோர் சோமலக்கினத்ததிபன்
தோன்றிய கேந்திரமேற
வல்லதோரிராகு இருந்திடநோக்க
வருந்திட தென்வடவீதி

நல்லதோர் குருவுஞ்சோமனைப்பார்க்க
நடையது கிழக்கதாமென்று
துல்லபமாகச் சொல்லினர் வீமர்
சோதிடவழி யரிந்துரையே. 41

இ-ள். 12-ராசிகளில் எந்த ராசியில் சந்திர னிருக்கின்றானோ அந்தலக்கினமே சந்திரலக்கினம். அந்தவீட்டதிபன் ஒன்று. நான்கு ஏழு-பத்தாமிடமாகிய மகேந்திரஸ்தானமேயிருக்க, அவனை இராகு சேர்ந்தாலும் (அல்லது பார்த்தாலும், ஜாதகன் பிறந்தவீதி தென் வடவீதியென்று, அச்சந்திரனைக் குருபார்த்தால் நடையானது கிழக்கே யிருக்குமென்றும் வீமகவி சொன்னபடி நீயும் வழியரிந்து சொல்லவும் எ-று.

மானவர் தமக்கு ஜென்மத்தில்
ராகுவந்திடப் பானுவும் பார்க்க
ஊனமா மனிதன் ஒருவனு மிருப்பான்
ஊணது கனிவகை யுணவு
தானமாமிரவி தன்னுடனிராகு
சம்மந்தப்பட்டுமே யிருக்க
ஊணமா மனிதன் உண்ணுமோர்கனிக
ளுயர்கனி யென்று தானுரையே. 42

இ-ள். உலகத்திலுதித்த மானவர்களுக்கு ஜென்மலக்கினத்தில் இராகு விருக்க, அதைச்சூரியன் பார்க்க, அப்பேர்பெற்றவன் வீட்டில் அங்கம் ஊனமுற்றவன் ஒருவனிருப்பான். அவன் கனிவகைகளை யுண்பான். இராகுஞ் சூரியனும் ஒன்றுசேர்ந்திருந்தால் உயர்வான கனிவர்க்கங்களை உண்பானென்று சொல்லவும் எ-று.

உயர்கனி யெலுமிச்சங்கனி யென்பார்
ஒள்ளியோன் புதனிரண்டாதி
பெயர்களுஞ்சேர வீட்டில் வந்தவாகள்
பின் சென்று நவந்து நீராடி
துயரிலாச்சோமன் புதன்றனைப் பார்க்கச்
சொல்லுவாய் கிழக்குமேற் சந்து
அயர்விலாதிருப்பன் வீரியம்பேசு
மதிபதி யென்றனர் வீமர். 43

இ-ள். உலகத்தில்உயர்தரமான கதலி-மா-பலா முதலிய அநேகங்கனி வகைகளிருக்க, எலுமிச்சங்கனி யென்றார். இந்நூலதிபர்.

அதுவும் ஒரு மேன்மையே. ஏனென்றால், தற்காலத்தில், அரசர்களையும், மேலான ஞானிகளையும், உத்தியோக அதிகாரிகளையும், கோடீஸ்வரப் பிரபுக்களையும், கண்டு பேசப்போகுங்கால் இதுவே முன்வந்து நிற்கும். ஆகையால் முக்கனிக்கும், எக்கனிக்கும் மேலானது இக்கனியே என்றார் நூலாசிரியர். இது நிற்க, சுக்கிரன்-புதன் இரண்டாமிடத்ததிபதி இவர்கள் ஒன்று சேர்ந்திருந்தால் ஜாதகன் வீட்டிலுள்ளவர்களும், வந்தவர்களும், நீராடிச் சுசிகரமா யிருப்பார்கள், சந்திரன் புதனைப்பார்த்தால் கிழமேலோடிய சந்து அதிபதி வீரியப்பேசுவான் என்று சொன்னார் வீமகவி எ-று.

வீமனும்பலனைச் சொல்லவே கேளும்
விளங்கிய ராகுவுஞ் சென்மம்
காமனுஞ் சோமன் மூவருங் கூடிக்
கலந்துடனிரவியே பார்க்க
பூமனு மொருவன் இழந்துமே போன
பூஸ்திதி வருகுமே யென்று
நேமமாமிரண்டாந்தாரந் வாழ் வீட்டில்
நேர்மையாய் யிருப்பனென்றுரையே. 44

இ-ள். சுக்கிரனும், உக்கிரனாகிய இராகுவும், வக்கிரனாகிய சந்திரனும், இம்மூவரும் ஜென்ம லக்கினத்திலிருக்க, சூரியன் பார்க்க, முன்னோர்தேடிய பூஸ்திதி, இழந்தபொருள், இவையெல்லாம் இச்சாதகனுக்கு கைவசம் வந்து சேரும். இரண்டு பெண்களைப்பார்த்து இரண்டுதாரம் கலியாணஞ் செய்வான். இளையதாரத்தின் வீட்டில் சதாவாழ்ந்திருப்பானென்று சொல்லவும் எ-று.

வேறு.

இருப்பதோ ரிலக்கினாதி யிரவியுஞ் சேயுங்கூடி
மருப்படச் சேர்ந்துநின்றால் மாதரால் வியாதிநேரும்
விருப்புடன் பங்குபாதன் மேவியங் கிருப்பானாகில்
நெருப்பெனகிலேசமுற்றே நெடும்பகை யென்றுசொல்லே. ,

இ-ள். எப்பொழுதும் இருப்பதாயிருக்கின்ற லக்கினாதிபதியும் இரவியாகிய சூரியனும், சேயாகிய செவ்வாயுங் கூடியிருந்தால் ஜாதகனுக்கு மாதர்களால் வியாதிவரும். அம்மூவருடன் பங்குபாதனாகிய சனிபகவானும் சேர்ந்திருந்தால் மாறாக்கிலேசமும் தீராப் பகையும் உண்டாயிருக்குமென்று சொல்லவும் எ-று

சொல்லிய ராகுசோமன் சோதியும் கூடி நிற்க
அல்லாலோன் நின்றராசி யாங்குறச் சரமே யானல்
நல்லதோர் கீழ்மேல்வீதி நாட்டமாந்தெற்குவாசல்
சல்லியன் கூடச்சேரிற் றனித்தவ னிருப்பான் வீட்டில். 46

இ-ள். சரராசியாகிய மேட கடகதுலா மகரராசிகளில் சந்திரனிருக்க அவனோடு சூரியனும், இராகுவுங் கூடியிருக்க ஜாதகன் பிறந்த வீதி கிழமேல்வீதி தெற்கு வாசலுள்ள வீடென்று சொல்லவும். அவர்களோடு சல்லியனுகிய சுக்கிரன் சேரில் பெண்டு பிள்ளையில்லாது ஒண்டி யொருவனுய்த் தனித்து வீட்டில் வசிப்பன் எ-று.

வீமனுர் சொன்ன நூலில் விளங்கிய காரியாதி
சோமனுர் லக்கினத்திற் சூரியனிருவர்கூடக்
காமனுர் பத்திற்சேரக் கழறுவாய் மனைகிழக்கு
நேமனுர் கறுப்பாமென்றே நிர்ணயஞ் சொன்னுர் தாமே. 47

இ-ள். வீமகவி நேமமர்கச் சொன்ன நூற்பிரகாரம் சொல்லுவோமாக, சந்திரனிருந்த லக்கினத்துக்குக் காரியஸ் தானுதிபதி எவனே அவனும் சூரியனும் கூடியிருக்க லக்கினத்துக்குப் பத்திற் சுக்கிரனிருக்க ஜாதகன் பிறந்த மனை கிழக்காகும் அவனும் கருப்பு நிறமுள்ளவனுக இருப்பனென்று சொல்லவும் எ-று.

சொன்னதோர் தானத்தாதி சுங்கனுங் குருவுஞ்சோமன்
வன்னமா மூவர்மூன்றில் வந்துதான் வருவி நிற்கத்
தன்னந்தான் சகோதரங்கள் சாற்றிட நான்கதாகும்
இன்னந் தானுச்சம் பெற்ற லிவற்கிலையுடற் பிறப்பே. 48

இ-ள். சகோதரஸ்தானுதிபதியோடு சுக்கிரனும், வியாழனும், சந்திரனும், இம்மூவரும் சேர்ந்திருக்கும் ஜாதகனுக்குநான்கு சகோதர முண்டென்று சொல்லவும், இவர்களில் யாராவது உச்சம் பெற்றிருந்தால் உடற்பிறப்பு இல்லை யென்று சொல்லுவாயாக எ-று.

இல்லெனச் சோமன் காரியிருள்வலி மூவர்கூடில்
வல்லெனச் சேயும் பாராதிருக்கினும் மலடிசேர்வாள்
புல்லெனப் புசித்தசாதம் பெண்சாதி போடவில்லை
சொல்லென வீமர்சொன்ன சூட்சங்க ளறிந்துபாரே. 49

இ-ள். சந்திரன்-சனி-சூரியன்- இம் மூவரும், ஒன்று சேர்ந்திருக்க, அவர்களைச் செவ்வாய் பாராதிருக்கில் ஜாதகன் மலடியைச் சேருவன். இணக்கமில்லாத பெண்சாதி குணக்கேடா யிருப்பதால்

அன்னம்போட முன்னம் வரமாட்டாள். இதைச் சூட்சமறிந்து வீமகவி சொன்னதை நாமதமன்றித் தெரிந்து நாலத்தோர்க்குச் சொல்லுவாயாக எ-று.

பாரெனக் குருவுஞ் சுங்கன் பார்வையா யுறவதாகில்
சீரெனப் பிதாவின் வர்க்கஞ் சேர்ந்தமோ ரைந்துண்டென்றும்
ஆரெனப் பாக்கியாதி யட்டமந் தன்னில் நின்றால்
வீரென நிலைத்த மன்னன் மூன்றெனவ வீமர் சொன்னர். 50

இ-ள். மேலே சொன்னவர்களைக் குருவாவது சுங்கிரனாவது பார்க்க. அவர்களும்நட்பாக இருக்கில் ஜாதகன்தந்தையுடன் கூடப் பிறந்தவர்கள் ஐந்துபேரென்றும், ஒன்பதுக்குடையவன் எட்டிலிருந்தால் நினைத்திருப்பவர்கள் மூன்றுபேரென்றும் வீமகவிசொன்னதைச் சொல்லவும் எ-று.

சொல்லிய லக்கினாதி சுடர்மதி தோன்றி நிற்க
நல்லவர் கூடித்தானும் நாடியேபார்த்தாராகில்
மெல்லெனச் சகோதரங்கள் வேசையா யிருப்பாளென்றும்
வல்லபமாக வீமர் வழுத்திய நூலைப்பாரே. 51

இ-ள். இலக்கினாதிபதி சூரியன் சந்திரன் இம் மூவரோடு சுபர்கள் கூடினாலும், பார்த்தாலும், ஜாதகன் சகோதரி வேசையாயிருப்பாளென்று வீமகவி சொன்னதை பூமியிலுள்ளோருக்குத் தாமதமன்றிச் சொல்லுவாயாக எ-று.

சீரென எட்டீராறிற் சேர்ந்ததோர் தானந்தன்னில்
நாரெனச் சோமன்றானும் நாலிரண்டிடத்தில் நிற்கக்
காரெனக் குழலாள் சாவள் கருதிடும் புதல்வரில்லை
வீரெனக் குஷ்டரோகம் விளம்பினர் வீமர்தானே. 52

இ-ள். எட்டு பனிரெண்டாமிடத்தில் வட்டச்சந்திரனும்,நாலாமிடத்தோனும் கூடியிருக்க, ஜாதகன்கொண்ட மனைவியைக்கூற்றன் கொண்டு போவான், அதனால், பெண்டாட்டியும் பிள்ளைகளும், உண்டோவென்றுகேட்டால் இரண்டும் இல்லை யென்று சொல்லி விடுவாய். குஷ்டரோகவியாதியால் கஷ்டமடையாளென்று வீமகவி சொன்னதை சொல்லுவாயாக எ-று,

தானெனச் சொல்லக்கேளு சாற்றிய வீமர்நூலைத்
தேனெனக் கேந்திரத்திற் சிதன் புதனாவங் கூடில்
மேனென வுச்சகோணம் மேவியே பார்த்தாராகில்
ஊனென ஒருகண்ணில்லா தொருவனாயிருப்பான்மாதே. 53

இ-ள். கேந்திர ஸ்தானமாகிய ஒன்று-நான்கு-ஏழு-பத்து, இவ் விடங்களில் சுக்கிரனும், புதனும், இராகுவுங் கூடியிருக்க, அவர் களை உச்சமான கிரகமாவது, லக்கினத்துக்குத் திரிகோணுதிபதியா வது பார்த்தாராகில் ஜாதகன் ஒரு கண் ணில்லாதவனாக இருப்பன் எ - று.

பாரென்று சொன்ன போது பாக்கிய ஸ்தானந் தன்னிற்
சாரென்று குருவி னோட சந்திரன் பகைத்து நின்றால்
வாரென்று கேட்ட பேர்க்கு மாமனார் வீட்டிற் சேர்வான்
கூறென்று வீமர் சொன்ன குறிதப்பா தென்று கூறே. 54

இ-ள். ஒன்பதாமிடமாகிய பாக்கிய ஸ்தானத்தில், அன்பான குருவும், இன்பமான சந்திரனும், கூடிப் பகைத்து நின்றால், உன் முன்பு வந்து கேட்பவருக்கு நன்புள்ள ஜாதகன் மாமனார் வீடு போய்ச் சேர்ந்து வாழ்ந்திருப்பா னென்று வீமர் சொன்ன குறி தப்பாதென்று பெண்ணே சொல்லுவாயாக எ-று.

வேறு

நன்னிய லக்கி னத்தோ னாட்சியே லரச சாதி
வின்னமில் காரி புந்தி விஷ்ணுவின் சாதி யென்பார்
பொன்னனுங் கூடி நின்றால் பூணூலுக் கார னென்க
மின்னுறு வியாழன் புந்தி மேவிட விஸ்வ னாமே. 55

இ-ள். இக்குவலயத்தோர்க்கு லக்கினாதிபதி ஆட்சியா யிருக்கு மாகில், ஜாதகன் க்ஷத்திரிய சாதியாம். இலக்கினாதி புதன் சனி யாகி சொட்சேத்திரம் பெற்றிருந்தால் வைணவ சாதியாம். வியாழ பகவானோடு லக்கினாதி சேர்ந்திருந்தால் பூணூல் போடும் சாதியா ரென்க. வியாழ பகவானும், புத பகவானும் லக்கினாதிபதியோடு கூடியிருக்க, விஸ்வப் பிராமண சாதியாம் எ-று.

வேறு

காணலாம் ராகு வாலே கல்லுக ளறிந்து சொல்லு
காணலாம் கேது வாலே கரியுமி யெலும்பு சொல்லு
காணலாஞ் சுங்க னாலே களத்திர சோரஞ் சொல்லு
காணலாங் கதிரோ னாலே காட்டிடும் அடுக்குத் தானே. 56

இ-ள். இராகு இருக்கும் இடத்தைக் கொண்டே கல்லுக ளறிந்தும், கேதுவிருக்கும் இடத்தைக் கொண்டே கரியும், உமியும், எலும்பும் தெரிந்தும், சுக்கிர னிருக்கும் இடத்தைக் கொண்டே

களத்திர சோரமும், சூரிய னிருக்கும் இடத்தைக் கொண்டே அடுக்குப் பானைகளைப் பற்றிச் சொல்லவும் எ-று.

அன்னமே செவ்வாயாலே அக்கினிற் றவசஞ் சொல்லு
சன்னமாஞ் சசியினாலே தன்னுட ராசி சொல்லு
வின்னவாம் வெள்ளியாலே விளைநிலம் பூமி சொல்லு
தன்னருட் குருவினாலே சந்ததி யறிந்து சொல்லே. 57

இ-ள். அன்னநடையும், வன்னவுடையும், பின்னல் சடையும், கன்னல் மொழியுமுடைய பெண்ணே! செவ்வா யிருக்குமிடத்தைக் கொண்டே அடுக்குகளிலிருக்கும் தவசங்களைச் சொல்லவும். சந்திர னிருக்கும் இடத்தைக் கொண்டே ஜாதகனுடைய ராசியைச் சாற்ற வும். சுக்கிரனாலே விளைகின்ற பூமியையும், குருவினாலே சந்ததி களையும் பற்றிச் சொல்லுவாயாக எ-று.

வேறு

காணும் லக்கினங் கண்டமேழ் பத்தினிற்
பூணுஞ் சுக்கிரன் புந்தியி ருந்திடில்
தோணும் மற்றக் கிரகங்கள் தோஷங்கள்
பானு கண்ட பனிப்போலே நீங்குமே. 58

இ-ள். பூதலத்திற் பிறந்த ஜாதகர்களுக்கு லக்கினம் கண்ட மாகிய நாலு-ஏழு-பத்து இத்தானங்களில் நத்திரனாகிய சுக்கிரனா வது சித்திரனாகிய புதனாவது இருப்பார்களாகில், பட்சி தோஷம், பறவை தோஷம், எட்சி தோஷம், தேரை தோஷம், குளி தோஷம், புருஷ தோஷம், பெண் தோஷம், முட்டு தோஷம், கரு வழிந்த தோஷம், பாலாரிஷ்ட தோஷம் முதலியன சூரியனைக் கண்ட பனி யைப்போல விலகிவிடும் எ-று.

வேறு

எட்டுடன் பதினொன் றஞ்சில் இருந்தவனுச்சம் பெற்றால்
மட்டமாம் ஏழுபத்து வயதினிற் கண்டஞ்சொல்லு
திட்டமா மெட்டாமாதம் தீப்படு மில்லந்தன்னில்
கட்டமாமென்று வீமர் கழறினார் கண்டுபாரே. 59

இ-ள். இலக்கினத்துக்கு எட்டு-பதினொன்று அஞ்சு இத்தா னங்களில் இருந்தவர்கள் உச்சம் பெற்று அச்ச மில்லா திருந்தால், ஜாதகன் வசிக்கும் வீடு எட்டு மாதத்தில் தீப் பட்டு வெந்துவிடு

மென்றும், ஜாதகனுக்கு ஏழு பத்து ஆண்டுகளில் தெய்வத்தை வேண்டியிருந்தாலும் கண்டம் உண்டென்று சொல்லவும் எ-று.

காரிகட் செவியுமொன்றாய்க் கலந்தெட்டுப் பத்தில்நிற்கப்
பேரியல் புந்திராகு பெருமையா யாரிற்சேர
வீரிய தகப்பன்றானும் வீணிலே போவான்பாரு
சாரியாம் நாலாமாதந் தான்வருங் கண்டமென்பார். 60

இ-ள். காரியாகிய சனியும், கட்செவியாகிய பாம்பும் ஒன்று சேர்ந்து எட்டுப் பத்தா மிடத்தில் நிற்கினும், புதனும், இராகுவும் பொறுமையாய் ஆறா மிடத்தி லிருந்தாலும், ஜாதகன் தந்தை யாதொரு பயனு மில்லாமற் பரதேசம் போவான் பாரு. ஜாதகனுக்கு நாலாமாதம் கண்டம் வருமென்று விண்டுரைப்பாயாக எ-று.

சுக்கிரனுடனே புந்தி தோன்றியே நிற்குமாகில்
பக்குவமான பெண்ணும் பாவையைச் சேர்ந்தும்பாரில்
மக்களுமில்லை மன்னன் மகராஜனாக வாழ்வான்
தக்கதோர் சனியும் நின்றால் சகோதர முண்டாஞ்சொல்லே.

இ-ள். சுக்கிரனும், புதனும் எட்டா மிடம் பத்தா மிடங்களி லிருந்தால், நல்ல அழகுள்ள பெண்ணைச் சேர்ந்திருந்தும் புத்திர பாக்கியமில்லையாம். மன்னன் மகராஜனாக வாழ்வான். அததுடன் சனி சேர்ந்திருந்தால் சகோதரமுண்டென்று சொல்லவும் எ-று.

சந்திரன் மூன்றுநாலிற் சனியுடன் நின்றாரேனும்
பிந்திமா லெட்டில் நிற்கப் பிறந்தவன் சாவான்பாரு
சந்ததி யற்றுப்போகும் தாய்க்குமே கண்டஞ்சொல்லு
மந்தனாஞ் சனியினாலே மாள்வது நிசமென்றோதே. 62

இ-ள். சனியும், சந்திரனும் ஒன்று சேர்ந்து மூன்றா மிடம் நான்கா மிடத்தில் நின்றாலும், புதன் எட்டாமிடத்தி லிருந்தாலும், பிறந்த ஜாதகன் இறந்து போவான். சந்ததி யற்றுப் போகும். தாய்க்குமே கண்டஞ் சொல்லு. மந்தனாகிய சனியினாலே இந்த விதம் வந்ததென்று உண்மையை உரைப்பாயாக எ-று.

ஆறுடன் மூன்று நாலில் அதற்கு மூன் றெட்டுப்பத்தில்
பேறுடன் சனியுஞ் சேயும் பெருமையாய் நின்றாராகில்
மாறுடன் சகோதரத்தை வணங்கியே யிஷ்டஞ் செய்வான்
வீறுடன் மூன்று மாதம் வீவது மனையா ளென்பார். 63

இ-ள். மூன்று- ஆறு-நாலா மிடங்களில் செவ்வாயும், சனியும் சேர்ந்திருந்தாலும், அந்தந்தத் தானங்களுக்கு அதற்கு மூன்று

எட்டு-பத்தாவது தானங்களில் மேற்படி சனியும், செவ்வாயுங்கூடித் தாமிருந்தாலும், ஜாதகன் தன்னுடன் பிறந்த சகோதரத்தை இணங்கி வணங்கி யிஷ்டஞ் செய்வான், மணஞ் செய்த மூன்று மாதம், மனையாளும் மரணமாவாளென்று வழுத்துவாயாக எ-று.

அஞ்சுடன் ஏழு பத்தில் அனுவழி தனித்து நின்றால்
கொஞ்சிடுந் தாயார் தந்தை குணமிலை பிணக்கதாகும்
வஞ்சியே தாயாருக்கு மனதினிற் கலக்கஞ் சொல்லு
தஞ்சமாந் தகப்பனாற் குத்தாழ்விலா வாழ்வுண்டாமே. 64

இ-ள். அனுவழியாகிய புதன் தனித்து அஞ்சு-ஏழு பத்தாமிடங்களில், எங்கேனுந் தங்கி நின்றால், ஜாதகனுடைய தாயுந் தந்தையும் வாயில் வந்தபடி பேசிப் பேசி ஒருவர்க்கொருவர் பிணக்காயிருப்பார்கள். ஆனால் தாய்க்கு மட்டும் மனக் கலக்கமுண்டாம். தந்தைக்குத் தாழ்வில்லாத வாழ்வுண்டாமென்று சொல்லவும் எ-று.

வேறு

மாமன் சிறுவன் தாய்தந்தை மரணம் ஐந்துமீரைந்தும்
பூமன் காரி மதிவெய்யோன் நிற்கிற் சுபரும்நோக்கி
சோமற் சேய் சனி நிற்கிற்றாய் சாஞ்சுடர்க் கேழ் பிதாமரணம்
தீமைக் கோட்களுடலுயிரைப்பற்றி நிற்கிற் சிறுவன்சாம். 65

இ-ள். ஜாதகன் உதயராசிக்கு அஞ்சாமிடம் பத்தாமிடத்தில் செவ்வாய் நிற்கில் மாமனுக்கும், சனி நிற்கில் பிள்ளைக்கும், சந்திரன் நிற்கில் மாதாவுக்கும், சூரியன் நிற்கில் பிதாவுக்கும் மரணம் உண்டென்க. சுபக் கிரகம் நோக்கில்லாத சந்திரனுக்கு ஏழாமிடத்திற் செவ்வாயாவது சனியாவது நிற்குமாகில் மாதா மரணம், சூரியனுக்கு ஏழிற் சனி, செவ்வாய் நிற்கில் பிதா மரணமென்பது, பாபக் கிரகங்கள் (உடலையும், உயிரையும்) பற்றி நிற்கில் பிள்ளை மரணம் என்று சோதிட முணர்ந்த பெரியோர்கள் மாதிடமாய்ச் சொல்லுவார்கள். (உடல்-சந்திரன் நின்ற லக்கினம். உயிர்-ஜெனித்த லக்கினம்) எ-று.

வேறு

நாலுமூன் றேழு தன்னில் நயமிலாச் சனியே நிற்கச்
சாலவே மாடு மக்கள் சம்பத்தும் நாசமாகும்
ஏலவே புதனும் நிற்க இவனுக்குத் துன்ப மில்லை
ஞாலவேற் பறைச்சி யைத்தான் சத்தியஞ் சேர்வான் பாரே. 66

இ-ள். நாலு-மூன்று-ஏழாமிடங்களில் நீலனாகிய சனிநிற்கில் ஜாதகன் வீட்டில் சகல சம்பத்தும் மாடுமக்களும் நாசமாகும் அச்சனியுடன் புதனும் சேர்ந்திருக்கில் உச்சாதகனுக்குத் துன்பமில்லையாம். ஆனால் குறைச்சலான பறைச்சியைக் கூடிச்சேர்ந்து வாழ்ந்து வருவான் எ-று.

பாறுடன் பத்து அஞ்சிற் பனிமதி யிரவிற் நிற்க
ஆறுடன் மூன்று பத்தில் அனுவழி செந்தீவண்ணன்
வீறுடன் கேது சேரில் விளங்கிடுந் தனமு முண்டாம்
சாறுடன் சனியுங் கூடச் சாதகன் மாதுர்சாமே. 67

இ-ள். பத்து-அஞ்சாமிடத்திற் பனிக்கதிராகிய சந்திரனும், பாற்கரனாகிய சூரியனும் சேர்ந்திருக்க ஆறு-மூன்று பத்தாமிடத்தில் அனுவழியாகிய புதனும், செந்தீவண்ணனாகிய செவ்வாயும் கேதுவும் ஒன்றுகூடி நின்றிருக்கில் ஜாதகன் தனவந்தனாக வாழ்ந்திருப்பான் அவர்களுடன் சனியுஞ்சேரச் சாதகன் மாதாமரணமடைவள் எ-று.

காரண மதியுஞ் சுங்கன் கலந்தஞ்சு பத்தில் நிற்க
ஆரண மறிந்த மாலும் கூவருடன் சேர்ந்து நின்றால்
சீரணந் தாயாருக்குத் தீமையே யாகுமென்றும்
மாரணம் எட்டுப் பத்து வருடத்திற் கண்டஞ் சொல்லே. 68

இ-ள். அரிச்சிகனாகிய சந்திரனும். உரிச்சிகனாகிய சுக்கிரனும் அஞ்சு-பத்தாமிடத்தில் நிற்க, அவர்களுடன் புதனுஞ் சேர்ந்திருந்தால் ஜாதகன் மாதாவுக்குத் துன்பமுண்டாகிக் கொண்டேயிருக்கும். எட்டு (அல்லது) பத்தாவது ஆண்டில் தாயாருக்கு கண்டமுண்டாமென்று சொல்லுக எ-று

சந்திரன் மூன்று நாலிற் சனியுஞ்சேய் ஏழுபத்தில்
புந்திதா னெட்டில் நிற்கப் புத்திரர் பிறந்து சாவார்
இந்துவுங் கூடிநின்றால் இருப்பிடம் நாசமாகும்
சந்தேகஞ் சற்றுமில்லை சாதகர்க் காகாதென்னே. 69

இ-ள் சந்திரன் மூன்றில் [அல்லது] நாலாமிடத்தில் நிற்க, சனியும் செவ்வாயும் ஏழாமிடம் [அல்லது] பத்தாமிடத்திலிருக்க புதன் எட்டாமிடத்தில் நிற்பாராகில், பிள்ளையும் பிறந்துசாகும் சந்திரன் கூடிநின்றால் இருப்பிடம் நாசமாகும், கொஞ்சமுஞ்சந்தேகமில்லை ஜாதகற்கு ஆகாதென்பார் எ-று

ஏழுடனெட்டிற்பத்தில் இன்பமாம் புதனுஞ்சேயும்
தாழ்விலா தாறீராறிற் சார்ந்திடத் துணைவர் நாசம்
வாழ்வுள மங்கைதானும் மலடியா யிருப்பள் பின்னும்
ஊழ்வினை சாதகற்கிங் குறுமிடராதிக முண்டே 70

இ-ள். ஏழு-எட்டு-பத்தாமிடத்திற் புதனும், ஆறு பனிரண்டாமிடத்திற் செவ்வாயும் இருக்கப்பிறந்த ஜாதகருக்குச் சகோதரர் நாசமாம், மனைவி மலடியாயிருப்பள்—தனக்குஞ் சுகமில்லை. துன்பமுண்டாயிருக்கும் எ—று.

துன்னியார் மேலேசொன்ன துட்டக்கோள் சாதகற்கு
வின்னமும் விருப்பமில்லை வேளாளன் விந்துபிள்ளை
சொன்னதோ ரிராகு செவ்வாய் சூரியன் நின்றாகில்
அன்னதோர் பிள்ளைதானும் அயலான்றன் பிள்ளையாமே. 71

இ-ள். அடுத்தோரைப்போல ஆறு பனிரண்டிற் செவ்வாயும் ஏழு-எட்டு-பத்தாமிடத்திற் புதனும், இருக்கப் பிறந்த ஜாதகன் வெள்ளாளனுக்கு ஜெனித்த குழந்தையாம். சொன்னதோர் இராகு செவ்வாய் சூரியன் இவர்கள் நின்றால் அவன் அன்னியனுக்குப்பிறந்த பிள்ளையாம் எ-று.

காணுமே யெட்டுநாலிற் காரியும் புதனும் நின்றால்
ஆணுமே யிரண்டுபெண் நாலாகியும் நோயாமென்பர்
மாணுற வயதுமெத்த வாகியே சமமாய் வாழ்வன்
காணுற மதியுஞ்சேரிற் கடன்பட்டிங் கலைவான் பாரே. 72

இ-ள். நாலு-எட்டாமிடத்தில் நீலனாகிய சனியும், மாலனாகிய புதனும், நிற்கப்பிறந்த ஜாதகற்கு, ஆண் இரண்டும், பெண் நாலும் பிறந்திருக்கும். அப்பிள்ளைகளும் சிலநாள் நோயிலழுந்தும். ஜாதகன் வயது அதிகமாக வளரும். சமமாய் வாழ்வான் அக்கோள்களுடன் சந்திரனுஞ் சேரில் கடன் பட்டலைவன் மன்க எ-று

சந்திரன் ஏழு பத்திற் றன்சனி புதனுங் கூடச்
சுந்தர மாகப் பார்க்கச் சுதனுமே மிகவு முண்டாம்
விந்தையா மவனி தன்னில் விளங்கிய பத்தா மாண்டில்
சந்தேக மில்லை கண்டஞ் சாதகற் கென்று சாற்றே. 73

இ-ள் ஏழு பத்தாமிடத்திற் சந்திரனிருக்க, அச்சந்திரனைச் சனியும் புதனுங் கூடினாலும், பார்த்தாலும் ஜாதகனுக்குப் புத்திர பாக்கியம் மெத்தவுண்டாயிருக்கும் ஆனால் பத்தாமாண்டிற் சந்த

கமில்லாமற் சாதகற்குக் கண்ட முண்டாகு மென்று சொல்லுவா யாக எ-று.

சந்திரன் மூன்றீ ராறிற் றூனுறச் சனியுஞ்சார
மந்திரி கூடி நிற்க வலது கண் பொட்டையாகும்
விந்தையா யிருக்கச் சுங்கன் மேவியே சேர்ந்து நிற்கச்
சந்ததி வேற்றானுக்கு ஜனித்ததென் றுரைக்க லாமே. 74

இ-ள். மூன்று பனிரண்டாமிடத்தில் முயற்சி கூடெனினுஞ் சந்திரனிருக்க, அவனோடு சனியுங் குருவுங் கூடி நிற்க, ஜாதகனுக்கு வலது கண் பொட்டையா யிருக்கும். மேலே சொன்ன சந்திரன் சனி குருவோடு சுக்கிரனுஞ் சேர்ந்திருப்பானாகில் சந்ததி வேறே ஒருவனுக்கு ஜனித்த குழந்தையென்று சொல்லுவாயாக எ-று.

காரியும் மதியும் நின்றால் கடுவழி நடப்பான் மிக்க
வீரியந் தானுண்டாம் வெள்ளாட்டிவங் கணமே யாகும்
நாரியா மவள் முன்னாலே நவிலுஞ் சத்தியந்தா னென்று
சீரியல் மனையா ளுக்குச் சேர்ந்தவன் செட்டியாமே. 75

இ-ள். சனியும், சந்திரனும் சம்பந்தப்பட் டிருந்தால் ஜாதகன் கடுவழி நடப்பன். வீரிய மதிகமுண்டாம், வெள்ளாட்டி சினேகமா வாள், அவளுக்கு நாமிருவரும் இணை பிரியாது ஒருவருக்கொருவர் துணையாயிருக்கலாமெனச் சத்தியமுஞ் செய்துகொடுப்பன். ஆனால் அவன் பெண்டாட்டி செட்டியைச் சேர்ந்துக் செட்டிக்காரியாய் வாழ்வள் எ-று.

புந்தியே ழெட்டில் நிற்கப் புத்திர னிரண்டு மூன்றாம்
வந்திடும் வினையாற் றுன்பம் மாறிடா தெட்டிற் பத்தில்
அந்தக னிந்து நிற்க அவனுக்கு வித்தையுண்டாம்
விந்தையாப் பத்தா மாதம் விளம்புவாய் கண்டமென்றே. 76

இ-ள். ஏழு எட்டாமிடத்தில் தாழ்விலாப் புதன் நிற்கப் புத்திரன் இரண்டு மூன்றிருக்கும். ஆனால் பொறுமையா யிருந்தாலும் வறுமையாந் துன்பம் வெறுமையை யுண்டாக்கும். பத்து எட்டில் மந்திரனாகிய சனியும் வந்திரனாகிய சந்திரனும் நிற்க, அவனுக்கு வித்தையுண்டாம். பத்தாவது மாதம் கண்ட முண்டென்று சொல்லுவாய் எ-று.

சொல்லிய மூன்றுநாலிற் சூரியன் செவ்வாய் ராகு
வல்லமை புதனும் நின்றால் வாழ்வெலாந் தாழ்வதாகும்

அல்லது இவர்கள் கேந்த்ரம் அணுகிடயுச்சம் பெற்றால்
வல்லமை அதிகமாகி வாழ்வுண்டா மென்று சொல்லே. 77

இ-ள். மூன்று நான்கா மிடத்திற் சான்றோ னாகிய சூரியனும், வன்றோனாகிய செவ்வாயும், இராகுவும் ஆன்றோனாகிய புதனுங்கூடி நிற்பாராகில், ஜாதகன் வாழ்வெல்லாந் தாழ்வாய்ப் போகும். மேலே சொல்லிய சூரியன்-செவ்வாய்-இராகு இம்மூவரும் கேந்திரத்தில் உச்சம் பெற்றிருந்தால் யாவரும் மெச்சத் தக்கபடி வல்லமை அதிகமாகி குடும்பந் தழைத்து வாழ்வுண்டா மென்று சொல்லுவாயாக எ-று.

காரியானவனும் மூன்றிற் காணநற்புதனும் நின்றால்
சீரியல் செவ்வாய் பார்க்கச்சீர் கெட்டுப்போவா னென்க
சாரியா றாறில்நிற்கச் சகோதரப் பகையுண்டாகும்
வீரியங் கெட்டுத்தானே வெளியிலே நடப்பான் பாரே. 78

இ-ள். வீரிய ஸ்தானமாகிய மூன்றுமிடத்தில் காரியாகிய சனி பகவானும், பேரியாகிய புதபகவானும் கூடிநிற்க, அதைச் செவ்வாய் ஒற்றுமையாயப் பார்க்க, ஜாதகன் சீர் கெட்டுப்போவா னென்க. இவ்விருவரும் செவ்வையாய் ஆறுமிடத்தி லிருப்பாராகில் சகோதர விரோத முண்டாம். அதனால் ஆக்கங் கெட்டு ஊக்கம் விட்டு தூக்கம் மட்டு வெக்கப்பட்டுத் தானே ஒருவருக்கும் சொல்லாமல் வெளியிலே போவான் எ-று.

சாரிட மொன்பான் றன்னிற் சனிபணி கூடிநிற்கிற்
கூரிய பொருளுஞ் சேதங்குடும்பமும் பாழதாகும்
சேரிதன் தேசம் விட்டுச் செல்லுவான் வடக்கே சின்னாள்
ஊரிலே பின்னும் வந்தே உடல்மெலிந் தலைவான்பாரே. 79

இ-ள். ஒன்பதா மிடத்திற் சனியும் பாம்பும் அன்பாகக் கூடி நிற்கில், ஜாதகன் குடும்பமும், பொருளும் இடும்பாகப் போய்விடும் இவனும் தன் தேசம் விட்டு வட தேச மேகிச் சில காலமிருந்து பின்னும் தன் னூருக்கு வந்து தேகம் மெலிந்து ஆனமாண வுணவிலாது அலைந்து திரிவன் எ-று.

சொல்லவே இன்னங்கேளு சூரியன் செவ்வாய் ராகு
வல்லமை அஞ்சுமேழில் மாலவன் கூடி நிற்க
அல்லலும் பிணிகடானும் அவனுக்குண்டாகு மென்பர்
வல்லவன் முடங்கினாலும் வயதுமே வளர்த்தியாமே. 80

இ-ள் சொல்லவே இன்னங்கேளு சூரியன் செவ்வாய் ராகு இம்மூவரும் அஞ்சு, ஏழாமிடத்திலிருக்க, அவர்களோடு புதனுங் கூடச்சேரில் ஜாதகன் வறுமையாலும், நோயினாலும் வருத்தமடைவான். அப்படி முடக்கமாயிருந்தாலும், அவனுக்கு மென்மேலும் வயது வளர்ந்தோங்கு மென்க எ-று.

வாதித்த புதனு மைந்தில் வசித்திட ராகு வோடே
சோதித்துப் பார்க்கவப்போ துணையிலா தீன்றதாகும்
வாதிக்கக்கெட் டிக்காரன் வாயுமே குளறிப் பேசும்
கோதிலா தேழு நாலிற் கூடினுங் கூறுவாரே. 81

இ-ள். ஐந்தாமிடத்திற் புந்தியாகிய புதனிருக்க, அத்துடன் இராகு சேர்ந்தாலும், பார்த்தாலும், ஜாதகன் துணையிலா தீன்றதாகும் என்றதனால் சகோதரர் துணையில்லாதிருப்பன். பழக்கமுள்ள வழக்குகளை யெடுத்துப்பேசுவதில் அதிக வல்லமையுள்ளவனாயிருப்பன் வாயுஞ்சற்றே குளறிப்பேசுவன்: மேலே சொன்னபடி இராகுவும் புதனும் நாலாமிடம் ஏழாமிடத்திலிருந்தால் அவ்விதமேசொல்லுவாயாக எ-று.

புந்திபத் தெட்டில் நிற்கப் புதுமனை கட்டுவானும்
மந்தனு மிரவி பார்க்க மகவும் நட்டுவன் சேயாகும்
விந்தையாஞ் சாணானுக்கு மெய்யனும் பிறந்தானென்க
வந்ததிவ் விரண்டி லொன்றாய் வகுத்துநீ சொல்லுவாயே. 82

இ-ள் பத்து எட்டாமிடத்திற் பண்டிதனாகிய புதனிருந்தால் ஜாதகன் புதுவீடுகட்டி வாழ்வான். அப்புதனைச் சனியும் சூரியனும் பார்க்க, ஜாதகன் நட்டுவனுக்காவது [அல்லது] சாணானுக்காவது, இவ்விருவரில் ஒருவனுக்குப் பிறந்த பிள்ளையென்று சொல்லுவாய் எ-று.

ஆகவே அவன்மீதே அவதரித்தோர்க்குச் சொல்வோம்
யூகமே வோரைதன்னு லுறுங்கோனை யுணர்ந்து பார்ப்பாய்
வேகமாய்ச் சனியுமிந்தும் மேவிலக் கினமே சேர்ந்தால்
ஏகமாய்க் குடும்பந்தான் வாழ்ந்திடு மெனச்சாற்று வாயே. 83

இ-ள். அவனியிலவதரித்த ஆண்மக்கள் கவனிப்பதொன்றுண்டு. அதைச் சொல்வோம். பெண்ணே! கேட்பாயாக:—யூகத்தாலொன்றை யுற்றுணர்ந்து பார்க்கவேண்டும். பன்னிரண்டு ராசிகளிலும், ஒன்பது கிரகங்கள் ஒண்டியாகத் தனித்தோ? [அல்லது] இர

ண்டு மூன்று சேர்ந்தோ? இருக்கும். அப்படி யிருக்குங் கிரகங்களில் செப்புதற்கரிய லக்கினத்தில் சந்திரனும் சனியும் சேர்ந்தால் ஜாதகன் குடும்பந்தழைத்து வாழ்ந்திடுமென்று சாற்றுவாய் எ—று.

சந்திர னெட்டுநாளிற் சார்ந்தி லக்கினத்திற்
புந்திதா னிருந்திட்டாலும் போவது பொருள் பொன்னல்ல
தந்தைதா யிருவருக்குஞ் சாற்றுவர் மரணந்தானும்
சிந்தையிற் பயத்தை வைத்தே சீருடன் செப்புவாயே. 84

இ-ள். நாலாமிடம் எட்டாமிடத்தில் ஆலோனாகிய சந்திரன் சார்ந்திருக்கப் புதன் லக்கினத்திற் பொருந்தி யிருந்திட்டாலும், ஜாதகனுக்குப்போவது பொன்னும் பொருளுமல்ல. பின்னெதுவெனில், தந்தையுந்தாயும் இம்மைந்தனைவிட்டு மரணமடைவார்கள். அப்படியிருந்தாலும் திடீரென்று வாய்விட்டுச்சொல்லாமல் சிந்தையில் பயத்தை வைத்தே ஓர் போக்காய் மறைத்துக்கண்ட முண்டாகும். அது இவ்வளவு நாள்சென்றால் சுகமுண்டாமென்று சொல்லவும் எ-று.

சொன்னதோ ரிலக்கினத்திற் சூரியன் செவ்வாய் பாம்பை
வல்லதோர் சனிபார்த்தாலும் வாரத்திற் கண்டமென்க
நல்லதோர் சுபர்கள் பார்க்கில் நயமுண்டு பயமுமில்லை
அல்லதோர் பாபர் நோக்கில் அரிட்டமென்றுரைப்பாய் நீயே.

இ—ள். வெயிலாகிய சூரியனும் மயிலைக் கண்டஞ்சும் மாம்பாகிய ராகுவும், அயிலைக்கையிலேந்தும் கந்தவேளாகிய செவ்வாயும், உயிராகிய லக்கினத்திலிருக்க, அதைச்சனி பார்த்தாலும் ஜாதகனுக்கு ஒரு வாரத்திற் கண்டமுண்டாம். சுபக்கிரகங்கள் பார்த்தால் நயமுண்டு, பயமுமில்லை. பாபக்கிரகங்கள் நோக்கில் அரிட்டமாகிய கண்டமுண்டாமென்று நீ சொல்லுவாயாக எ-று.

தேறியே இரண்டு நான்கில் தெரிச்சிகன் நிற்கவாறு
ஈறினிற் பாபர் கூடியிருந்திடிற் பிள்ளைசேதம்
மாறிட மூக்குயர்ந்தே மச்சமு மிருக்கு மென்றே
கூறிடவேண்டும் வந்தோர் குறிப்பறிந் துண்மை சொல்லே. 86

இ-ள். குடும்பஸ்தானம் சுகஸ்தானமாகிய இண்டாமிடம் நாலாமிடத்திற் புதன்நிற்க, ஆறுமிடம் பனிரண்டாமிடத்திற்பாபர்கள் கூடியிருக்கப் பிறந்த பிள்ளை இறந்துபோகும். மூக்குயர்ந்து மச்சமுண்டாயிருக்குமென்று பார்க்கவந்தவர்கள் நோக்கமறிந்து தீர்க்காலோசனை செய்து உண்மை சொல்லவேண்டும் எ-று

சொல்லிய மூன்று நான்கில் சூரியன் நின்றானாகில்
வல்லமை யதிகமுண்டாம் வருஷமும் அஞ்சயேழாம்
அல்லிலும் பகலிலுந்தான் அலைச்சலு மதிகமுண்டாம்
பில்லிசூ னியத்தாற்றானும் பிழைப்பது மரிதென்றோதே.

இ-ள். மூன்று நான்காமிடங்களில் சான்றோனாகிய சூரியன் நின்றானாகில் ஜாதகன் அதிகவல்லமையுள்ளவன். அஞ்சு ஏழாமாண்டில் அல்லும்பகலும் அலைச்சலுண்டாம், பில்லிசூனியத்தாற் பிழைப்பது அரிதென்று சொல்லவும் எ-று.

காரியோ டெட்டுபபத்திற் காமனுண்டளப்பன் நிற்கக்
கூரிய தாயாருக்குக் குறைவுசீர் கோடு முண்டாம்
மாரியஞ் சேழின் முன்போல் வந்திலக் கினத்தில் நிற்கச்
சாரியாம் பத்தாமாண்டிற் றகப்பன் சீர் கெடுவான் பாரே. 88

இ-ள். எட்டு பத்தாமிடத்தில் கெட்ட சனியும் தொட்டகாமனும், இட்டகுருவும் ஒன்று சேர்ந்திருப்பார்களாகில் ஜாதகன் மாதாவுக்குச் சிறப்பில்லாத குறைவுநேரிடும். அஞ்சு ஏழு லக்கினத்தில் மேற்சொன்ன மூவரும் இருப்பார்களில் பிதாவுக்குப் பத்தாண்டுக்குள் மெத்தச் சங்கடமும் சீர்கேடு முண்டாமென்று சொல்லவும் எ-று.

சந்திர னிலக்கினத்திற் சார்ந்திட வாயுளுண்டாம்
புந்திதா னெட்டில் நிற்கப்பூரண வயதாமென்க
அந்தக னேழில்நிற்க ஆயுளு மதிகமாகும்
வந்ததா மிந்தவார மதில்வரிற் கண்டஞ்சொல்லே. 89

இ-ள். சந்திரன் லக்கினத்திலிருக்க ஆயுசுபெருகும். புதன் எட்டாமிடத்தில் நிற்கப் பூரணவயதாம். சனி ஏழாமிடத்திலிருக்க நீண்டவாயுளாம். ஆயுள் முடிவில் அவர்களுக்கு ஏற்பட்டவாரங்களாகிய திங்கள்-புதன்-சனி-இவ்வாரம்வரிற் கண்டமென்றுசொல்லவும் எ-று.

காரியும் புதனுமேழிற் கலந்திடக்கதிரோன் பார்க்க
வீரியங் குறைந்து காணும் விளங்காத மக்களாகும்
தாரியாம் பாட்டன் பாட்டி சந்ததி யற்றுப்போகும்
மாரியத்தகப்பன் றானும் மாணமென்றுரை செய்தாரே. 90

இ-ள். சனியும் — புதனும்-ஏழாமிடத்திலிருக்க, அதை சூரியன் பார்க்க ஜாதகனுக்கு தைரியங்குறைந்து காணும் சொற்மக்களா

த்துஷ்டப் பிள்ளைகளாக இருப்பார்கள். தகப்பனும் சாவான் பாட்டனீ பாட்டிக்குச் சந்ததியற்றுப் போகும்என்று சொல்லுவுப்ள-று.

சந்திர னுதய மேழிற் ரூனுறத் தநய னுகும்
புந்தியுஞ் தந்தையோடு பொருந்தியே யிருப்பா னுகில்
விந்தையாம் மாடமக்கள் வீணதாய் அலைந்து சாகும்
புந்தியைப் பாவர் பார்க்கிற் புதுமனை யுண்டாம்பாரே. 91

இ-ள். சந்திரனும் அவன் மைந்தனுகிய புதனும், ஒன்றுசேர்ந்து லக்கினம் (அல்லது] ஏழாமிடத்தி லிருப்பார்களாகில் ஜாதகன் மனையில் மாடுமக்கள் மரணமாகும். அப்புதனைப் பாவக்கிரகங்கள் பார்க்கில் அவன் புதுமனைகட்டி வாழ்வானென்றுசொல்லவும் எ-று.

சொல்லிய மூன்றை யேழைச் சூரியன் காரிபார்க்க
வல்லமை குன்றுந் தக்க வாழ்வெலாந் தோற்பானென்க
எல்லார்க்கும் பொல்லானுவன் இனஜன விரோத மாகும்
மல்லவே மனையாள் தானும் மகிழ்ச்சியா யிருப்பாள் பாரே.

இ ள். உதைய லக்கினத்துக்கு மூன்றுமிடத்தையாவது ஏழாமிடத்தையாவது சூரியன் [அல்லது] சனிபார்க்கில், ஜதாகன்வல்லமைகுன்றும், தக்கவாழ்வும் பொருளெல்லாந் தோற்பன். இனஜன விரோதம். எல்லோருக்கும் பொல்லாதவனுவன். ஆனல் மனைவி மட்டும் மகிழ்ந்து வாழ்வாளென்று சொல்லவும் எ-று.

இன்னமுஞ் சொல்லக்கேளு இரவியும் நீசம்பெற்ருல்
அன்னமே வறுமையாகும் அலைச்சலும் மிகவுண்டாகும்
வின்னமே மனம்வெறுத்து வெளியிலே ஓடச்செய்யும்
சொன்னமே நாலேழ் மாதம் சுகமிலை கண்டமென்னே. 93

இ-ள். மேலே சொல்லியபடி மூன்றுமிடம் ஏழாமிடங்களில் சூரியன் நீசம் பெற்றிருந்தால், ஜாதகனுக்குத் தரித்திரமும் அலைச்சலுமுண்டாகும். அதனுல்மனம் வெறுப்பாகிவெளியிலே ஓடிப்போவான். அப்படிப்போனுலும் நாலாமாதம்[அல்லது]ஏழாமாதம் அவனுக்குக் கண்ட முண்டாகுமென்று சொல்லவும் எ-று.

காரிசே யுதையம் நோக்கக் கணவற்கே பிறந்த பிள்ளை
மாரியுஞ் சனியும் நோக்கில் வைசியற் குதித்த பிள்ளை
சூரியன் செவ்வாய்நாலிற் சேரச்சூத்திரன் றன்பிள்ளை
சூரினி வருமென்றெண்ணிக் குணித்தனர் கணிதவல்லோர். 94

இ—ள். சனியும் செவ்வாயும் லக்கினத்தைப் பார்க்கத் தாய் கணவனுக்கே பெற்ற பிள்ளையாம். சுக்கிரனும் சனியும் பார்க்கில் வைசியனுக்குப் பிறந்த பிள்ளையாம். சூரியனும் செவ்வாயும் நாலாமிடத்திலிருக்கச் சூத்திரனுக்குப் பிறந்தபிள்ளையாம் கூர்மைதங்கிய நுண்ணறிவைக் கொண்டு கிரகங்கள் நிற்கும் நிலைமைகண்டு கணித வல்லவராகிய வீமகவி சொன்னதுபோற் சொல்லுவாயாக எ—று.

*சார வுதையந் தான்மதற் கேழ்கனி செவ்வாய்*
*சேர மகவுப் பிதாவுடன் சாம் திங்களாகிற் றாயுடன் சாம்*
*காரியு திப்பச்சேய்நான்கிற் கதிரோனுதைய முறைந்திடினும்*
*பாரில் மகவும் பகற் கிடாராம் பாம்பினுதையம் ராக்கிடரே.* 95

இ—ள் ஜாதகன் ஜனித்த உதையலக்கினத்துக்கு ஆறுமிடமாகிய சட்ட சமஸ்தானத்துக்கு ஏழாமிடமாகிய விரையஸ்தானத்தில் சனி செவ்வாய் சேரில் பிள்ளையும் பிதாவும் உயிர் விடுவார்கள்: சனியுஞ் சந்திரனும் சேரில் தாயுஞ்சேயுந் தானே மரணமடைவார்கள். சனி லக்கினத்திலும், செவ்வாய் நாலாமிடத்திலும், சூரியன் உதையத்திலும் இருக்கப் பிறந்த பாலன் பகலில் இறந்து விடுவான்: இராகு உதயத்திலிருக்க இரவிற் சாவான் என்று சொல்லவும் எ—று

*சேய்புதன் நீசம் பெற்றால் செட்டிக்கே பிறந்தபிள்ளை*
*ஆயசேய் நாலில் ராகு அமர்ந்திடிற் றாய்க்குக் கண்டம்*
*மாயுமே பதினேந்தாண்டில் மகவுக்குக் கண்டமாகும்*
*சாயுமே நாலிற் புந்தி சாரத்தாய் வீடுகேடே* 96

இ—ள். செவ்வாய் புதன் நீசம்பெற்றால் செட்டிக்குப் பிறந்த பிள்ளை செவ்வாயும் இராகுவும் நாலாமிடத்திலிருக்க மாதாவுக்குக் கண்டம் மகவுக்குப் பதினைந்தா மாண்டிற் கண்டம். நாலாமிடத்தில் மாலோனாகிய புதனிருந்தால் தாய்வீட்டுக்குக் கெடுதி மிகவும் என்று சொல்லவும் எ—று.

*ஏறுமுதையந்தனிற் காரியிருக்கப் புதல்வன் பத்தாநாள்*
*வேறுபட்டுச் சாகுமது வெள்ளாளனுக்குப் பிறந்தபிள்ளை*
*கூறுங்குமுதபதி சேரிற் குணவான் தனவான் பெலவானும்*
*வீறுஞ் சுங்கன் பண்டிதனும் மேவிற் றந்தையுஞ் சாமே.* 97

இ—ள். உதைய லக்கினத்தில் சனியிருக்கப் பிறந்தபிள்ளைபத்தாநாள் இறந்துபோகும் அதுவும் வெள்ளாளனுக்குப் பிறந்த பிள்

ளையாம். சந்திரன் சேரிற் குணம் தனம் பெலமுள்ளவனுக இருப்பன். புதனும் சுக்கிரனும் பொருந்தியிருக்கத் தந்தைக்கு விந்தையான சாவுண்டாகும் எ-று.

ஆறுடன் மூன்று நான்கா மதற்குமூன் றெட்டுப் பத்து
வீறுடன் செவ்வாய் நிற்க விஷகன்னி புதனும் நின்றால்
பேறுடன் தகப்பனுக்குப் பெலத்தது குஷ்டரோகம்
மாறுடன் மந்தன் நிற்கில் மரணமாம் ஆறுசேயே. 98

இ-ள். ஆறு மூன்று நாலு அதற்கு மூன்றுஎட்டு பத்தாமிடமென்றார் நூலாசிரியர். ஆறுக்கு மூன்று எட்டாமிடமும், ஆறுக்கு எட்டு உதையமும், ஆறுக்குப்பத்து மூன்றாமிடமுமாகிறது. மூன்றுக்கு மூன்று, ஐந்தாமிடமும், மூன்றுக்கு எட்டு பத்தாமிடமும், மூன்றுக்குப் பத்து பனிரண்டாமிடமு மாகிறது நாலுக்கு மூன்று ஆறாமிடமும் நாலுக்கு எட்டு பதினோராமிடமும் நாலுக்குப்பத்து-உதைய லக்கினமுமாகிறது. கணித முறைப்படி பார்க்க ஒன்று-மூன்று-ஐந்து-ஆறு-எட்டு-பதினொன்று-பனிரண்டா மிடமாகிறது. இத்தானங்களில் செவ்வாய் நிற்க, கன்னியாராசியில் விஷராகுவும் புதனும் கூடிநிற்கப்பிறந்த பிள்ளையின் தந்தைக்குக் குஷ்டரோகமுண்டாகும். அத்துடன் சனியும் நின்றால், ஆறு குழந்தைகள் மரணமாகுமென்று சொல்லவும். (1-3-5-6-8-10-11-12) எ-று.

செந்தீ வண்ணன் நாலைந்திற் சேரச் சீவனுதையத்தில்
புந்தி நான்கா மைந்து தனிற் பொருந்தி யிருக்கத்தனவானும்
இந்துப் பொய்யும் வஞ்சகமும் இயமபா னுண்மை பேசுபவன்
தந்தை தாயின் சொற்படிக்குத்தானே நடப்பான் தநயனுமே.

இ-ள். நாலு-ஐந்தாமிடத்திற் செவ்வாயும் புதனுஞ் சேர்ந்து நிற்க, லக்கினத்திற் குருவிருக்கப்பிறந்த ஜாதகன்-தனவான்-பொய் சொல்லாதவன்-வஞ்சக மில்லாதவன்-உண்மை பேசுபவன்-தந்தை தாய் மொழிகளைக் கடவாது நடப்பவன் எ-று.

குருவைச் சனியைப் புதன்பார்க்கக் குடும்பவாழ்வு செம்மையதாம், எருவைச் செவ்வாய் சொட்சேத்ரம் ஏறியிருக்கக் கேந்திரத்தில், வருகும் யோகந்தான் முதலில் வயது மதிக முண்டாகும், தருகு மேழு குதிரையுளோன் சாரமன்னும் யோகமதே. 100

இ-ள். குருவையும், சனியையும், புதன் பார்க்கக் குடும்பவாழ்வு செம்மையதாம். செவ்வாய் சொட்சேத்திரத்திலாவது கேந்தி

ரத்திலாவது ஏறியிருந்தால் யோகமும், போகமும், விவேகமும், வய தும் அதிகமுண்டாகும். ஏழ்பரியோனாகிய சூரியனும் சேர யோக போக மோக்கிப்பாக சாதனனைப்போல் வாழ்ந்திருப்பா னென்று சொல்லவும் எ-று

காணுமுதயம் மூன்றேழிற் கடுகிப்பாவர் கூடாமற்
பூணுமுதய வானிரவி பொருந்தப் பசுபூ பலமாகும்
கோணுமே சுங்கன் நின்றால் குடும்பத்தைக் கருதாமற்றான்
ஆணுமே பெண்ணுந் தானும் அலைந்திடு மறிந்துபாரே. 101

இ-ள். லக்கினம் மூன்று-ஏழாமிடங்களில்-பாவர்கள் கூடாம லும், உதயத்தில் உதையகாரகனாகிய சூரியனிருக்கப் பிறந்த ஜாத கனுக்கு, பசுபாற் பாக்கியங்களும் பூமி விளைபொருள்களும், புஜபல பராக்கிரமங்களும் உண்டாகும். பாவர்கள் ஏழாமிடத்திலிராமலும் லக்கினத்திற் சுக்கிரனிருப்பானாகில் ஜாதகன் குடும்பத்தைக் கருதா மலேயிருப்பன். அதனால் ஆணும் பெண்ணும் அலைந்து திரிவார்கள் என்க எ-று.

வேறு.

புந்திதா னெட்டில் நிற்கப் புத்திரன் அதிகமாகும்
பிந்தியே ராகு கூடிற் பிரிந்திடப் பூமி விற்பன்
சுந்தரமனையா ளென்னுந் தோகையுந் தட்டுவாணி
இந்துடன் சனியுங் கூடியிருந்திடப் பலனுஞ் சொல்லே. 102

இ-ள். புதன் எட்டாமிடத்தில் நிற்கப் புத்திரன் அதிகமுண் டாம். புதனோடு இராகுகூடில் பூமியைத்தானே விற்பன். சந்திரனு ஞ்சனியுஞ் சேர்ந்திருக்கில் வந்தமோர் அழகிய மனைவியும் பழகிய பல மனிதருடன் கூசிப்பேசி நேசித்துத் தட்டுவாணி யாவாளென்று சொல்லவும் எ-று.

சேய்புத னிருவ ரொன்றாய்ச் சேர்ந்தவ ரேழில் நிற்க
காய்தலாந் தகப்பனோடே கலகமென் றனுஞ் சண்டை
மாய்தலாம் நாலாம் ராசிட வந்திம் மகவி மட்டாம்
ஆய்கவே சனிதான் சேரில் ஆயுசு விருத்தியாமே. 103

இ-ள். செவ்வாயும் புதனும் சேர்ந்து ஏழாமிடத்தி லிருக்க மைந்தன் தந்தையொடு எந்த நேரமுங்கலகமுஞ் சண்டையும் வந்து கொண்டேயிருக்கும். நாலாமிடத்தில் அவ்விதமிருந்தால் நந்தன

ராகிய பிள்ளைகள் மட்டாம். சனி அவர்களோடு சேரில் ஜாதகனுக்கு ஆயுள் விருத்தியாம் எ-று

இலக்கினந் தனக்கு மேயைந் தெட்டினின் மதிதான் நிற்கச்
சொலத்தகு மொன்பான் றன்னைச்சுன்புதன் பார்த்திட்டாலும்
நலமிலா வதிகை தானும் நயம்படக் கருமஞ் செய்யாள்
சலமிகும் பிறந்தானோடே சண்டைகள் பிடிப்பான் பாரே 104

இ-ள். இலக்கினத்துக்குஎட்டாமிடம் ஐந்தாமிடத்தில்சந்திரனிருக்க, ஒன்பதாமிடத்தோனை அன்பான புதனும், சனியும் பண்பாகப் பார்த்தாலும் வீட்டுக்குவந்த நாட்டுப பெண்ணாகிய மனைவியுந் தாட்டீகமாய் வீட்டுவேலையை செய்யமாட்டாள். போட்ட சாமான் போட்டாப்போலிருக்கும் கேட்ட கேள்விக்குப் பதிற் சொல்லவுமாட்டாள். ஜாதகன் உடற்பிறப்புடன் மட்டத்தனமாய்ச் சஞ்சலப் படும்படி சண்டை பிடிப்பான் எ-று.

அஞ்சுடனாறு மூன்றும் அவைகளைப் பார்க்கமாலும்
கொஞ்சியே நின்றானுகிற் குலமெலாம் இஷ்டமாகும்
வஞ்சியே ஆடுமாடு மனைதில் விருத்தியாகும்
தஞ்சமாய்ச் சேயுஞ்சேரிற் றரித்திர மதிகமாமே. 105

இ-ள். அஞ்சு-ஆறு மூன்றுமிடங்களைப் புதன் பார்த்தாலும், நின்றாலும், இனஜனபந்துக்களெல்லாம் இஷ்டமாவார்கள். வீடுகளில் ஆடுமாடு விருத்தியாகும் அவ்விடங்களில் செவ்வாய் சேரில் தரித்திர மதிகமாகும் எ-று.

காணுமே எட்டிற்பத்திற் கருத்துடன் சுபர்கள் நின்றால்
பேணுமே ஆயுளுண்டு பெலம்பத்தேழ் பதினொன்றென்பான்
சேணுமே செவ்வாய் சேரிற் செல்வரு மிவனுக்கில்லை
மாணுமே மாதர் வர்க்கம் மடிவது நிசந்தான் சொல்லே. 106

இ-ள். எட்டாமிடம்-பத்தாமிடங்களில் திட்டமாய்ச்சுபர்கள் நின்றால் ஜாதகனுக்கு ஆயுள் விருத்தியாம். பத்து-ஏழு-பதினொன்று-ஒன்பதாமிடங்களிற் செவ்வாய் சேரில் செல்வராகிய புத்திரி புத்திரவர்க்கங்க ளில்லையாம். பிறந்தாலும் இறந்து போகுமென்று சொல்லுவாயாக எ-று.

கண்டமா மெட்டிற் பததிற் காரிதான் நிற்கப் பார்க்கத்
தெண்டங்கள் மிகவுண்டாகுந் திரவியஞ் சேதமாகும்

வண்டமா நகரங் காட்டும் வங்கண மாஞ்சாணுத்தி
கண்டதோ ரிடங்களெல்லாம் களவுகள் செய்வான் பாரே

இ-ள். நாலு-எட்டு-பத்தாமிடங்களில் நீலனுகிய சனியிருந்தாலும் பார்த்தாலும், தெண்டங்கள் மிகவுண்டாகும். திரவியஞ் சேதமாகும். சர்ப்பததைக் கண்ணுற் காண்பான். சாணுத்தி யிஷ்டமுண்டாம். கண்ட விடங்களிற் களவு செய்வான் எ-று.

சாரவே எட்டிற் பத்திற் சந்திரன் நின்றானுகில்
ஆரவே ஆடு மாடு அதி விர்த்தி பலனுண்டாகும்
மாரவே பத்து எட்டு வயதினிற் கண்டஞ் சொல்லு
தீரவே கெட்ட பாவர் சேர்ந்திடக் கண்டமாவே 108

இ-ள். எட்டு-பத்தாமிடங்களிற் வட்டச்சந்திரன் இட்டமாயிருந்தால், ஆடுமாடுகள் அதிவிருத்தியாம். ஜாதகன் பதினெட்டாம்வயதிற் கண்டமுண்டாம். அத்துடன் பாவர்கள் சேரில் கண்டடப் உண்டென்று விண்டுரைப்பாயாக எ-று.

கேதுவுஞ் சனியு மெட்டிற் கேடிலாப் புதனுஞ் சேரில்
சாதகன் படவு மாட்டான் தனக்கரசாங்க யோகம்
கேதுவுஞ் சனியு மேழிற் கெடுதியாஞ் சேய்மால் சேரில்
சாதகன் பத்து அஞ்சு வயதினிற் கண்டஞ் சாற்றே. 109

இ-ள். கேதுவும் சனியும் புதனும் எட்டாமிடத்திற் சேர்ந்திருக்க, ஜாதகன் இறக்கமாட்டான். அவன் இராஜாங்க யோகமுள்ளவனு யிருப்பான். கேது சனி செவ்வாய் புதன் இந்நால்வரும் ஏழாமிடத்திலிருந்தால் பதினைந்து வயதிற் கண்ட உண்டென்று சொல்லுவாயாக எ-று.

புந்திதா னெட்டுப் பத்திற் பொருந்திடப் பாவரோடே
வந்திடப் புத்திரன்றான் வணங்குவான் தெய்வந் தன்னை
விந்தை சேர் பதினைந்தாண்டின் மேலதி வாழ்வதாகும்
சந்தேக மில்லை சொன்னேம் சாமிதன் துணையுண்டாமே. 110

இ-ள். புதன் எட்டு பத்தாமிடத்தில் பாவர்களுடன் சேர்ந்திருந்தால், ஜாதகன் தெய்வ வணக்கமும் நல்லொழுக்கமும் உள்ளவனுக இருப்பான். பதினைந்து வயதுக்கு மேல் குடும்ப வாழ்வுமே அதிக மேன்மையடையும், கொஞ்சமும் சந்தேகப்பட வேண்டாம். கடவுள் கருணையுந் துணையுமுண்டாம் எ-று.

காணுமே எட்டுப் பத்திற் கடுமையாந் தீக்கோள் நிற்கத்
தோணுமே செவ்வாய் தானுந் தொந்தித்து நின்றானாகில்
மாணுமே ஏழு அஞ்சு வயதினிற் றுன்ப முண்டாம்
ஆணுமே யிரண்டு மூன்றும் அதற்குமே யில்லையாரே. 111

இ-ள். எட்டாமிடம் பத்தாமிடத்திற் கெட்ட கடுமையான தீக்கோள் நிற்க, அத்துடன் செவ்வாயும் சேர்ந்திருக்கில், ஜாதகனுக்கு அஞ்சு ஏழுவயதில் கொஞ்சந் துன்பமுண்டாம். ஆண்குழந்தை இரண்டு மூன்றிருக்கும். அதற்குமே யில்லையென்று சொல்லுவாயாக ஏ-று.

சந்திர னேழு பத்திற் சனியுடன் கூடி நிற்கப்
புந்தியு மெட்டாந் தானம் பொருந்திடிற் றுய்க்குத்தோஷம்
சந்ததி நாசமாகும் தாய்மாமன் மரண மாவன்
விந்தையாய்ச் சனிபார்த்தாலும் விளம்பென வுரைத்திட்டாரே

இ-ள். இந்துவாகிய சந்திரபகவான் ஏழு பத்தில் மந்தனாகிய சனிபகவானோடு கூடி நிற்கப் புந்தியாகிய புத பகவான் எட்டாந் தானம் பொருந்தியிருக்கப் பிறந்த ஜாதகன் தோஷமாம். இதுவுமன்றி சந்ததியும் நாசமாகும். தாய் மாமன் மரணமாவான். இச்சந்திரனைச் சனிபார்த்தாலும் அவ்விதமே சொல்லுவாயாக ஏ-று.

இப்படி யேழுபத்தில் இராகுவு மியல்பாய் நிற்கத்
தப்படி சனியுங் கூடச் சாதகன் வலுவைச் சொல்வோம்
மப்படி யாறு அஞ்சு வருடத்திற் றாய்க்குக் கண்டம்
ஒப்படி யாகுமென்றே உறுதியா யுரைசெய் வாயே. 113

இ-ள். இப்புவியிலுற்பவித்த ஜாதகனுக்கு ஏழுபத்தில் இராகுவிருக்க, அத்துடன் சனியுங் கூடச்சேரில் அவன் வல்லமையை எல்லோருக்குஞ் சொல்லுவோமாக. அஞ்சாறுவருடத்தில் கொஞ்சி வளர்க்குந் தாய்க்குக் கண்டம். இது தப்பல்ல. யாவரும் ஒப்ப உறுதியாய்ச் சொல்லென்றே மகடூ முன்னிலை வீமகவி சொன்னார் ஏ-று.

ஆறுடன் நான்கு மூன்று மதற்குமூன் றெட்டுப் பத்தில்
வீறுடன் சனிசேய் நிற்க மிகவிர்த்தி வாழ்வு முண்டாம்
பாறுடன் பாவர் பார்க்கப் பண்ணின வெல்லாம் பாவம்
தாறிடன் காவிசோமன் சார்ந்திடத் தனவானாமே. 114

இ-ள். ஆறு நான்கு மூன்றுமிடம், அதற்கு மூன்று எட்டு பத்தாமிடங்களில் சனி செவ்வாய் நிற்கில் மிக்க விருத்தியாக வாழ்

வுண்டாகும். அத்தானத்தைப் பாவர்கள் பார்க்க, ஜாதகன் பண்ணி னதெல்லாம் பாவம். உண்மையான புண்ணியமில்லை. அதில்கண்ணி யமாக எண்ணியும், சனியுஞ் சந்திரனு மிருக்கத் தாரணியிற் பூரண மாகத் தனவந்தனுயிருப்பன் எ-று.

பொன்னவன் சென்மந் தன்னிற் பொருந்திடப் பூமியுண்டாம்
மன்னவ னைந்திற் சேர மக்களு மதிகமுண்டாம்
சொன்ன சொல் தவறமாட்டான் சொகுசுடனிருப்பானென்க
இன்னமு மறிந்து நீதா னியம்பிடு நன்மை மாதே. 115

இ-ள். பொன்னவனாகிய வியாழபகவான் ஜென்ம லக்கினத் திற் பொருந்தியிருக்கப் பூமியுண்டாம். மன்னவனாகிய லக்கினாதி பதி ஐந்தாமிடத்தி லிருக்கப் புத்திர பாக்கியம் அதிகமுண்டாம். சொன்ன சொல்லைத் தவறமாட்டான். ஜாதகன் அழகும், நாகரீக மும், சௌக்கியமு முள்ளவனாக இருப்பான். கண்ணிய முள்ள பெண்ணே? இன்னமும் அறிந்து நீ தான் நன்மையான பலன்களை உண்மையாகக் கண்டறிந்து விண்டுரைப்பாயாக எ-று.

சந்திர னேழுபத்திற் சனிபுதன் லாப மேற
அந்தகன் நோக்கினாலும் அவள் சகோதரங்க ளைந்தாம்
விந்தையாம் புதனுமெட்டில் மேவிடப் பிதாவுந் தீர்க்கம்
சிந்தையே ழெட்டிற் சேயும் சேர்ந்திடி லரசனாமே. 116

இ-ள். ஏழு-பத்திற் சந்திரனிருக்கத் தாழ்விலாத புதனும் சனியும் பதினோராமிடத்திலிருக்க அல்லது இவர்களைச் சனிபக வான் கண்ணினால் நோக்கினாலும் அவனுக்குச் சகோதரங்கள் ஐந் தாம். புதன் எட்டாமிடத்திலிருக்கப் பிதாவுக்குத் தீர்க்காயுளாம். அப்புதனும், செவ்வாயும் ஏழு எட்டாமிடங்களிலிருக்க ஜாதகனு க்கு ராஜயோகமாம் என்று சொல்லுவாயாக எ-று.

மந்திரி யேழில் நிற்க மனைகட்டி யிருந்தாலுந் தான்
சுந்தர மான செல்வந் தொலைப்பது நிசம தாகும்
இந்துவும் பாவரோடே யிருந்திடிற் புதல்வரில்லை
சந்ததி யில்லாமற்றான் சன்யாசி யாவான் பாவாரே. 117

இ-ள். வியாழபகவான் ஏழாமிடத்திலிருக்க, ஜாதகன் வீடு கட்டி வாழ்ந்தாலுந் தான் செல்வமெல்லாம் நில்லாமற் றுலைத்துப் போடுவான் சந்திரன் பாவர்களுடன் சார்ந்திருந்தால் மைந்தரு

மில்லை. அதனால் தனக்குச் சந்ததியற்றுப் போச்சே யென்று மன வருத்தமுற்று ஜாதகன் பரதேசியாகிப் பரதேசம் போவான் எ-று.

அஞ்சட னெட்டுப் பத்தில் அந்தகன் வந்துநின்றால்
கொஞ்சிய குடும்பந் தன்னிற் கொள்ளைக ளதிகமாகும்
வஞ்சியே மந்தன் கெட்ட பாவரோ டிணங்கி வாழத்
தஞ்சமாம் வயது குன்றும் சகோதர மைந்து சொல்லே. 118

இ-ள். அஞ்சு-எட்டு-பத்தாமிடத்தில் வஞ்சமாய்ச் சனிபக வான் வந்து நின்றால் பொன் பொருள் பூஷணங்கள் வஸ்திரங்கள் சாமான்கள் காணாமற் களவுபோகும். பாவர்கள் அச்சனியோக ஆவலாய்ச் சேர்ந்திருக்கில் ஜாதகனுக்கு வயது குன்றும், சகோதரங் களைந் துண்டென்று சொல்லுவாயாக எ-று.

பத்துட னைந்து ஏழாம் பதிக்குளே பாவர் நிற்க
வித்தகச் சுபரே பார்க்க வேண்டிய பலனுண்டாகும்
சத்திய மான மன்னன் தரணியிற் றனவா னாகும்
பத்தியும் வித்தையுண்டாம் பாலனுக் காயுளுண்டே. 119

இ-ள். பத்து ஐந்து ஏழு இவ்விடங்களுக்குள்ளே பாவர்கள் நிற்க, அவர்களைச் சுபர்கள் பார்க்க, ஜாதகனுக்கு வேண்டிய பலனு ண்டாகும். சத்தியவான் தனவான் குணவான் பத்தியுள்ளவன் வித் தையுள்ளவன் ஆயுள் விர்த்தியுள்ள வனுமாவான் எ-று.

சந்திரன் வியாழன் றன்னைச் சனியுஞ் சூரியன் பார்த்தாலும்
மந்திரி யுடன் சேர்ந்தாலும் வயதுமே மெத்த வுண்டாம்
கந்தமாங் குழலினாளே கடுகவே தாய்க்குக் கண்டம்
வந்தபத் தெட்டா மாண்டில் வாய்த்திடும் பிதுர்க்குக் கண்டம்

இ-ள். சந்திரனையும் வியாழனையும் சனி சூரியன் பார்த்தா லும், சனி சூரியனோடு வியாழன் சேர்ந்தாலும், ஜாதகனுக்கு ஆயுள் விருத்தியுண்டாம். பெற்ற தாய்க்குக் கண்டமுண்டென்று சொல்வ தோடு பதினெட்டாம் வயதிற் பிதாவுக்குங் கண்டமாம். வாசனை தங்கிய கூந்தலையுடைய பெண்ணே? காசினியோர்க்கு இவ்விதங் கண்டறிந்து விண்டுரைப்பாயாக எ-று.

காரகன் சனியு மெட்டிற் கலந்திடச் சுபர் பார்த்தாலும்
தாரமோ யிரண்டதாகும் தாயுடன் பிள்ளை சாகும்
காரமா மன்றந் தைக்குக் கண்டமுண்டாகு மென்க
சாரமாய் வீமநாதர் சாற்றிய பலனீ தாமே. 121

இ-ள். களத்திர காரகனாகிய சுக்கிரனும், ஆயுட்காரகனாகிய சனியும், எட்டாமிடத்திலிருக்கச் சுபர்கள் பார்த்தாலும் ஜாதகனுக்குத் தாரம் இரண்டாகும். தாயுஞ்சேயும் சாகும் மாமனுக்கும், தகப்பனுக்கும் மரணத்துக்குச் சமானமான கண்டமுண்டாகும் என்று வீமநாதர் சொன்னதை பூமியிலுள்ளோர்க்குச் சொல்லுவாயாக எ-று.

வேறு.

கொற்றவனும் மூன்றானுக் குடையோன் றானும்
குறிப்பாகக் கேந்திரத்தி லிருந்திட்டாலும்
நற்றவனைச் சனிகண்ணுற் பார்த்திட்டாலும்
நலமாகக் கூடியவ னிருந்திட்டாலும்
உற்றதோர் சகோதரங்கள் நாலைந்துண்டு
ஊழ் வினையைத் தள்ளிடுவா யெல்லாம் போக
பற்றிடுநற் சோத ரங்க ளிரண்டுபேரு
பலமாந் தீர்க்காயுளெனப் பகரலாமே. 122

இ-ள். இலக்கினத்துக்கு மூன்றாமிடத்துக் குடையவன் எவனோ? அக்கொற்றவன் கேந்திரத்திலிருந்தாலும், அன்னோனைச் சனி பார்த்தாலும் (அல்லது) அவனோடு கூடினாலும், நாலைந்து சகோதரங்களுண்டாம். அதிற் சென்றதுபோக நின்றது இரண்டுபேராம். அவர்களுக்குத் தீர்க்காயுளெனச் சொல்லலாம் எ-று.

வேறு.

பத்துநா லேழா றொன்பான் பனிரண்டிற் பாவ ரோடே
வித்தகன் சேர்ந்து நின்றால் விளங்காத மனைவடக்காம்
குத்தமா மதன் வடக்கு குடிபோன மனையாஞ் சொல்லு
சித்தமா மதன் வடக்கு சேயனு மில்லா வீடே. 123

இ-ள். பத்து-நாலு-ஏழு-ஒன்பது - பனிரண்டு இத்தானங்களில் வித்தகனாகிய புதன் பாவர்களுடன் கூடிநின்றால், ஜாதகன் மனைக்கு வடக்கு விளங்காத மனையாம். அதற்கு வடக்குகுடிபோன மனையாம். அதற்கும் வடக்கு புத்திரபாக்கிய மில்லாதமனையாம் எ-று.

வனிதைகே ளைந்தாம் வீட்டில் வமிசபங் காளிரண்டாம்
இனியதே ஒருவனுக்கு இல்லையே எச்சந் தானும்

தனியன்வே றொருவனுக்கு சந்ததி யிரண்டதாகும்
கனிமொழி மாதேபாவர் காணிலுத் தரம்பா ழாமே. 124

இ-ள். முன் சொன்னதோடு பெண்ணே? இன்னமும் கேட்பாயாக. அன்னவன் வீட்டுக்கு ஐந்தாம் வீட்டிற் குடியிருப்பவர் இரண்டு பங்காளிகளாம். அதில் ஒருவனுக்குச் சந்ததியே யில்லை. மற்றொருவனுக்குச் சந்ததியிரண்டாம். மேலே சொல்லிய ஸ்தானங்களைப் பாவர்கள் பார்க்கில் அம்மனைக்கு வடபுற மிருக்கும் மனை பாழாம் எ-று.

வேறு.

வெள்ளி வீட்டிற் சனிசோமன் மேவியிருக்க வுச்சனுமாய்த்
தள்ளுங் குதிரை மதயானை சூழ்ந்த சிவிகை தண்டிகையாம்
விள்ளும் பூமி சொனங்கள் வித்தை மிகவே கற்றுணர்வான்
தெள்ளு தமிழால் வீமகவி செப்புங் கணித நூலிதுவே. 125

இ-ள். சுக்கிரனுக்குச் சொந்த வீடாகிய துலாத்திற் சனியும், இடப வீட்டில் இந்துவாகிய சந்திரனும் உச்சமாய்இருந்தால் ஜாதகனுக்கு யானை குதிரை சிவிகை தண்டிகை பூமி பொன் பொருள் விருத்தியடையவதோடு வித்தை மிகவே கற்றுணர்வான். வீமகவி பூமியிலுள்ளோர்க்கு நேசமாகச் செப்புங்கணித நூலிதுவே சென்று சொல்லுவாயாக எ-று.

வேறு

மனயதில் வந்து நின்றே வாகுறும் ராசிக்குள்ளே
பனிரண்டும் எட்டும் ஆறும் பத்து நான்கிரண்டு தன்னில்
சனி செவ்வாய் மதியருக்கன் சார்ந்தங்கு நிற்குமாகில்
இனிய நற்பொருளுஞ் சேதம் இவ்விடம் பாழாம்பாரே. 126

இ-ள். ஒருவன் மனையதில்வத்து நின்றுகொண்டு ஒழுங்கான ஹோரையாகிய, துவாதச ராசிக்குள், பனிரண்டு எட்டு ஆறு பத்து நான்கு இரண்டு இத்தானங்களில், எத்தானமாயிருந்தாலும், அத்தானத்தில் சனி செவ்வாய் சந்திரன் சூரியன் இவர்கள், தனித்தனியாயிருந்தாலும், (அல்லது) இந்நால்வரும், ஒன்று சேர்ந்திருந்தாலும் அம்மனையிலுள்ள பொருளுஞ்சேதம், அம்மனையும் பாழாம் எ-று.

சனியினாற் காலிசேதம் சகோதரஞ் சேயாற்சாவு
கனலியின் றனைக்கொல்லுங் கலாநிதி கருவழிக்கும்

சினமுறுஞ் சுங்கன் நீசம் சிசுவைத்தா ரத்தைக் கொல்லும்
அனல்படுங் குடிவிரட்டும் அம்மனை பாழாம் பாரே. 127

இ-ள். மேலே சொல்லிய தானங்களில் நீலனாகிய சனி நிற்கக், காலிசேதம். வேலனாகிய செவ்வாயிருக்கில் சகோதரம், சாவு, கனலி யாகிய சூரியன் பிதாவைக் கொள்வன். கலாநிதியாகிய சந்திரன், கர்ப்பத்தை உற்பத்திசெய்யவொட்டாமற் கருவையழிப்பன். சுக்கி ரன்நீசம்பெற்றிருந்தால் சிசுவையும், மனைவியையுங் கொல்லுவான் வீடு தீப்பட்டு வெந்துவிடும். குடியிருக்க மனம் ஒவ்வாது விரட் டும். அம்மனைபாழ'மென்று சொல்லுவாயாக எ-று.

வல்லமை நாலாமாதி வாழ்பதி யாட்சியாகில்
சொல்லுவாய் மனைக்குள்ளாகச் சூனிய மிருக்கு மென்க
நல்லவர் பார்க்காராகில் நவில்வட மேற்குச் சாயல்
மெல்லவே எட்டுச்சாண் கீழ் வேட்டிநீயெடுக்கச்சொல்லே.

இ-ள். நாலாமிடத்ததிபதி வாழும்பதி ஆட்சியாகில் இக்கோல மனைக்குள் சூனியமிருக்கு தென்று சொல்லவும். அத்தானத்தைச் சுபர்கள் பார்வையில்லாவிட்டால் வடமேற்கில் எட்டுச்சாண் மண் ணுக்குக் கீழ்வெட்டி யெடுக்கச்சொல்லவும், சூனியமெடுக்கச் சுக முண்டாம் எ-று.

கதிரவன் ஆறு எட்டிற் கலந்துமீ ராறு தன்னில்
மதியவன் அஞ்சுபத்தில் வளமதாய் நின்றாகில்
விதிமனை மேற்குப் பக்கம் மேற்சுவ ரதனிற்றானே
பதியவே யிரண்டு சாண் கீழ் பதித்திடுங் குடயதாமே. 129

இ-ள். சூரியன் சட்டாட்டம வியஸ்தானமாகிய ஆறு எட்டு பனிரண்டாமிடத்திலிருக்க, சந்திரன் அஞ்சு பத்திலிருக்க, பிறந்த ஜாதகன் வீட்டுமேல் புறஞ்சுவரின் மேலே இரண்டு சாண் கீழே பதித்து வைத்திருக்கும் சிறு குடத்தைக் கண்டு பிடித்து எடுத்து எடுத்துக்கொள்ளவும் எ-று.

வேறு.

பைய நான் காதியேழிடஞ் செவ்வாய்
பற்றியே கிரகமும் நின்றால்
தையலா ளொருத்தி விதவையு மாகிச்
சந்ததி யத்தமே போவாள்

வெய்யவுன் மனைக்கு மேல்புற மனையில்
விளங்கிய தாரமு மிரட்டை
கையது ஒடிந்து முடவனு மாகிக்
காளையா யொருவனு மடிந்தான். 130

இ-ள். நான்காமிடத்துக்குடையவன் ஏழாமிடத்திற் செவ்வாயுடன்சேர்ந்திருக்க, ஜாதகன் பிறந்த வீட்டில் ஒரு பெண்ணானவள் விதவையாகிச் சந்ததியற்றுப் போவாள். தன் மனைக்குமேல் புற மனையிலிருப்போனுக்கு இரண்டு தாரமுண்டு. அவ்வீட்டில் காளையாகிய வாலிபனுக்குகையொடிந்து முடவனுமாகி காலனூர் போவானென்று சொல்லவும் எ-று.

வேறு.

ஆமேடத் ததிபன் றானும் அம்புலியுடனேகூடித்
தாமேடந் தனில்நின் றாலும் சனிகுஜன் பார்த்திட்டாலும்
போமது எட்டு ஆறு பொருந்து மாண்டதனிற் சாவாம்
வாமசூரியனுங் கூடில் வந்திடும் பிதாவினுக்கே. 131

இ-ள்.ஏழாமிடததுக்குடையவனும், சந்திரனுங்கூடிமேடத்தில் நின்றாலும், சனியுஞ் செவ்வாயும், பாத்திட்டாலும், ஜாதகன் ஆறு எட்டாமாண்டில் மரணமாவான். அவர்களோடு சூரியனுங்கூடில் பிதாவுக்கு மரணமாம். எ-று.

எட்டிற் காரி குஜன்கூடி யிருக்கப் பாவி மனையேறில்
தொட்ட லக்கினேசனுடன் சூழக் குஜனுந் தானிருக்க
எட்டே ஆண்டு தப்பாது இனிய தகப்பன் புத்திரனும்
வட்ட மறவே மனைவேகும் மனையும் பாழா வென்றுரையே.

இ-ள். எட்டாமிடம் பாவர் மனையாகி அதிற்கெட்ட சனியும் செவ்வாயும் சேர்ந்திருந்தாலும், லக்கினாதிபதியோடு வக்கிரனாகிய செவ்வாய்தானிருந்தாலும், தகப்பனும்புத்திரனும் எட்டாமாண்டிற் கட்டாயம் தப்பாமல் மரணமாவர், வீடுந்தீப்பட்டு வெந்துபோகும் மனையும் பாழாய்ப் போகுமென்று சொல்லுவாய் எ-று.

தப்பா துரையுஞ் சேய்மதியுஞ் சனியுங் பனிரண்டில்
ஒப்பா நீசமதுபெறவே ஒருமித்திருக்கநீசத்தோன்
அப்போ பிறந்தான் மனைதனிலே இடியே விழுகு மப்போதே
செப்பா துலகுந் தாமேசுந் தெரிந்தேயுரைத்தார் வீமகவி. 133

இ-ள். சந்திரனுஞ் செவ்வாயும் சனியுங்கூடிப் பனிரண்டாமிடத்திலிருக்க, அம்மூவரில் ஒருவர் நீசம் பெற்றிருந்தாலும், அப்போது பிறந்த ஜாதகன் வீடு இடிவிழுந்து பாழாகும். அதைக் கண்ணுற்ற உலகத்தோர்கள் பலவிதமாய் ஏசுவார்கள். இதைத் தெரிந்தே வீமகவி செப்பினர் இதுவுந்தப்பா தென்க எ-று.

மானே மேடத்ததிபதியும் மகிழ்ந்து சுபர்கள் மனையேத்
தேனே யேழு பதினொன்றில் திரிகோணததில் நின்றாலும்
தானே வருகுஞ் செல்வமது தக்க ராஜ யோகமதாம்
கோனே பூமி மனைவருகுங் குடும்பம் பலத்து வாழ்வானே.

இ-ள். மேடத்ததிபதியாகிய செவ்வாய் சுபர்கள் மனையாகி, ஏழு பதினொன்று திரிகோணமாகி ஒன்று, அஞ்சு, ஒன்பதில் நின்றாலும் ஜாதகனுக்குத்தானே வருகுஞ் செல்வமது தக்கராஜயோகமதாம். அரசனுக்கொப்பாக பூமி மனை தானியம் வருகும், குடும்பம் அதிக விர்த்தியாகி வாழ்ந்து வருவன் எ-று

அன்றே காரிசேய்மதியும் ஆறு மெட்டுப் பனிரண்டில்
நின்றே யிருக்கச் சாதகற்கு நிற்க மனையு மில்லாமற்
சென்றே யிருக்கக் குடிநாசம் சேர்ந்தா கூடப் பிறந்தோரும்
நன்றாய் மரணந்தா னடைவார் நாடியுரைத்தார் மேலோரே.

இ-ள் சனியும் செவ்வாயும் சந்திரனும் ஆறு, எட்டு, பனிரண்டாமிடத்தில் கூடியிருப்பார்களாகில், ஜாதகனுக்கு இருக்கஇடமில்லாமற் சென்ற இடத்திற் குடிநாசம், சேர்ந்தோர் கூடப்பிறந்தோரும் மரணமடைவாரென்று மேலோருரைத்ததைச் சொல்லுவாயாக எ-று.

குருவும் பாவிமனையேறிக் குஜனுஞ் சுபரின் மனையாக
மருவும் புந்தி சுங்கனுடன் மதியே கூடிப் பார்த்திடவே
பெருகிவாழு மைந்தர்களும் பெருமைவாய்ந்த கீர்த்திகளும்
வருமே தனங்களதிகமதாய் வாழ்வானென்று வழுத்துயே.

இ-ள். பாவர் மனையிற் குருவும், சுபர்மனையிற் குஜனும், ஏறியிருக்க, புதன் சுக்கிரன் சந்திரன் இம்மூவருங்கூடிப் பாத்தாலும், பெருகிவாழும் மைந்தர்களும் பெருமைவாய்ந்த கீர்த்திகளும், வருமே தனங்கள் அதிகமதாய் வாழ்வானென்று வழுத்துவையே எ-று.

எட்டுக் குடையோன் சனியுடனே யிருக்கப் பாவிமனையேறி
இட்டமுடனே நீசமதி லிருக்க வெட்டாண் டதில் மரணம்
சட்டமுடனே தப்பாது சாகுமுரிய சகோதரமும்
திட்டமுடனே குடிநாகம் செப்பும் வீம கவிதானே. 137

இ-ள். எட்டாமிடத்துக்குடையவனும் சனிபகவானுங்கூடிப் பாவர் மனையேறி நீசம் பெற்றிருந்தால் ஜாதகன் எட்டாமாண்டில் மரணமாவான், சகோதரமுஞ் சாகும், குடியும் நாசமாகும், வீமகவி செப்பினது தப்பாதென்று சொல்லவும் எ-று.

சாருஞ் சசியு மோரேழில் தக்கபாம்புந் தான்கூடிப்
பேரும் வியத்திற் சனிநீசம் பெற்றே யிருக்க ரவிசேரக்
கூருங் குடும்பஞ் சிலகாலம் கொடுக்குஞ் செல்வங் குறையாது
பாரும் பாதி காலத்திற் படுவான் கஷ்ட பலனுமே. 138

இ-ள். சந்திரனும், இராகுவுங்கூடி ஏழாமிடத்திலிருக்க சனி நீசம் பெற்றுப்பனிரண்டாமிடததிலிருக்க அத்துடன் சூரியன் சேரப்பிறந்த ஜாதகன் குடும்பத்திற் சிலகாலம் செல்வமும், யோகமும் சேர்ந்து கொடுக்கும் சிலகாலம் செல்வங்குறைந்து புகழ் கீர்த்தி யோகம் மறைந்து, நஷ்டமடைந்து, கஷ்டப்படுவானென்றுசொல்லவும் எ-று.

ஒன்றுய்க் காரி பாம்புசசி ஒருமித்திருக்கத் திரிகோணம்
நன்று யிருக்க மலைப்பதியோன் நாடியவனுஞ் சேர்ந்திடவே
அன்றுங் குடும்பந் தனலாபம் ஆடுமாடு செல்வமுடன்
ஒன்று மவன்றன் பங்காளி ரோங்குங் குடும்பந்தப்பாதே. 139

இ-ள். சனி ராகு-சந்திரன் ஒன்றுய்க்கூடி திரிகோணத்திலிருக்க, அவர்களுடன் (குன்று தோறடுங் குமரக்கடவுள் என்று முன்னோர் சொன்னதினுல்) இந்நூலாசிரியர் மலைப்பதியோன் என்றூர். ஆகையால் செவ்வாயுஞ் சேர்ந்திருக்கப் பிறந்த ஜாதகன் குடும்பம் பலத்து தனலாபம்-ஆடு-மாடு, செல்வமுடன் அவன் பங்காளி குடும்பமுந் தழைத்தோங்குந் தப்பாது-என்று சொல்லவும் எ-று.

தப்பா துரையு மேடத்தோன் தனது வீடு தானேறி (வாயும்
மெய்ப்பாய்ச் சுபர்கள்தான் பாத்து விரும்பி யிருக்கச் செவ்
முப்பாற் செல்வம் புத்திரரும் முற்றுங்களத்ர பூஷணமும்
எப்போ காலந்தான் வரையிலிருப்பா னெழுபத்தேழாண்டே.

இ-ள். மேடாதிபதி செவ்வாய் தனது சொந்த வீடாகியமேட விருச்சிக ராசிலேறிச் சுபர்கள் பார்வை பெற்றிருந்தால்ஜாதகனுக்கு உடற்செல்வம் பொருட்செல்வம் அருள் செல்வம் புத்திரபாக்கியம் களத்திரபோக்கியம் பூஷணச் சேர்க்கை குடும்ப விர்த்தியுமுண்டாகும், இவனும் எழுபத்தேழாண்டுவரை சுகமாய் வாழ்ந்திருப்பான் எ-று.

உறையும்மேடத்ததிபதிதா னுற்ற தனது மனேயேறில்
அறையுஞ் செல்வ முண்டாகும் அமர்ந்து பாவர் மனேயாயின்
நிறையுமிரண்டிற் குருவிருக்க நீங்கா தேழிற் பாம்பு சனி
திறமா யிருக்கக் குடும்பமது திறப்பாம் யோகந் தப்பாதே 141

இ-ள். மேடத்ததிபதியாகிய செவ்வாய் தனது சொந்த வீடாகிய மேட விருச்சிக ராசியிலேறி யிருக்கில் ஜாதகனுக்கு அதிகச் செல்வமுண்டாகும். அச்செவ்வாய் மற்ற பாவர்கள் மனேயாகி இரண்டிற் குருவிருக்க, ஏழிற்பாம்பு சனியிருக்க, குடும்பமானது விருத்தியடையும் அதிகயோக முண்டாம் தப்பாதென்க எ-று.

மதியே சுங்கன் சனிகூடி மகிழ்ந்து லாபத்துடையோன்றன்
பதியி லிருக்கப் புதனேடு பத்தாமிடத்தான் சேர்ந்தாலும்
விதியே மிக்க பூமிவரும் விளங்குந் தனமுஞ் செல்வமுடன்
பதியி லிருக்க வருமென்றே பகரும் வீம கவிநூலே. 142

இ-ள். பெண்ணே? எண்ணுதற்கரிய பன்னூலினும் சிறந்த சோதிடநன்னூலினுள் இந்நூலைச்சொல்லிய விமகவியை மதித்து, மனதுட்பதித்து கவனித்துப்பார்ப்பாயாக. சுக்கிரனும் சனியுங்கூடி லாபத்தானமாகிய பதினோராமிடத்திலிருந்தாலும், புதனும், பத்தாமிடத்தானும் சேர்ந்திருந்தாலும், ஜாதகனுக்கு மதியே! விதியே— அமைப்பாகச் சொல்லுவாய் என்னவெனில் நிதி நிட்சேபம் தனம்-தானியம். ஆடு மாடு கன்று காலி வாகனம் மிகுந்த பூமி பொன்பூஷணம்-பண்டபாத்திரம், இவைகளெல்லாம் தானிருக்கும் பதியைத் தேடி வருமென்றே சொல்லுவாயாக எ-று.

சொல்லும் புதனுஞ் சுங்கனுமே சூழ்ந்து லாபந்தணிலேற
நல்ல குருவும் ஆட்சி யுச்சம் நாடியிருக்கச் சாதகற்கு
வெல்லும் பூமி மனேமச்சு மிகப்பூஷணமு முண்டாகி
வல்ல சேயும்செல்வமுடன் வாழ்வானென்றே வழுத்துவையே.

இ-ள். புதனும் சுக்கிரனும் லாபத்தானமாகிய பதினோரோமிடத்திலிருக்க, நல்ல குருவும் ஆட்சி (அல்லது) உச்சஸ்தானத்திலிருக்க ஜாதகனுக்கு மனைமச்சு பொன் பூஷணம் புத்திரபௌத்திர பசுபால் பாக்கியந் தனந்தானியம் இவைகளுடன் குடும்பம் பலத்து சுகமாக வாழ்வான் எ-று.

பேசும் ராசி யிடத் ததிபன் பேணிக்கோணத் திருந்திடவே
காசும் பணமும் பூஷணமும் களத்ரபுத்ர சுகமுண்டாம்
தேசு பெறவே கேந்திரத்திற் சீதனிருக்க விருதாரம்
பேசும் வியத்திற் சுங்கனுறப் பின்னும் நிலையாக் களத்திரமே.

இ-ள். இராசிக்கதிபதியாகிய லக்கினேசன் திரிகோணராசிலேயிருக்கப் பிறந்த ஜாதகனுக்கு பொன்பூஷணம் பொருள் புத்திர களத்திர சுகமுண்டாம். கேந்திரத்தானத்தில் சந்திரனிருந்தால், ஜாதகனுக்கு இரண்டுதாரமாம். வியத்தானமாகிய பனிரண்டாமிடத்திற் சுக்கிரனிருக்க, ஜாதகனுக்குப் பின்னும் நிலையாக் களத்திரமென்று சொல்வாயாக எ-று.

முன்னம் பனிரண்டாமிடத்தும் குடும்பத்தில் ஆறிடத்திற்
சொன்ன தானந்தணிற் பெண்ணே சூழும்பாம்புசனியிரவி
துள்ளி யிருக்கத் தனம் பூமிதோன்றும் லாபம் நஷ்டமதாம்
பின்னும் பெருகி வாழாது பெருமைபோகும்பிதாவினுக்கே.

இ-ள். பனிரண்டாமிடம் பத்தாமிடம் ஆறுமிடம் இத்தானங்களில்,பாம்புசனியிரவியாகிய இராகுசனி சூரியன் சேர்ந்திருந்தால் ஜாதகனுக்குப் பொன் பூமி பொருள் லாபம் இவைகள் நஷ்டமாம் பின்னும் பெருகி வாழாது பெருமை போகும் பிதாவினுக்கே என்று சொல்லவும் எ-று.

நல்ல ஏழிற் குஜன் சனியும நாடியிருக்கச் சுங்கன்றனைப்
பொல்லா ரிருந்து நோக்கினுமே போவான் குடும்பந் தனைவிட்
இல்லாள் மகவும் நில்லாது ஏகும்பக்கம் மனைகளிலே (டே
எல்லாம் போகுங் களத்திரமும் ஏமனூருக் கேகுவனே. 146

இ-ள். ஏழாமிடத்திற் செவ்வாயும் சனியும் இருக்கச் சுக்கிரனைப் பாவாகள் நோக்க, ஜாதகன் குடும்பத்தைவிட்டு வெளியேறிப் போவான், இல்லாளும் புத்திரரும், எவருடனும் சொல்லாமல் இல்லத்தில் நில்லாமல் ஏமனூர்க்கேகுவார்கள். பக்கமனையில் மிக்கபொ

ளும், தக்க களத்திரமும் முக்கியமுள்ள எல்லா வஸ்துகளும்சொல்லாமல் நாசமாய்ப்போம் எ—று.

பாரினி லேழுபத்திற் பனிமதி குஜனுங் கூடில்
வீரிய முடனே ராகு மேலது பார்வை யாகில்
காரிய முடனே பார்க்கக் கணக்கது மரண மெட்டில்
சூரியன் பார்வையாகிற் றுலங்கிடான் பிதாவுந்தானே. 147

இ-ள் ஏழாமிடம் பத்தாமிடத்திற் சந்திரனும், செவ்வாயுங் கூடியிருக்க, இராகு பார்க்க, ஜாதகன் எட்டாவ தாண்டில் மரணமாம். சூரியன் பார்வையாகில் துலங்கிடான் பிதாவுந்தானே என்று சொல்லுவாயாக எ-று.

வேறு கட்டளைக் களிப்பா.

எட்டும் ஆறும் பனிரண்டிற் பாவிகள்
இருக்கத் தாயின் பிதாவின் மரணமே
சட்ட மாய்ச்சனி யேழிடம் நிற்கிலோ
தாரம் ரெண்டுமே தப்பாமற் செய்குவான்
வட்டமான மனையது பக்கத்தில்
வடபுறத்தினிற் கெட்டி மனையதாம்
திட்டமாக அதுக்கும் வடபுறம்
திண்ணை சேரும்படி யெனச் செப்பிடே. 148

இ-ள். சட்டாட்டம் வியஸ்தானமாகிய ஆறு எட்டு பனிரண்டாமிடத்திற் பாவிகள் இருந்தால், ஜாதகன் மாதாபிதாவுக்குமரணமுண்டாகும். ஏழாமிடத்திற் சனியிருக்க, ஜாதகன் இரண்டு தாரம் கலியாணந் தப்பாமற் செயகுவான். தன் மனைக்கு வடபுறத்தில் கெட்டிமனையாம், அதற்கு வடபுறதிண்ணை சேரும் என்று செப்பிடுவாயாக எ—று.

செப்பு மந்த மனைக்கு வடபுறம்
சேரும் பூமியிற் கிணறு மிரண்டதாம்
செப்பு மந்த மனைக்குமே தென்புறம்
சேரத்தானிரு கோவிலுமுண்டதாம்
செப்பு மந்த மனைக்குமே கீழ்புறம்
சேரவே ஆறு தாரமனையதாம்
செப்பு மிந்தப் படிமனை காணுமேல்
செவ்வா யெட்டி லிருந்திடச் செப்புமே. 149

இ-ள். எட்டாமிடத்தில் திட்டமாய்ச் செவ்வாய் இருக்கப் பிறந்த ஜாதகற்கு கட்டாம் தன்மனைக்கு வடபுறம் இரண்டு கிணறு உண்டென்க, தென்புறம் கோவில் இரண்டுண்டென்க. கீழ்புறத் திலுள்ள மனைகாரனுக்கு ஆறுதாரம் கலியாணஞ் செய்திருப்பா னென்க. கொவ்வைக் கனிபோன்ற செவ்விதழையுடைய பெண் ணே? இவ்விதம் செவ்வாயிருக்கில் சவ்வியமாய்ச் செப்புவாயாக எ—று

குருவும் மாவி யுடன்சனி நிற்கினும்
கும்பமேடத் ததிபதி கூடினும்
வருகு மந்த மனையது தன்னிலே
வம்மி சங்களும் நாசம தாகிடும்
பெருகுஞ் செல்வமும் பின்னம தாகிடும்
பெண்டு பிள்ளையும் பூஷணம் நாசமாம்
கருகு மிந்தப் படியது காண்கிலோ
கண்டு வீம கவிசொன்ன தாகுமே. 150

இ-ள். குருவும் சனியும் பாவருடன் கூடி நிற்கினும், கும்ப மேடத் ததிபதியாகிய சனியும் செவ்வாயுங் கூடினாலும், சாதகன் வம்மிசமும், பெருகுஞ் செல்வமும், பெண்டு பிள்ளைகளும், பொன் பூஷணங்களும், நாசமாய்ப்போகும் இந்தப்படி வந்த கிரகங்களைக் கண்டு மிந்த வீமகவி விந்தையாய்ச் சொன்னதைச் சொல்லுவாயாக எ-று.

வேறு

பேசி வரும் நாலாதி பாவனாகிப்
பின்னுமொரு திரிகோணம் பாவியேற
நேச மதா யிரண்டாதி மிதுனத் தோனும்
நிகழ்த்தெட்டுப் பனிரண்டோன் தானுங்கூடில்
வாசமறக் குருவுடனே சேர்ந்திட்டாலும்
மகாவித்தை தனவானாய் மகிழ்ந் தெந்நாளும்
பேசலாம் சோதிடநூல் கற்றுவாழ்வான்
பெருமையதாய் வீமகவி பேசுங்காலே. 151

இ-ள். நாலாமிடத்ததிபதி, பாவனாகி திரிகோணத்தில் ஏறி யிருந்தாலும் இரண்டாமிடத் ததிபதியும் மிதுனத்தோனாகிய புத னும், எட்டுக்குடையோன், பனிரண்டுக் குடையோன் கூடினாலும்,

குருவுடன் சேர்ந்திட்டாலும் ஜாதகன் மகாவித்தை தனவானாய் மகிழ்ந்தெந்நாளும், பேசிடுவன், சோதிட நூல் கற்றுவாழ்வான் என்று வீமகவி பெருமையாய் பேசினதை அருமையாய்ச் சொல்லுவாயாக எ-று.

பணியும் ரெண்டுக் குடையவன் பாவியாய்ப்
பணியும் நல்லுற வேழிடத் தோனுமே
பணியுஞ் சிங்கத் ததிபதி கூடினும்
பணியும் நல்லுறப் பான்மை பெறுவனே. 152

இ-ள். இராகுவும் இரண்டுக் குடையவன் பாவனுகி யிதமாயிருக்க, ஏழாமிடத்தோனும், சிங்காதிபதியாகிய சூரியனும் கூடியொன்றாய்ச் சேர்ந்திருக்கில் ஜாதன் தகுதியான பொன் பொருள் பூமி கன்று காலி பெண்டு பிள்ளைகள் குடும்ப விருத்தி சகல பாக்கியத்துடன் இல்லறமே நல்லறமெனச் சுகம்பெற்று வாழ்ந்துவருவன் எ-று.

வேறு.

எட்டு ஆறுக் குடையவன் பாவியாய்
ஏழு அஞ்சிற் சனிமதி கூடினும்
திட்ட மாய்க்குரு வேழிடம் நிற்கினும்
சேர வெட்டுக் குடையவன் நீசத்தில்
வட்டமாக இருந்திடச் சாதகன்
மனையுமில்லை மனையது வேறதாம்
இட்ட மாகப் புதன் சனி நீசத்தில்
இருக்கத் தானும் மனையது இல்லையே. 153

இ-ள். எட்டு ஆறுக்குடையவன், கெட்டபாவியாய் ஏழுஅஞ்சாமிடத்தில் வாழும் சனியும், சந்திரனுங்கூடி யிருந்தாலும், திட்டமாய் ஏழாமிடத்திற் குருவிருக்கினும், எட்டுக்குடையவன் நீசமாயிருந்திடச் சாதகனுக்கு மனையில்லையாம். வேறே மனையில் வசித்திருப்பான். புதனும் சனியும் நீசத்திலிருந்தால் ஜாதகனுக்கு மனையது இல்லையாம். எ-று.

பதியும் ரெண்டுக் குடையவன் பாவியாய்
பத்து எட்டிற் பனிமதி சேரிலோ
பதியும் மூன்று மனைக்கே அதிபதி
பாம்பு கூடி யிருக்கினும் பாழ் மனை

பதியும் பத்தெட்டிற் பங்குதான் நின்றிடப்
பானு வுங்குரு கூடி யிருக்கிலோ
பதியுந் தானில்லம் இருகட்டில் மெத்தையும்
பான்மை யாகவும் வாழ்வது ஜாதகம். 154

இ-ள். இரண்டாமிடத்துக் குடையவன் பாவியாகி,எட்டு பத்தாமிடத்தில் சந்திரனுடன் கூடியிருக்க—ஜாதகன் மூன்றுமனைக்கு அதிபதியாயிருப்பன், பாம்பாகிய இராகு கூடியிருக்கில் மனைபாழாய்ப்போகும். மேற்படி தானங்களில் சனியிருக்க அத்துடன் குருவுஞ் சூரியனுங் கூடியிருக்க, ஜாதகன் கட்டில் மெத்தையில் சயனித்து சுகமனுபவிக்கும் வாழ்வுடையவனாக இருப்பன் எ-று.

வே று.

குருவும் புந்தி சனி நான்கிற் குலவும் எட்டிற் குஜனிருக்கப்
பெருகு மாறுமிடத்தில் ரவி பேணியிருக்க லாபமுடன்
வருகுந் தனந்தானுண்டாகி வாழ்வு குன்றும் வர வரவே
தருகும் மனையில் ஆணில்லை சாற்றும் மனையும் பாழாமே. 155

இ-ள். குருவும் புதனும் சனியும் நான்காமிடத்திற் கூடியிக்க எட்டிற் செவ்வாய் இருக்க, ஆறுமிடத்திற் சூரியனிருக்க, ஜாதகனுக்கு தனலாபமுண்டாகி வாழ்வு வரவரக்குன்றும், மனையில் ஆண் சந்ததியில்லை, அம்மனையும் பாழாகிப்போகும் எ-று

வருமே மிதுனத் ததிபதியும் வந்தேயேழா மிடத்ததிபர்
ஒருவர் மனையிற் றுணிருக்க உற்றவியமா றெட்டாதி
திருவு மவனில் சேர்ந்தாக் காற் செல்வம் நாசந் தப்பாது
மருளப்பீடை ரோகமது வந்தே போகுங்குஷ்டமதே. 156

இ-ள். மிதுனத் ததிபதியாகிய புதனும், ஏழாமிடத் ததிபதியும், ஒருவர் மனையிற்றுனிருக்க, அத்துடன்-ஆறு-எட்டு-பனிரண்டுக் குடையவர்கள் சேரில், செல்வம்-நில்லாமற் சிதைந்துபோகுந் தப்பாது, குஷ்டரோகமும், கஷ்டபீடைகளும் வந்துபோகும்

நாலாமேழோன் லாபத்தோன் நவிலுமென்பா னுதிமதி
மேலாங் கேந்த்ரம் ஆக்ஷியுச்சம் விளங்கத்தனமே வுண்டாகும்
பாலன் பிறக்கப் பூமியுண்டாம் பழையமனையே பாழ்கிடக்கும்
சில முறமே தனம் புதைப்பான் செல்வமைந்த ருண்டாமே.

இ-ள். நாலு—எழு-பதினொன்று-ஒன்பதா மிடத் ததிபதிகள், கேந்திரத்திலாவது ஆட்சி யுச்சத்திலாவது, இருப்பார்களாகில்,ஜாத

கனுக்கு, மிக்க செல்வமும், தக்கபொருளும், உண்டாகும். புதல்வன் பிறக்கப் பூமியுண்டாம். பழையமனை பாழாய்க்கிடக்கும். புதிய மனை கட்டிக் குடியிருப்பன். நிட்சேபமாகத் தனம் புதைப்பன். நீங்காத செல்வமும், பாங்கான மைந்தரும் உண்டாயிருக்கும் எ-று

ஆட்சியோ டுச்ச கேந்த்ரம் அம்புலி பௌமன் சுங்கன்
தாட்சணை யோடிருக்கத் தனமுடன் மெத்தை வீடாம்
மாட்சியாம் நஞ்சை புஞ்சை மன்னர்க்கு மன்னனவன்
காட்சியாம் ராஜயோகங் கண்டிதைச்சொல்லுவாயே. 158

இ-ள். சந்திரன்- செவ்வாய்- சுக்கிரன்- இவர்கள்- ஆட்சியுச்சம்—கேந்திர ஸ்தானங்களிலிருந்தால், ஜாதகன் மெத்தை வீடுடையவனகவும், தனவந்தனகவும், நஞ்சை புஞ்சை பூமியுடையவனகவும், மன்னர்க்கு மன்னவனகவும், ராஜயோக முடையவனகவும், பெண்ணே! மண்ணிலுள்ளோர்க்கு வழுத்துவாயாக எ-று.

சொல்லே காரி லாபத்திற் சூழ்ந்தே யிருக்க மதியுடனே
எல்லாப் பொருளுந் தனம்பூமி இபல்பாய் மைந்தர்க் குண்டா
செல்லும் நாலாறிற் சனியுஞ்சேர்ந்தாலாணுமுண்டாகும் [கும்
எல்லை தேடித்தனம் புதைப்பான் இவனுக்கில்லை நிதிதானே.

இ-ள். பதினோராமிடத்திற் பங்குபாதனகிய சனி பகவானுடனே சந்திரபகவானுஞ் சேர்ந்திருந்தால் ஜாதகனுக்கு தனம் பூமி சகலவஸ்துக்களும் மைந்தரும் உண்டாகும். நாலாமிடம் ஆறுமிடத்திற் சனியிருந்தால் ஆண்மகவுண்டாகும். ஆனல் ஜாதகன் தனந்தேடி நிட்சேபம்புதைப்பான். இவனுக்கு அத்தனம் இல்லையென்று சொல்லுவாயாக எ-று.

வேறு.

நீடிய வியத்திற் பொன்னன் நீலன்சேய் கூடினுலும்
தேடிய எட்டிற் புந்தி செங்கதிர் கவிநின் றாலும்
கூடிய மனையின் பக்கம் குடும்பமே மூன்று நாசம்
வாடிய வடபுறத்தின் மனையது நாச மாமே. 160

இ-ள் பனிரண்டா மிடத்திற் பாப்பானகிய வியாழனும், பங்குபாதனகிய சனியும், பௌமனகிய செவ்வாயும், கூடியிருந்தாலும், எட்டாமிடத்திற் புதனும், சூரியனும், சுக்கிரனும், சேர்ந்து நின்றலும், ஜாதகன் மனையின் பக்கம் தோன்றிய குடும்பமூன்றும் அழியும். வடபுற மிருக்கும் மனையும் நாசமாகு மென்று சொல்லுவாயாக எ-று.

சொன்னதோ ரொன்பான் பத்திற் சோமனும் நிற்பானாகில்
இன்னிலத்தீன்ற தாய்க்கு இடத்தொடை மச்சஞ் சொல்லு
அன்னவளுடற்பிறந்த ராறுபே ரவைகளுக்குள்
மன்னிடு மிரண்டு பேர்கள் மாமன் மாரென்று சொல்லே. 161

இ-ள். ஒன்பதாமிடம் பத்தாமிடத்தில் இன்புள்ள சந்திரன் நின்றானாகில், ஜாதகனையீன்ற தாயாருக்கு இடது தொடையில் மச்சமுண்டென்றுசொல்லுவாய். பின்னும், அவள் கூடப்பிறந்த சகோதரங்கள் ஆறுபேருண்டென்றும், அதில் மாமன் மாரிரண்டு பேரென்றுஞ் சொல்லவும் எ-று.

கூறிய லாபந்தன்னிற் குருசனி யிருந்தாராகில்
தேறிய மனைக்குத் தெற்கு தென்வடல் சந்து சொல்லு
மாறியே அதற்குத் தெற்கு வமிசமு மற்ற வீடாம்
மீறியே ஆரும் வீட்டின் மெல்லியு மோடுவாளே. 162

இ-ள். பதினோராமிடத்திற் பதிபுகழுங் குருவும், சனியுங்கூடியிருப்பாராகில், ஜாதகன் மனைக்குத் தெற்கே தென்வடலோடிய சந்து ஒன்றுண்டென்றும், அதற்குத்தெற்கே வம்மிசமற்று இம்மிசைபெற்ற வீடென்றும், அதற்கு ஆரும் வீட்டுக்காரி ஊரில் ஒருவனைக்கூட்டிக் கொண்டோடிப் போவாளென்று சொல்லுவாயாக எ-று.

அஞ்சேழிற் பாவர் நிற்க அதிபதி யதிலே சேரத்
துஞ்சியே மாமன் வீட்டிற் சூனிய மிருக்கு தென்க
வஞ்சியே தென் புறத்தில் வளர்ந்திடுங் குப்பைமேடு
தஞ்சமா யவ்விடத்திற் றுபித்த தென்று சொல்லே. 163

இ-ள். அஞ்சாமிடம் ஏழாமிடத்திற் பாவர் நிற்க, அவ்வீட்டுக் கதிபதி அதிலே சேர்ந்திருந்தால் ஜாதகன் மாமன் வீட்டில் சூனிய மிருக்கு தென்று சொல்லவும். அது எவ்விடத்தி லிருக்குதென்று கேட்டால் வீட்டுக்குத் தென்புறம் குப்பை கொட்டி மேடாக வளர்ந்திருக்கும். அக்குப்பைகளை யெல்லாம் அப்புறப்படுத்தி மண்வெட்டியால் வெட்டிப் பார்க்கச் சூனியம் வைத்தது வெளியாகும். அதையெடுத்து ஓடுகிறகங்கையிற்போடவும். அதன் பின் அவ்வீட்டிற் சுகமுண்டாம் எ-று.

ஐயமே னின்னங் கேளு அதன் விபரத்தைச் சொல்வேன்
வையமேற் றேசம் விட்டு வந்தவன் சொந்த மாவான்

தையலே அரவங்காரி சற்குரு சேர்ந்தாராகில்
பையவே ஆடுமாடு பறந்திடும் ஆஸ்தி யெல்லாம். 164

இ-ள். தையலே ஐயங்கொள்ளாது இவ்வையக மீது உய்வோர்க்கு இன்னமுங்கேளு அதன் விபரத்தைச் சொல்லுவேன். அன்னிய நாட்டான் தன் தேசம் விட்டுவந்தவன் இந்த வீட்டைச்சொந்தமாகக் கைக்கொள்ளுவான். மேலே சொன்ன அஞ்சு ஏழில் அரவாகியராகுவும், காரியாகிய சனியும், சற்குருவாகிய வியாழனுங் கூடியிருந்தால் அம்மனையிலுள்ள ஆடுமாடுகளும், தேடும் பொருள்களும், கூடும் ஆஸ்திகளும் மிஞ்சாது பஞ்சாய்ப் பறந்துபோகும் எ-று.

ஆகுமே செவ்வாய் புந்தி யம்புலி யாவஞ்சேரில்
தாகுமே மனைக்குக் கீழ்பாற் சந்ததி யில்லா வீடாம்
வாகுமே அதன்கீழ் வீட்டான் மனைவியரிரண்டு பேராம்
போகுமே அதன்கீழ் வீட்டான் பொல்லாத துஷ்டனுமே. 165

இ-ள். மேற்சொன்ன வண்ணம் ஆகுமே என்றதினால், அஞ்சு ஏழாமிடங்களில், செவ்வாய்-புதன்-சந்திரன்- இராகு சேர்ந்திருந்தால் ஜாதகன் மனைக்கு கீழ்புறம் சந்ததியில்லாவீடாம். அதற்குக் கீழ்புறமிருக்கும் வீட்டான் இரண்டுதார முள்ளவன். அதற்கும் கீழ்புறமிருக்கும் வீட்டான் பொல்லாத துஷ்டனென்று சொல்லவும் எ-று.

லக்கினம் நான்கோடேழில் நலமிலாப் பாவர் நிற்கில்
மிக்கநற் சனியும் நோக்க விரயத்திற் சுபர்கள் நிற்க
தக்கதோர் மனைக்குள்ளாகத் தனித்தனி யடுக்கு மெட்டாம்
இக்கண மிருக்குமென்றே இயம்பினர் வீமர் தாமே. 166

இ-ள். லக்கினம் நான்கு-ஏழாமிடங்களிற் பாவர்கள் நிற்க, அதைச் சனியும் பார்க்க, பனிரண்டாமிடத்திற் சுபர்கள்நிற்க, ஜாதகன் வீட்டுக்குள் அடுக்குப்பானைகள் வரிசையாக எட்டடுக்கு அடுக்கியிருக்கும் என்று வீமகவி சொன்னதை பூமியிலுள்ளவர்க்குத் தாமதமன்றிச் சொல்லுவாயாக எ-று.

ஆறினில் மூன்று நான்கில் அமரரின் குருவே நிற்கப்
பாறினிற் புதனே நோக்கிப் பணியுமே ழாமடுக்கிற்
கூறிய லக்கினங்கை கொண்டவன் நீசம் பெற்றால்
சீறிய மனையில் நாலா மடுக்கினிற் பணமுஞ் செப்பே. 167

இ-ள். ஆறு-மூன்று-நாலாமிடங்களில் தேவகுரு நிற்க, அதை ப்புதன் நோக்க, ஏழாமடுக்கிற் பூஷணமிருக்கும். லக்கினத்தி லிருக் கும் கோள்நீசம் பெற்றிருந்தால் அம்மனையில் நாலாமடுக்கிற் பண மிருக்குமென்று சொல்லவும் எ-று.

அஞ்சுடனேழு பத்த தாகுமக் கேந்திரத்தில்
நெஞ்சுறப் பாவர் புந்தி நின்றிடப் பிள்ளை யேழாம்
கொஞ்சிடுங் குருவே நிற்கக் குதிரையு மெட்டதாகும்
வஞ்சியே யிருக்கு மென்று வழுத்தினர் வீமர்தாமே. 168

இ-ள். அஞ்சு ஏழு பத்தாமிடமாகிய கேந்திர ஸ்தானத்தில், பாவரும் புதனும் நிற்பாராகில் ஜாதகனுக்குப் பிள்ளைகள் ஏழு பிற ந்து வாழ்ந்திருக்கும். அத்தானங்களில்குருநிற்க, குதிரையும் எட்டு இருக்குமென்று பெண்ணே? வீமகவி சொன்னதைச் சொல்லுவா யாக எ-று.

வே று.

பணியும் ரெண்டுக் குடையவன் பாவியாய்ப்
பத்து ஐந்திற் பனிமதிசேரிலோ
பணியும் மூன்று மிடத்துக் கதிபதி
பாம்பு கூடியிருக்கினும் பார்மனே
பணியும் நாலிலே மந்தனிருந்திடப்
பானு வுங்குரு கூடியிருக்கிலோ
பணியுந் தன்னிலே மெத்தையுங் கட்டியே
பான்மை யாகவும் வாழ்வது சாதகம். 169

இ-ள். எவரையும் இன்சொல்லால் இணங்கி வணங்கும்படி செய்யும், இரண்டுக்குடையவன் பாவியாயும், சந்திரனோடு சம்பந்த ப்பட்டு ஐந்து பத்திற் சேர்ந்திருந்தாலும், தொண்டு செய்யும் மூன் றுமிடத்துக்கதிபதியும் இராகுவுங் கூடியிருந்தாலும், பூமியின் கண் மனுக்கள் வசிக்கும், வீட்டு வேலையைப் பற்றியிருக்கும் சுகஸ்தான மாகிய நாலாமிடத்தில் சனி சூரியன் குரு இம்மூவரும் ஒன்றாய்ச் சேர்ந்து நிற்கினும், ஜாதகன் கெட்டி மச்சுவீடு கட்டியும், கட்டில் மெத்தையிற் சயனித்தும், ஆடையாபரணங்களைத் தானே சேகரித் தும், குடும்பவிருத்தியாக வாழ்ந்து வருவானென்று சொல்லவும் எ-று.

வேறு

அஞ்சாமிடத்திற் சனிபாவர் அமர்ந்து பாவருடன் கூடி
மிஞ்சா விரைய மெட்டாறில் வெள்ளியிருக்க யோகமதாம்
வஞ்சமாகும் மனைகேடாம் மக்கள் சாகும் மனையதனிற்
றஞ்சாப் பாவருடன் கூடிற் சொல்லும் மாமனென் றென்றே.

இ-ள் அஞ்சாமிடத்திற் சனி பாவருடன் சேர்ந்திருக்கப்பின்னும் பாவர் கூடினும், ஆறு-எட்டுப் பனிரண்டாமிடத்திற் சுக்கிரனிருக்கினும், ஜாதகனுக்கு யோகமாம். என்னயோக மென்றால், மக்கள் சாவதும் மனைகேடாகும். வஞ்சனை செய்வார்கள். சுக்கிரனோடு உக்கிரமான பாவர்சேரில் ஜாதகனுக்கு மாமன் ஒருவனிருப்பானென்று உறுதியாகச் சொல்லவும் எ-று.

மாமன் வீட்டிலிருப்பானும் மக்கள் பிறந்து சாகுமது
சாமனுடைய லக்கினத்திற் றனித்தே யிருக்க மனைகேடாம்
மாமன் மக்கள் ஆஸ்திகளை வைத்து வாழும் யோகமதாம்
சாமன் பிறக்கில் நோயாவான் தானே மிடியாற் சாகுவனே.

இ-ள். ஜாதகன் மாமன் வீட்டிலேயே குடியிருப்பாக இருப்பன். மக்கள் பிறந்தால் தக்காமற்சாகும் சாமனாகிய புதபகவான் லக்கினத்தில் தனியாக இருக்க மனைகேடாகும். மாமன் மக்கள் ஆஸ்திகளை யெல்லாம் தானேவைத்து வாழும்படியான யோகமுள்ளவனாக இருப்பான் புதல்வன் பிறக்கில் நோயுள்ளவனுவன், தரித்திரத்தினாற்றானே சாகத்துணிவன் எ-று.

ஆகும் மனைக்குத் தென்புறத்தில் அமர்ந்த மனையே பாழாகும்
தாகமந்த மனைவடக்கு சாமி வீடு தப்பாது
போகுமந்த மனைகிழக்கிற் பொல்லாப் பாவர் வீடாகும்
யூக மிகுந்த சோதிடத்தை யுரைத்தார் பெரியோ ரருளாலே.

இ-ள். ஜாதகன் மனைக்குத் தென்புறத்திலிருக்கும் மனைபாழாகும், அந்த மனைக்கு வடபுறம் சாமி வீடாகும், கீழ்புற மிருக்கும் மனை பொல்லாத துஷ்டர்கள் வாழும் மனையாகும் என்று வீமகவி சோதிடம் பெரியோராருளாலே சொன்னதாகச் சொல்லவும் எ-று.

வேறு.

வாட்டமுறுஞ் சட்ட மத்துக் கதிபன்றானும்
௩ வளம் பெரிய கேந்திரத்திலேறி நின்றால்

கூட்டமுறுங் தாய் பிறந்த யிடத்திலே தான்
நலமான அடையாளஞ் சொல்லக்கேளு
கூட்டமுறுஞ் சசிகண்டால் கிழமேல்வீதி
குறிப்பாகுந் தென்வடக்கு வீதிசேய்க்கு
நீட்டமுறுந் தெருவின்முறை கண்டு நீயும்
நிலவரமாப் பலனறிந்து நிகழ்த்துவாயே. 173

இ-ள். ஆறுமிடத்துக் கதிபதி ஏறியிருக்குந்தான கேந்திரத் தானமாயிருந்தால் ஜாதகனைப் பெற்றெடுத்த மாதாபிறந்த இடத்திலே அடையாளம் சொல்வேன்-கேட்பாயாக கூட்ட முற்ற நட்சத்திரங்களுக்கு வேந்தனாகிய சந்திரன் கண்டால் கிழக்கு மேற்கு ஓடிய வீதியாகும். செவ்வாய் கண்டால் தெற்கு வடக்கு ஓடிய வீதியாகும் என்று வீமகவி சொன்ன சோதிட முறைகண்டு தெருவின் பலனறிந்து பெண்ணே? நீயும் நிகழ்த்துவாய் எ-று.

காரணமாய்ப் புதனிருக்கக் கண்டாயானால்
கருத்துளறு கிழக்கு மேற்கான வீதி
பூரணமாய் வேதியரைப் பாவர் கண்டாற்
பொருந்து மதிற் சந்துவரும் அருகிலேதான்
ஆரணமாங் குருவெள்ளி கண்டாயானால்
அன்னையவள் பிறந்தமனை யீனமாகும்
சீரணமாஞ் சனியிருக்கக் கண்டாயானால்
செப்புமில்லங் கீழ்புறமும் வின்னமாமே. 174

இ-ள். புதனிருக்கக் கண்டால் கிழக்கு மேற்கான வீதி குருவைப் பாவர் பார்த்தால் அதனருகே ஒருசந்து தோன்றும். வியாழனும் வெள்ளியுஞ் சேர்ந்திருந்தால் அன்னை பிறந்தமனை யீனமாகும். சனியிருக்கக் கண்டால் மனைவியின் கீழ்புறம்வின்ன முண்டாயிருக்கும் எ-று.

அன்னமே அரவிருக்கக் கண்டாயானால்
அம்மனைக்கு அடுத்த வீடதுவும் பாழாம்
பின்னமே கேதுவுந்தா னிருக்கக் கண்டால்
பிசகாகும் அம்மனைக்கு வடபுறத்தில்
சின்னமே குளிகனுந்தா னிருக்கக் கண்டால்
செப்புவாய் தென்புறத்திற் பாழாய்ப் போகும்
முன்னமே கிரகங்கள் நிலமை கண்டு
முறைவீம கவிசொன்ன மொழியி தாமே. 175

இ-ள். பெண்ணே? கண்ணே காதாகப்பெற்ற இராகு பகவான் இருக்கக் கண்டாயானால் ஜாதகன் மாதாமனைக்கு அடுத்த வீடுபாழதாகும். கேது விருக்கக் கண்டால் அம்மனைக்கு வடபுறத்தில் இருக்கும் மனை பிரகாசமற்றுஜீரணமுற்று நாசமடையும். குளிகனிருக்கக்கண்டால் தென்புற மிருக்கும் மனைபாழாய்ப் போகும். இன்னமும் முன்னமே கிரகங்கள் நிற்கும் நிலைமை கண்டு வீமகவி சொன்ன சோதிடத்தாலுணர்ந்து சொல்லுவாயாக எ-று.

அன்னமே இன்னமொரு வார்த்தை கேளு
அம்புலியுங் கேதிருந்து கூடி வாழ்ந்தால்
பின்னமிலாப் பாட்டனுமே பாட்டியாரும்
பிரபலமாய் வாழ்ந்திருந்தார் முன்னாலே தான்
சொன்னபடி செவ்வாயுஞ் சேர்ந்து நின்றார்
சுகமில்லை மாமனுட வர்க்கஞ் சொல்லு
இன்னமொரு சனியிருக்கக் கண்டாயானால்
ஏற்குமோ மேற்கு மனை பாழாய்ப் போமே. 176

இ-ள். அன்ன நடையும் பின்னல் சடையும் வின்னவுடையுமுள்ள பெண்ணே? இன்னமொரு வார்த்தையை இயம்புவோங் கேட்பையாக, சந்திரனோடு கேது கூடி யிருந்தால், பாட்டனும்பாட்டியும் பிரபலமாய் முன்பு வாழ்ந்திருப்பார்கள், அத்துடன் செவ்வாய் சேர்ந்தால், மாமனுடையவர்க்கம் சுகமில்லையாம், சனிசார்ந்திருந்தால் அம்மனைக்கு மேல்புறமிருக்கும் மனை பாழாய்ப் போகும் எ-று.

ஆரென்றால் மாமனுட வர்க்கஞ் சொல்வேன்
அம்புலியுஞ் சனியிருக்கக் கண்டாயானால்
பாரென்றார் ஆறுபேர் திடமதாகும்
பாருலகிற் செவ்வாயுங் கண்டாயானால்
நேரென்று லச்செவ்வாய்க் கொன்று போச்சு
நிச்சயமாய்ச் சனிக்கொன்று தப்பாதேகும்
சாரென்றார் கிரகங்கள் நீசத்தோடு
சத்துருவாய்த் தானிருக்கத் தோற்பான் பாரே. 177

இ-ள். மேலே சொல்லியது ஆரென்றால் மாமனுடவர்க்கம் பெண்ணே? விபரஞ்சொல்வேன். கேட்பாயாக சந்திரனும் சனியுங் கூடியிருக்கத் கண்டாயானால் மாமன் மார் ஆறுபேரென்று திடமா

ய்ச் சொல்லவும். அத்துடன் செவ்வாயும் சேர்ந்திருந்தால் ஒருநாமம் திருநாம மில்லாமற்போகும், சனிபகவான் இருப்பதால் அதற்கொரு மாமன் நிச்சயமாய்த் தப்பாமலேகும் நவக்கிரகங்களில் சுபக்கிரகம் பாவக்கிரகம் பகைநீசம்பெற்றிருக்கிறதோ? அத்தனைமாமன்மார்களைத் தோற்பா னென்று சொல்லவும் எ-று.

தோற்றமதி லின்னமொரு சூளுவைக்கேளு
சுக்கிரனுஞ் சுற்குருவுங் கண்டே யானும்
ஏற்றமென நாலுபேர் திடமாய்ச் சொன்னேன்
எப்படியும் நீசனுக்கே ஒன்று தள்ளு
ஆற்றலாய்ச் சத்துருவுக் கொன்று தள்ளு
அந்தகனும் முடவனுக்கே ஒன்று தள்ளு
நாற்றிசையும் போற்றிடவ மாமனென்றே
நலமாக இருப்பனென நாடிச் சொல்லே. 178

இ-ள். பெருக்கமான மாமன் வர்க்கத்தைச் சுருக்கமாகச்சொல்லத் துணியும்போது தேவகுருவாகிய வியாழ பகவானும், அசுர குருவாகிய சுக்கிரபகவானுங்கூடி யிருக்கக் கண்டேயானும் நாலு மாமனுண்டென்று சொன்னேன் அவர்களோடு சனிசத்துரு நீசம் பெற்ற கிரகங்கள் சேரில், அவர்களுக்கு ஒன்று தள்ள வேண்டும் எப்படியெனில் முடவனாகிய சனிக்கு ஒன்று தள்ளு, திடவானாகிய சத்துருவுக்கு ஒன்றுதள்ளு, நீசம்பெற்ற கோளுக்கு ஒன்றுதள்ளு இந்தவிதம் வந்த கோளுக்கு முந்தியபடி சொல்ல வேண்டும். எங்கும் புகழுங் கீர்த்தியுந் தங்கியிருக்கும் மாமன் ஒருவன் உண்டென்று கண்டு மொழியாளான பெண்ணே? விண்டுரைப்பாயாக எ-று.

ஐயமில்லை வையமதில் மாமன் வர்க்கம்
அம்மம்மா ஆறிடத்தோன் பெலவானாகில்
உய்யகளத் திரபுத்ர குடும்பந் தன்னில்
ஊக்கமுடன் சேர்ந்திருப்ப னுண்மையாகப்
பைய வக்கோள் துர்ப்பெலங்க ளடைந்தா ராகிற்
பலத்தகுடி வரவரவே கொடித்துப் போகும்
பொய்யாகச் சொல்லவில்லை யிந்நூல் பார்த்தே
புகழ்பெறவே சூளுவறிந்து பலனைச் சொல்லே. 179

இ-ள். சந்தேகஞ் சற்றுமில்லை, இந்தவுலகில் வந்த மாமன்வர்க்கத்தை எந்தவிதஞ் சொல்லவேண்டுமென்றால், ஜாதகனுக்கு ஆறு

மிடத்தோன் பெலம் பெற்றிருப்பானாகில்-மாமன் வர்க்கம்-மனைவி மக்களுடன் சேர்ந்திருந்து வாழ்ந்து வருவான். உண்மையாக ஊக்க முள்ளவன். குடும்பமும் விருத்தியடையும். அந்த ஆறுமிடத்தோன் துர்ப்பெலம் பெற்றிருந்தால், மாமன் குடும்பம் விருத்தியானது வர வரக் குறைவடைந்து நொடித்துப்போகும் என்று வீமகவிசொன்ன சோதிட நூல் பொய்யாகமாட்டாது. இந்நூல் கிடைப்பது மிக்க அருமை, தக்க பெரியோர்களிடமிருக்கும் எந்நூல் இந்நூலுக்கிணை யாகமாட்டாது. இதன் பலனைச் சுளுவறிந்து புகழ்பெறச் சொல்லவும் எ-று.

ஏதினால் நொடித்ததென வுமையுங் கேட்க
இதன் விபரம் ஈச்சுரன்தா னெடுத்துச் சொல்வார்
நீதியா யிலக்கினத்துக் கதிபன்றானும்
நிச்சயமாய்க் கேந்திரத்தி லேறி நிற்க
ஓதிடுவாய் தாயொருத்தி யொருவனுக்கே
உத்தமியாள் வெளிப்படு நாள் முதலதாகச்
சேதியென்ன செல்வது குறைந்து போச்சு
சிறந்தமனை பாழ்மனையாய்ச் செப்பலாமே. 180

இ-ள். ஏதினாலிந்தமனை நொடித்ததென்று ஈஸ்வரிகேட்க, ஈஸ்வரன் இதன் விபரம் எடுத்துச் சொல்லுவார். பெண்மணிக்குட் சிறந்த கண்மணியே? எண்ணிப் பார்ப்பாயாக. ஜாதகநீதியாக லக்கினாதிபதி கேந்திரத்திலேறி யிருக்க, அவன் மாதாவர்க்கத்தில் கூடப்பிறந்த மாதொருத்தி மணஞ்செய்து மணவாளனோடுவெளியே றிப்போக, அவ்வுத்தமியோடு செல்வமுங் கூடச்சென்றது. ஆகையால் மனையும் பாழாம். குடும்பமும் குறைந்துபோச்சுதென விரைந்து செப்பினோம் எ-று.

பாராமற் பாழ்மனையே யாகுமென்று
பாருலகிற் சொல்லவந்தீர் பலமாய் நீரும்
நேராம லெவ்வழியிற் போகுமத்தை
நிலவரமா யெனக்கிங்கு நிகழ்த்தவேண்டும்
சீராம லென்மீது கருணை வைத்தே
செப்பு மதன் விபரமதைச் செவ்வையாகப்
பேராம லிருக்கு மந்தக் கிரகந்தன்னைப்
பெலமறிந்து அப்பலனைப் பேசுவீரே. 181

இ-ள். பரமன் பாதத்திற் பார்வதி பணிந்து சுவாமி! தாங்கள் சொல்லிவந்த ஜாதகன் தாயார்மனை பூதலத்திற் பாழாய்ப் போனதற்கு காரணம் என்ன. எந்தவழியில் எந்தக் கிரகத்தால் எப்படி பாழாய்ப்போகும். அதன் விபரத்தை செவ்வையாகத் தெளிந்து கோட்களின் பெலமறிந்து அப்பலனை என்மீது கருணை வைத்துச் சொல்லவேண்டு மென்று பிரார்த்தித்தாள் எ-று.

காரணமாம் பதினொன்றுக் குடையோன் றானுங்
காணுமிடம் பெலங்குறைந்து நீசமாகிப்
பூரணமாம் மார்த்தாண்டன் சேர்ந்து நிற்கப்
பூதலத்தி லிவனுக்கு மூத்தோ னில்லை
ஆரணமாம் சுபக்கிரகங் கூடிநிற்க
ஆணில்லை பெண்மக்க ளிருக்குஞ் சொன்னேன்
சீரணமாம் சனிசெவ்வாய் சேர்ந்து நிற்கச்
செப்புமவன் சாதியதைத் தெளிவாய்ச் சொல்லே.

இ-ள். பதினோராமிடத்துக் கதிப திநீசமாகிப்பெலங்குறைந்து சூரியனோடு சேர்ந்து நிற்க ஜாதகனுக்கு மூத்த சகோதரமில்லை, சுபர் கூடியிருக்குமாகில் பெண்சகோதரங்களுண்டாம், செவ்வாயுஞ் சனியுஞ் சேர்ந்திருந்தால் இவ்வாறென்று ஜாதி விவரஞ் சொல்லவும் எ-று.

நல்லதொரு நாயகியே சொல்லக்கேளு
நன்மையுறும் ஆறுக்கு அதிபனோடு
பல்விஷமாம் ராகுவுடன் கூடி நிற்கப்
பலமாகச் சனிகண்ணுற் பார்க்குமாகில்
சொல்லுவாய் மாமன்மார் மூன்று பேர்கள்
சுகமில்லை பரதேசம் ஒருவன் போவான்
அல்லலுறும் பயமில்லை யிரண்டுபேர்கள்
அதிலொருவன் தான்வலுத்து நிற்பான் பாரே. 183

இ-ள். பார்வதியைப் பார்த்து பரமசிவன் சொன்னதாவது. பெண்மணிக்குட் சிறந்த கண்மணியே? சொல்வதைக் கேட்பாயாக. ஆறாமிடத்ததிபதியோடு அரவாகிய இராகு கூடியிருக்க, அதைச் சனி கண்ணுற்பார்க்க, ஜாதகனுக்கு மூன்று மாமன்மார்களுண்டென்றுசொல்லவும். அதில் ஒருவன் பரதேசம் போவான். ஒருவனுக்குப் பயமில்லை, இருக்குமிடந் தெரியாது, ஒருமாமன் வலுத்துக் குடும்பத்தில் வாழ்ந்திருப்பான் எ-று.

வலுத்திருப்பா னொருமாம னென்று சொன்னீர்
மாயமா யின்னொருவ னெங்கேபோனான்
அலுத்துத்தான் தேசம்விட்டுப் போய்விட்டானோ
அல்லதவன் எமலோகஞ் சேர்ந்திட்டானோ
உலுத்து வெட்கங் கெடவயிறு வளர்த்துக் கொண்டே
ஊர் சுற்றி வாடிநிற்ப னுண்மை யுண்மை
பெலத்திருக்க மாட்டான்காண் செல்வமில்லை
பின்னையுமே அலைச்சலாய்த திரிவான்தானே. 184

இ-ள். உமையவள் உமாபதியைப் பார்த்துச் சொன்னதாவது சுவாமி? தாங்கள் முன்சொன்ன ஜாதகனுக்கு மூன்றுபேர் மாமன் மாரென்றீர். அதில் ஒருவன் குடும்பத்தில் விருத்தியாகி வாழ்ந் திருப்பானென்றும், மற்றொருவன் பரதேசம் போவானென்றும், இன்னொருவனுக்குப் பயமில்லை யென்றுஞ் சொன்னீர்கள், அவன் கதி இன்னதென விளங்கவில்லை. அவன்மாயமாய் எங்கேபோனான் அலுத்துத்தான் தேசம் விட்டுப் போய்விட்டானோ (அல்லது) எம லோகஞ் சேர்ந்திட்டானோ என்று அம்மை கேட்க, அதற்கு ஐயன் சொன்னதாவது, உலுத்து வெட்கங்கெட்டு ஊர்சுற்றி வயிறுவளர்ப் பான் ஒருவேளை யுண்டும், மறுவேளையுண்ணாமலும், தெருவில் நின்று தியங்குவான், மயங்குவான், வாடிநிற்பான். இஃதுண்மை ஓரிடத்தில் பெலத்திருக்க மாட்டான். கையிற் பொருளில்லை கடன் கொடுப்பாராருமில்லை, செய்யுந்தொழிலோ ஒன்றுமில்லை, திடதேக முமில்லை, பின்னென் செய்வான் பாவம் பரதேசிக் கோலங்கொண்டு பல இடங்களுஞ் சென்று பிச்சை வாங்கி அச்சமில்லாமலுண்டு அலைந்து திரிவானென்று சொல்லுவாயாக எ-று.

வேறு.

அப்படி யாறும் வீட்டோன் ஆறெட்டு வியத்தில் நிற்கத்
தெப்படி யைந்து மாமன் ஜெகத்தினிற் பிறந்திருப்பார்
மைப்படி சனிக்கிரண்டு மடிந்தது போக மீதம்
இப்படி மீதுமூன்று பேர்களு மிருப்பாரென்னே. 185

இ-ள். ஆறும் வீட்டுக்கதிபதி-ஆறு-எட்டு-பனிரண்டாமிடத் தில் நிற்கப் பிறந்த ஜாதகனுக்கு மாமன்மார் ஐந்துபேர் பிறந்திருப் பார்கள். அந்த யிடத்தில் மந்தன் சேர்ந்தாலும் பார்த்தாலும் இரண்டு மாமன்மார் உருண்டு போவார்கள் போனதுபோக மீத முள்ள மாமன்மார் மூன்றுபேர்கள் வாழ்ந்திருப்பார்கள் எ-று.

கோதையே ஆறும் வீட்டோன் கொடும்பனிரண்டில் நிற்க
வாதையாய்ச் சனியும் பார்க்க வம்மிசம் நாசமாகும்
வேதையாஞ் செவ்வாய் பார்க்க வெகுநிலவர முபாயம்
பேதைபோ லிருந்துகொண்டு பிழைத்திடுவானென்றோதே.

இ-ள். ஆறுமிடத்ததிபதி நேராய்ப் பனிரண்டாமிடத்திலிருக்க, அதைச் சனிபார்க்க ஜாதகன் வம்மிசம் நாசமாகும். செவ்வாய் பார்க்க நிலவரம் உபாயமாகத் தரித்திவானைப் போலிருந்து கொண்டே இளைத்த தேகமுடன் பிழைத்திருப்பானென்று சொல்லவும் எ-று.

அஞ்சினி லிரவிகாரி யரவுடன் செவ்வாய் நிற்கத்
துஞ்சிடும் வாமனின்று சொல்லவும் பேருமுண்டோ
மிஞ்சியே யிருந்திட்டாலும் மீளாது அவன் குடும்பம்
பஞ்சுபோற் பறக்கச் செய்வான் பாலகன் பிறக்கத்தானே.

இ-ள். பஞ்சம ஸ்தானமாகிய அஞ்சாமிடத்திற் பானுவாகிய சூரியனும், காரியாகிய சனியும், அரவாகிய இராகுவும், சேயாகிய செவ்வாயுஞ் சேர்ந்திருக்கப் பிறந்த பாலனுக்கு மாமனிருந்தாலும், இறந்துபோவான், மாமனென்று பேருசொல்லவும் இடமுண்டோ அப்படி மிஞ்சியிருந்தபோதிலும், அந்த மாமன் குடும்பம் மீளாது பஞ்சுபோற் பறக்கச் செய்யும் எ-று.

மேடம்-முதற் பாதம்

மேஷமுதற் பாதமதி லுதயமானல்
விளம்புகிறேன் தென்வடக்கதாகும்
வாசலென்ற தலைவாசல் வடக்கதாகும்
வளமான ஆலயமுந் தென்கீழ் மூலை
நேசமென்ற நோக்மேற் கிற்றடாகமொன்று
நிவழ்த்து வடமேற்கு திசை யேரியுண்டு
ஆசையென்ற அடுத்தமனை பாழதாகும்
அதன் விபரம் இன்னதென்றே அறிவிப்போமே. 188

இ-ள். மேஷம் உதயமாகிய முதற்பாதத்திற் பிறந்த ஜாதகனுக்கு தென்வடலோடிய வீதி - மேற்குப்பார்த்த தலைவாசல் - அந்த வீட்டிலோர் பக்கத்து மூலையில் இடிந்துபோயிருக்கும். ஆறுகால பூசை நடக்கும் ஆலயமொன்று தெற்கே யிருக்கும். வடக்கே ஒரு கோவிலுண்டு. அதில் பூசைப் படித்தரம் குறைவாயிருக்கும். அதே

வீதியில் பீடங்கட்டிப் பிள்ளையார் வைத்திருக்கும். அதற்கடுத்து நல்ல தண்ணீர்க் கிணறு ஒன்றுண்டென்று சொல்லவும் எ-று.

மேடம் 2-ம் பாதம்.

மேஷமென்ற லக்கினந்தா னிரண்டாம் பாதம்
விளம்பியதோர் கீழ்மேற்கு வீதியாகும்
வாசலென்ற தலைவாசல் வடக்கதாகும்
வளமான ஆலயமுந் தென் கீழ் மூலை
நேசமென்ற நேர்மேற் கிற்றடாகமொன்று
நிகழ்ந்து வடமேற்கு திசை யேரியுண்டு
ஆசையென்ற அடுத்தமனை பாழதாகும்
அதன் விபரம் இன்னதென்றே அறிவிப்போமே. 189

இ-ள். மேஷம் இரண்டாம் மாதம் பிறந்த ஜாதகற்கு கிழமேலோடிய வீதி, வடக்குப் பார்த்ததலைவாசல், இவ்வீட்டுக்குத் தென் கீழ்மூலை ஆலயங்தோன்றும் மேல்புறம் தடாகமொன்று, வடமேற்குத் திசையில் ஏரியுண்டு, அடுத்தமனை பாழாய்ப்போகும். அதன் விபரம் இன்னதென அறிவிப்போமே எ-று.

மேடம் 3-ம் பாதம்.

ஆடதில் மூன்றும் பாதம் ஜெனித்த பேர்க்கு
அவன் வசிக்கும் வீதியது வடக்குத் தெற்கு
வீடதிலே இருபுறமும் பாழதாகும்
வீட்டுக்கு அடுத்தாப்போ லீசன் கோவில்
நாடதிலே அரி தேளும் ஐயன் காத்தான்
நன்மையுறும் ஆலயங்கள் கிணறு முண்டு
தேடதிலே இவன்வீடு மேற்கு வாசல்
செப்பினேம் இம்மொழியைத் தெரிந்துகேளே. 190

இ-ள். மேஷம் மூன்றும் பாதத்திற் பிறந்த ஜாதகற்கு, தென் வடலோடிய வீதி தலைவாசல் மேற்கதாகும். வீட்டுக்கு இருபுறமும் பாழதாகும். அடுத்தாப்போல் ஈசன் கோவில், சிங்கம் விருச்சிகம் இந்த ராசி மனையில் காத்தான் ஐயன் சாத்தான் இசக்கியம்பன் முதலிய தேவதை ஆலயமும் கிணறு முண்டு என்று வீமகவி செப்பினதை இப்புவியோர்க்கு ஒப்பும்படி சொல்லுவாயாக எ-று.

### மேடங் 4-ம் பாதம்.

கேளப்பா ஆடதிலே நாலாம் பாதம்
கீழ் மேற்கு வீதியிலே ஜெனித்ததாகும்
ஆளப்பா தலைவாசல் தெற்கே தோன்றும்
அடுத்திருக்குங் கீழ்திசையிற் றடாகமுண்டு
தாளப்பா மகரசிங்கங் கோவில் தோப்பு
தாட்டிகமாம் வடதிசையிற் களத்துமேடு
வாளப்பா துலைமேடங் காத்தான் சாத்தான்
வளர்கோவி லிதையறிந்து வழுத்துவாயே. 191

இ-ள். மேஷம் நாலாம் பாதத்திற்பிறந்த ஜாதகற்கு கிழமேலோடிய வீதி தலை வாசல் தெற்கே தோன்றும். அடுத்திருக்குங்கீழ் திசையிற் றடாக மூண்டு. மகரசிங்க ராசிகளில் ஆலயமும் தோப்பும் அமைந்திருக்கும். வடபுறம் களத்து மேடை துலாமேட விராசிகளில், காத்தான் சாத்தான் ஐயன் பந்தி கோவிலென்று சொல்லுவாய் எ-று.

### இடபம் முதற்பாதம்.

வழுத்திடவே இடபமுதற் பாதந்தன்னில்
வருஞ்சேய்க்கு வீதியது வடக்குத்தெற்கு
அழுத்திடவே மனைவாசல் கிழக்கதாகும்
அவ்வீட்டுக் கடுத்தாப்போல் மூன்றுமில்லம்
கொழுத்திடவே பின்னம் வருந்தீர்ந்துபோகும்
குளமருகே தென்கிழக்குத் திசையிலப்பா
விழித்திடவே் தேளிடபங் ஐயன் துர்க்கை
வீரியுட கோவிலுண்டு விடையிதாமே. 192

இ-ள். இடபம்—முதற்பாதத்திற் பிறந்த ஜாதகற்குத் தென் வடலோடிய வீதி-தலைவாசல் கிழக்கதாகும். அவ்வீட்டுக்கு அடுத்தாப்போல் மூன்றுமில்லம், பின்ன முண்டாகித் தன்னந்தனியே தீர்ந்துவிடும் தென்கிழக்குத்திசையில் குளமிருக்கும். விருச்சிகம் இடபவிராசிகளில் அருச்சனைக்கேற்க அய்யன் துர்க்கை கோவிலுண்டு என்று விண்டு சொல்லவும் எ-று.

### இடபம் 2-ம் பாதம்.

விடையிலிவன் பிறந்துவந்த இரண்டாம் பாதம்
விளம்புகிறேன் கீழ்மேற்கு வீதியாகும்

நடையிலிவன் தலைவாசல் தெற்கதாகும்
நன்மை தருங் கணேசனுடன் கோவில் மேற்காம்
இடையிலிவன் மனைக்குதலை மிதுனங் கும்பம்
ஏற்குமே துர்க்கையைன் மாரிகோவில்
கொடையிலிவன் குடும்பத்தில் வாழுந் தெய்வம்
கொல்லையிலே குடியிருக்கு மென்று கூறே. 193

இ-ள். இடபம் இரண்டாம் பாதத்திற்பிறந்த ஜாதகற்கு கிழ மேலோடிய வீதி தலைவாசல் தெற்கதாகும். நன்மைதருங் கணேச னுட கோவில் மேற்கதாகும். இவன் மனைக்குத் துலாம் மிதுனம் கும்பம் இவ்விராசிகளில் துர்க்கை யம்மன் மாரியம்மன் ஐயனார் கோவிலுண்டு, குடும்பத்தைக் காக்குந் தெய்வம் கொல்லையிலே குடியிருக்கு மென்று சொல்லவும் எ-று.

இடபம் 3-ம் பாதம்

கூரதுவே கொம்புவிடை மூன்றும் பாதம்
குமர னில்லம் தென்வடக்கு வீதியாகும்
தோரதுவே தலைவாசல் மேற்கேயாகும்
தெருவதனிற் கணேசனுட கோவிலுண்டு
சாரதுவே குலதெய்வம் மதுரைவீரன்
தானருங் குடும்பத்தின் சாமியாகும்
சேரதுவே தனுசாடு ராசி தன்னிற்
சிவன் சத்தி ஆலயமுஞ் செப்பலாமே. 194

இ—ள். கூர்மை தங்கிய கொம்பையுடைய எருது என்னும் இடபம் மூன்றும் பாதத்திற் பிறந்த ஜாதகற்குத் தென் வடலோடிய வீதி தலைவாசல் மேற்கேயாகும். அத்தெருவிலே கணேசன் கோவிலுண்டு, தன் குடும்பத்தைக்காக்கும் சாமியாகிய குலதெய்வம் மதுரைவீரனாகும். தனுசு மேட விராசிகளில் சத்தி சிவன் ஆலய முண்டென்று செப்பவும் எ-று.

இடபம் 4-ம் பாகம்.

செப்பலாம் இடபத்தின் நாலாம் பாதம்
ஜெனனமாஞ் சுதன் வீதி கிழமேலாகும்
ஒப்பலாம் தலைவாசல் வடக்கதாகும்
உளவறிந்தோ ரதிலிரண்டு குடும்பமாகும்

அப்பலாம் காளிகோவி லம்மன் காத்தான்
ஆலயமும் வடக்காகுங் குளமு முண்டு
இப்பலனே டிவன் கழனிக் கப்பால் மேற்கு
ஏகதந்த ரோர்பாக மிருக்குஞ் சொல்லே. 195

இ-ள். இடபம் நாலாம் பாதத்திற்பிறந்த ஜாதகற்கு, கிழமே லோடிய வீதி தலைவாசல் வடக்கதாகும், அம்மனையில் இரண்டுகுடும்பமாகும், காளிகோவில் மாரியம்மன் சாத்தான் ஆலயமும் குளமும் வடக்கே உண்டு. இப்பலனோடு இவன் வயற்காட்டுக்கு மேல்புறம் கணேசன் கோவில் கட்டபட்டிருக்கு மென்று சொல்லவும்.

மிதுனம் முதற்பாதம்.

சொல்லவே மிதுன முதற் பாதந் தன்னில்
றோன்றிய சேய் வீதியது வடக்குத் தெற்கு
புல்லவே தெருவண்டை கணேசனுண்டு
புகழ்ந்திடவே தலைவாசல் கிழக்கதாகும்
செல்லவே குடும்பமதிற் சத்திகோவில்
தெருச்சுற்றி வருந்தேரும் எதிரே நிற்கும்
அல்லவே இவன் குடியைக் காக்குந் தெய்வம்
ஐயனாரென் றுனக்கிங் கறிவித்தோமே. 196

இ-ள். மிதுனம் முதற்பாதத்திற் பிறந்த ஜாதகற்கு தென்வடலோடிய வீதி-கிழக்கே தலைவால் தெருவண்டை கணேசனுண்டு கும்ப ராசியாகிய வடகீழ் பாகம் சத்திகோவில் நாலு தெருவுஞ் சுற்றிவரும் தேரும் எதிரே நிற்கும். இவன் குடியைக் காக்குங் குல தெய்வம் ஐயனாரென்று பெண்ணே? இங்கு அறிவிப்போமே எ-று.

மிதுனம் 2-ம் பாதம்

அறியவே தண்டிரண்டாம் பாதந்தன்னில்
அதிலுதித்த சுதன்வீதி கிழக்கு மேற்கு
தெரியவே தலைவாசல் தெற்கே தோப்பு
சிறு சந்து அடுத்தாப்போ லிருக்கும் பாரு
பிரியவே வடகிழக்கிற் கால்வா யொன்று
பிடாரி துர்க்கை கோவிலது வாயுமூலை
பெரியவர்போ லிவன் குடியைக் காக்குந் தெய்வம்
பெண்சேலைக் காரியெனப் பேசுவோமே. 197

இ-ள். மிதுனம் இரண்டாம் பாதத்திற் பிறந்தஜாதகற்கு கிழ மேலோடிய வீதி தலைவாசல் தெற்கேயாகும் அடுத்தாப் போற்சிறு சந்தும் தோப்புந்தோன்றும். வடகிழக்கிற் கால்வாயொன்று போகும். வடமேற்கு வாயுவு மூலையில் பிடாரி துர்க்கை கோவிலுண்டு. இவன் குடியைக் காக்குந் தெய்வம் சேலைக்காரி முதலிய பெண் தேவதை யெனப் பேசுவாயே எ-று.

மிதுனம் 3-ம் பாதம்.

பேசினோம் மிதுனமதின் மூன்றும் பாதம்
பிறந்த சுதன் வீதியது வடக்குத் தெற்கு
காசினியி லிவன் வீடு தாயுந் தந்தை
கட்டினதோர் தலைவாசல் மேற்கேயாகும்
ஈசனுட கோவிலது இடபராசி
யிலங்கிடுமே அக்கினியிற் காத்தான்மாரி
மாசிலாத் தென்புறத்திற் கால்வாயுண்டு
வல்லபமா யிப்பலனை வழுத்துவாயே. 198

இ-ள். மிதுனம் மூன்றும் பாதத்திற் பிறந்தஜாதகற்கு, தென் வடலோடிய வீதி தலைவாசல் மேற்கதாகும். தாய் தகப்பன் கட்டி வைத்த வீடு இடபவிராசியில் ஈசன் கோவில். அக்கினி மூலையில் காத்தான் மாரிகோவில், தென்புறம் கால்வாயுண்டு, வல்லபமாய் இப் பலனை வழுத்துவாய் என்றார் வீமகவி எ-று.

மிதுனம் 4-ம் பாதம்.

சொல்லினோம் மிதுனமதின் நான்காம்பாதம்
சுதன் வீதி கிழமேற்கு வடக்கு வாசல்
இல்லது சொந்தமல்ல பாட்டன் வீடு
இவன் பிறந்த பிற்பாடு விரயம் மெத்த
அல்லலறுஞ் சிவன்சத்தி காத்தான் கோஷ்டம்
ஆலயமுந் துலைகும்பம் அசல முண்டு
வல்லபமாய்க் குடும்பத்தைக் காக்குந் தெய்வம்
மதுரை வீரப்பனென வகுத்துச் சொல்லே. 199

இ-ள். மிதுனம் நாலாம் பாதத்திற் பிறந்த ஜாதகற்குக் கிழமே லோடிய வீதி தலைவாசல் வடக்கு சொந்தவீடல்ல. பாட்டன் வீடாம். இவன் பிறந்த பிற்பாடு செலவு அதிகம். துலாம் கும்ப விராசிகளில் சத்திசிவன் சாத்தான் காத்தான்கோவில் அசையாநிலை

பெற்ற பூமியுண்டு. வல்லபமாய்க் குடும்பத்தைக் காக்குந்தெய்வம் மதுரை வீரப்பனென வகுத்துச் சொல்லவும் எ—று.

கடகம் முதற் பாதம்.

நண்டென்னுங் கடகமுதற் பாதமாகில்
நவிலுவோ மவன் வீதி வடக்குத் தெற்கு
தண்டலைசூழ் வாசலது மேற்கேயாகும்
சாற்றுகிறே னவனில்லத் தருகிற் குட்டை
பண்டுவருந் துலைகும்பம் மேடந் தன்னிற்
பகர் குண்டம் கோவில்சத்தி காத்தான்மாரி
விண்டலெனு மத்தெருவில் விளங்குந் தெய்வம்
விநாயகனுங் கண்டிதனை விளம்புவாயே 200

இ-ள். கடகம் முதற்பாதத்திற் பிறந்த ஜாதகற்குத் தென்வடலோடிய வீதி தலைவாசல் மேற்கேயாகும், நந்தனவனப் பூஞ்சோலை சிறுகுளம் முதலியன இவன் வீட்டுப்பக்கம் சமீபத்தில் இருக்கும் துலாம் கும்பம் மேடவிராசிகளில் கிணறும் சக்தி காத்தான் மாரி கோவில் உண்டு. அதேதெருவில் விநாயகர்படம் ஒன்றுண்டென்று விளம்புவாய் எ—று.

கடகம் 2-ம் பாதம்.

நண்டிலிவன் ஜெனனமதி லிரண்டாம் பாதம்
நாடிவந்த சுதன்வீடு கிழக்கு மேற்கு
அண்டியிவன் வாசலது தெற்கேயாகும்
அம்மனைக்கு அருகேசந் தெதிர்வீடில்லை
கொண்டலிவன் குடியிருப்பு இரண்டு பாகம்
கோவிலாம் மேடதுலை கும்பங்குண்டம்
வண்டனிவன் வாழுமந்த வீதிதன்னில்
மதிவேளின் பீடமென வழுத்துவாயே 201

இ-ள். கடகம் இரண்டாம் பாதத்திற் பிறந்த ஜாதகற்கு கிழமேலோடிய வீதி தலைவாசல் தெற்கேயாகும். அம்மனைக்கு அருகிற் சந்துதோன்றும். நேரே எதிரேவீடில்லை. இவன் குடியிருக்கும் வீடு இரண்டு பாகம். மேடதுலா விராசிகளில் கோவில்களும் கும்ப விராசியிற் கிணறும் உண்டாயிருக்கும். இவன் வாழும் வீதியில் மதவேள் பீடம்விளங்குமெனப்பெண்ணே செல்லுவாயாக எ—று.

கடகம் 3-ம் பாதம்

தேருவாய் நண்டதனில் மூன்றும் பாதம்
ஜெனித்துவந்த சுதன்வீதி வடக்குத் தெற்கு
மேருவாய் தலைவாசல் கிழக்கேயாகும்
மேடதுலை மீனமதில் குண்டங் கோவில்
பாருலகிற் கடகந்தேய் அய்யன் அம்மை
பண்பான கடைவீதி கால்வா யொன்று
சாருமது குடிகாக்கும் மதுரைவீரன்
சங்கிலிசோ ணைக்கருப்பன் சாற்றினோமே 202

இ-ள். கடகம் மூன்றும் பாதத்திற் பிறந்த ஜாதகற்கு தென் வடலோடிய வீதி தலைவாசல் கிழக்கேயாகும். மேடதுலாம் மீனவி ராசிகளில் கோவில் குண்டம் இருக்கும், கடகம் விருச்சிகவிராசியில் அய்யன் அம்மை ஆலயமும் கடைவீதியும், கால்வாயும் காணலாம், குடும்பத்தைக் காக்கும் மதுரை வீரன் சங்கிலிக்கருப்பன் சோணைக் கருப்பன் முதலிய கருப்புத்தெய்வங்களும் உண்டென்று சொல்ல வும் எ-று.

கடகம் 4-ம் பாதம்

நள்ளியெனும் நண்டதனில் நாலாம்பாதம்
நாடிவந்த சுதன்வீதி கிழக்கு மேற்கு
தெள்ளியெனும் இவன் வாசல் வடக்கே காணும்
திகழ்கன்னி யரிகோவில் கிழக்கேயீசன்
கள்ளியெனும் மகர கும்பங் காளி கோவில்
கானதிலே அரசு குண்டம் மாரி கோஷ்டம்
வள்ளியெனும் இவன் குடியில் வாழுந் தெய்வம்
மாமதுரை வீரனுஞ் சிங்கமாமே 203

இ-ள். நண்டு நள்ளிஞெண்டு அலவன் குளிர் சேக்கையென்று சொல்லப்பட்ட கர்க்கடக விராசியில் நாலாம் பாதத்திற் பிறந்த ஜாதகற்கு கிழமேலோடிய வீதி தலைவாசல் வடக்கேயாகும். நிருதி மூலையில் விஷ்ணுகோவிலும், கிழக்கே யீசன் கோவிலும், வடபுறம் காளி மாரி கோவிலும், முளமும் உண்டு. இவன் குடும்பத்தைக் காக்குங் குலதெய்வம் மதுரைவீரனென்று சொல்லவும் எ-று.

சிங்கம் முதற் பாதம்

சிங்கமெனுஞ் சீயமதின் முதலாம் பாதம்
ஜெனித்த சுதன் வீதியது கிழக்கு மேற்கு

பங்கமில்லை வாசலது தெற்கேயாகும்
பாரில் பிதிர் குடும்பமது மூன்றதாகும்
இங்கில்லத் திருபுறமுஞ் சந்து தோன்றும்
ஈசனுட கோவிலது மேற்கதாகும்
தங்கு மிடம் வெகுசித்தி யோகவானும்
சாற்றுகிறேன் கீழ்திசையிற் றடாகந்தானே 204

இ-ள். தெரியுமா சீயமென்னுஞ் சிங்கவிராசியில் முதற்பாதத்தில் ஜெனித்த ஜாதகற்கு, கிழமேலோடிய வீதி தலைவாசல் தெற்கேயாகும். பங்கமில்லாதெங்கும் விளங்குந் தங்கள் பிதிர் குடும்பம் மூன்றதாகும். இருந்து வசிக்கும் வீட்டுக்கு இருபுறமுஞ் சந்து தோன்றும். ஈசன் சத்திகோவில் மேற்கிலும், தடாகங் கிழக்கிலும் இருக்கும். வெகு சித்தி பெற்ற யோகவானென்று. எ-று.

சிங்கம் 2-ம் பாதம்.

சிங்கமது லக்கினந்தா னிரண்டாம் பாதம்
சேய்பிறந்த வீதியது வடக்குத் தெற்கு
துங்கமுள தலைவாசல் கிழக்கே காணும்
தோன்றுமிட பங்கன்னி மகரராசி
திங்களணி சிவபெருமான் சத்தி கோவில்
திறமாகக் கட்டி நிற்குங் குளந்தானென்று
சங்கை யில்லை தாய்கூட ஆறுபேர்கள்
தான் பிறந்தோர் தகப்பனோ டிரண்டுபேரே 205

இ-ள். சிங்கம் இரண்டாம் பாதத்திற் பிறந்த ஜாதகற்கு, தென்வடலோடிய வீதி தலைவாசல்கிழக்கேகாணும், இடபங் கன்னி மகர ராசிகளில், சந்திரனைச் சடாபாரத்திற்றாங்கியிரா நின்ற சிவபெருமான் சத்தி கோவிலும், திறமகக்கட்டிநிற்கும். குளந்தானென்றும் இருக்கும். இதுவுமன்றி இவன் தாய் கூடப் பிறந்தவர்கள் ஆறுபேரும், தகப்பனோடு பிறந்தவர் இரண்டு பேராம் என்று சொல்லவும் எ-று.

சிங்கம் 3-ம் பாதம்

தானமாம்சிங்கமதின் மூன்றும் பாதம்
தான் வந்த சுதன்வீதி கிழக்கு மேற்கு
ஆனமகன் தலைவாசல் வடக்கேயாகும்
அந்தயில்லத் தருகில்மனை பாழதாகும்

மானமக ரங்குண்டம் மேடங் கோஷ்டம்
மகத்தான தனுமீனங் காத்தான்மாரி.
கானமிவன் குலமதனைக் காக்குந் தெய்வம்
காளி சத்தி பாவாடை ராயன்தானே. 206

இ—ள். சிங்கம் மூன்றும் பாதத்திற் பிறந்த ஜாதகற்கு கிழமே லோடிய வீதி தலைவாசல் வடக்கேயாகும். அந்த இல்லத்தருகில் மனை பாழதாகும். மானமகரங்குண்டம்மேடங்கோஷ்டம் மகத்துவ முள்ள கோதண்டமாகிய தனுசு மீனவிராசிகளில் மாரிகாத்தான் கோவிலும், தன் குடும்பத்தையுங் குலத்தையுங் காக்கும் காளிசக்தி பாவாடைராயன் முதலியதேவதையின்கோவிலும் இருக்குமென்று பெருக்கமாகச் சொல்லுவாயாக எ—று.

சிங்கம் 4—ம் பாதம்

அரியென்னுஞ் சிங்கமதின் நாலாம் பாதம்
அந்தமுள்ள சுதன்வீதி வடக்குத் தெற்கு
விரிவென்ன தலைவாசல் மேற்கேயாகும்
விளம்புவேன் குடியிருப்பு இரண்டதாகும்
எரிமேடம் துலைமகர ராசிதன்னில்
இருக்குமது குளங்கிணறு கோவிலுண்டு
சரியான குடும்பத்தைக் காக்குந் தெய்வம்
தாணிபுகழ் பெறும் பெரிய தெய்வந்தானே. 207

இ—ள். சிங்கம் நாலாம் பாதத்திற் பிறந்த ஜாதகற்கு தென் வடலோடிய வீதி தலைவாசல் மேற்கேயாகும், இவன் குடியிருப்பில் இரண்டு பாகமாகும். மேடம் துலாம் மகர ராசிகளில் குளங்கிணறு கோவிலுண்டு. இவன் குடும்பத்தைக் காக்குங் குல தெய்வம் உலக மெல்லாங் கொண்டாடும பெரியதெய்வமென்று சொல்லவும் எ—று.

கன்னி முதற் பாதம்.

கன்னிமுதற் பாதமதி லுதயமானாற்
காணுமது தென்வடக்கு வீதியாகும்
உன்னிதமாய்த் தலைவாசல் மேற்கேதோப்பு
ஓங்கிவள ராலயந்தா னென்று தோன்றும்
மன்னியிதன் கீழ்புறத்திற் குளம் நீரோட்டம்
மாவிருட்சங் கமுகு தென்னை வாழை புன்னை
நன்னயமாய் வீமகவி சொன்ன நூலை
நாட்டினிலே நானுனக்கு நவிலுவேனே. 208

இ—ள். வீமகவி சொன்ன நூலை வாமியே கேட்பாயாக:— கன்னி முதற்பாதம் பிறந்த ஜாதகற்குத் தென்வடலோடிய வீதி தலைவாசல் மேற்கேயாகும். அத்திசையிலே ஓங்கி வளரும் தென்னந்தோப்பும், ஆலயமும் தோன்றும் தானிருக்கும்மனைக்குக் கீழ்புறம் குளமும், நீரோட்டமுள்ள கால்வாயும், மா பலா கமுகு தென்னை வாழை புன்னை முதலிய விருட்சங்களும் உண்டாயிருக்கு மென்று மண்டலத்தோர்க்கு விண்டுரைப்பாயாக எ-று.

கன்னி 2-ம் பாதம்.

தெரிவை யெனுங் கன்னியதி லிரண்டாம் பாதம்
ஜெனித்துவந்த சுதன்வீதி வடக்குத் தெற்கு
அரிவையே தலைவாசல் கிழக்கேயாகும்
அதனருகே அத்திசையி லீசன்கோவில்
சருவையெனும் மிதுனம் வில் மகரம் மாரி
சாத்துகன்னி மூலையிலே விஷ்ணுகோயில்
கருவை குலங் காத்த தெய்வங் கருப்பன் காத்தான்
காணும் விராடன் மனைவி சேடியாமே. 209

இ—ள். கன்னி இரண்டாம்பாதத்திற்பிறந்த ஜாதகற்கு, தென்வடலோடிய வீதி, தலைவாசல், கிழக்கேயாகும். அதனருகே அத்திசையில் ஈசன் கோவில், மிதுனம் தனுச மகரம் இவ்விராசிகளில் மாரி காளி மாடன் கோவிலும், கன்னி மூலையாகிய நிருதிதிசையில் விஷ்ணு கோவிலும், விராடன் மனைவி சுதற்கணைக்கு ஓராண்டு தொண்டூழியஞ் செய்துவந்த சேடியாகிய துரோபதை கோவிலும் உண்டென்று விண்டுரைப்பாயாக எ—று.

கன்னி 3-ம் பாதம்.

சேடியாங் கன்னி மூன்றும் பாதந்தன்னி
ஜனித்தசுதன் வீதியது கிழக்கு மேற்கு
மாடியிவன் இல்லமதிற் கருகேசந்து
வடக்காகுந் தலைவாசல் வகுத்துச் சொன்னோம்
கூடியதோ ரம்பலவன் கணேசன் கோயில்
அடுத்திருக்கும் மேடசிங்க மறிந்துகொள்ளு
கூடியிவன் குடிதனைக் காக்குந் தெய்வம்
குலவீர னென்றுமிகக் கூறலாமே. 210.

இ-ள். கன்னி மூன்றும் பாதத்திற்பிறந்த ஜாதகற்கு கிழமேலோடிய வீதி தலைவாசல் வடக்கதாகும். மேடசிங்கவிராசியில், ஆடலம் புரியும் அம்பலவாணனாகிய நடராஜன் கோவிலும், அத்திமுகவன் கோவிலும் உண்டு. இவன் குடியைக் காக்கும் குலதெய்வம் மதுரை வீரனென்று சொல்லவும் எ-று.

கன்னி 4-ம் பாதம்.

கூறலாங் கன்னியதில் நாலாம் பாதம்
குமாரனுந்தான் பிறந்த இல்லம் வடதென்வீதி
தேறலாந் தலைவாசல் கிழக்கதாகும்
தெருவருகிற் சந்தொன்று இருக்கும்பாரு
நாறலாம் நான்கு திசை விருக்ஷமுண்டு
நலமான குலதெய்வம் பெண்பாலாகும்
ஆறலாந் தாய்மாமன் மூன்றுபேராம்
அவனுக்கு மைத்துனனு மிரண்டுபேரே. 211

இ-ள். கன்னி நாலாம் பாதத்திற்பிறந்த ஜாதகற்கு, தென்வடலோடிய வீதி, தலைவாசல் கிழக்கதாகும் அத்தெருவில் சந்தொன்று போகும். நாலா பக்கமும் மேலான விருக்ஷ சாதிகள் தழைத்துக்கிளைத்து ஓங்கி வளர்ந்து இருக்கும், இவன் குலதெய்வம்பெண் தேவதையாகும். தாய் மாமன் மூன்றுபேர். மைத்துன ரிரண்டுபேராம் எ-று.

துலாம் முதற் பாதம்.

சீரான துலாமதனின் முதலாம்பாதம்
ஜெனித்த சுதன் வீதியது கிழக்கு மேற்கு
பேரான தலைவாசல் வடக்கதாகும்
பிறங்குங்கீழ் புறங்குளமுந் தெற்கே தோப்பு
நேரான மேல்புறந்தான் தடாக முண்டு
நிலையான சிவன்கோயில் வடக்கே தோன்றும்
கூரான வாசலிலே மரங்க ளுண்டு
குறிப்பாக இதையறிந்து கோலலாமே. 212

இ-ள். சீரான கட்டளை கோல் தராசு நிறை தூக்கு என்னுந் துலாத்தில் முதற்பாதம் பிறந்த ஜாதகற்கு, கிழமேலோடிய வீதி தலைவாசல் வடக்கதாகும். கீழ்புறங் குளமும், தென்புறந் தோப்பும் மேல்புறந் தடாகமும், வடபுறம் சிவன் கோவிலும், வாசலில் பல

மரங்களும் உண்டாயிருக்கும். இவ்விதங் குறிப்பறிந்து செவ்வை யாய்ச் சொல்லவும் எ-று.

துலாம் 2-ம் பாதம்.

கோலதிலே இவன் ஜெனனம் இரண்டாம் பாதம்
குறித்துவந்த சுதன்வீதி வடக்குத் தெற்கு
ஏலவிவன் தலைவாசல் கிழக்கே யாகும்
இருபுறமும் இல்லமது கிழச்கிற் குண்டம்
சாலதனு கண்டாடு மாரி காத்தான்
சாற்றுவேன் வீதியதில் மதவேள் கோஷ்டம்
பாலனிவன் குலதெய்வங் கள்ளரக்கைப்
பலகாலும் விரும்பியுணும் வீரன்றானே. 213

இ-ள். துலாம் இரண்டாம்பாதத்திற் பிறந்த ஜாதகற்கு தென் வடலோடிய வீதி தலைவாசல் கிழக்கேயாகும் இவன் மனைக்கு இரு புறம் இல்லமிருக்கும். கீழ்புறம் குளமுண்டு. தனுசு கடகம் மேடம் இவ்விராசிகளில் மாரிகாத்தான் கோவிலும் மதவேள் இருப்பிட மும், இவன் குலதெய்வம், கள்ளுச்சாராயத்தைக் கொள்ளை கொள் ளும் வள்ளலும் வெள்ளையம்மாள் பொம்மியம்மாளுக்கு நாயகனுமா கிய மதுரை வீரனென்று சொல்லுவாயாக எ-று.

துலாம் 3-ம் பாதம்.

செட்டியெனுந் துலாம் ராசி மூன்றும் பாதம்
ஜெனித்துவந்த சுதன்வீதி கிழக்கு மேற்கு
தெட்டென்று தலைவாசல் தெற்கேயாகும்
தேள் மீனம் மிதுனமதி லீசன் கோயில்
பட்டியெனும் வாசலிலே மரங்களுண்டு
பகர் மேடந் துலைமகரங் குண்டஞ்சூழ்
கட்டியிவன் குலமதனைக் காக்குந் தெய்வம்
காளிகறுப் பன்வாழும் வணிகன்றானே. 214

இ-ள். துலாம் மூன்றும் பாதத்திற் பிறந்த ஜாதகத்திற்கு கிழ மேலோடிய வீதி தலைவாசல் தெற்கே யாகும். விருச்சிகம் மீனம் மிதுனம் இந்த ராசிகளில் ஈசன் கோவில் வாசலிலே மரங்களு முண்டு, மேடம் துலாம் மகரம் இந்தராசிகளில் குளம் கிணறு இரு க்கும். இவன் குடும்பத்தைக்காக்குங் குலதெய்வம் காளி கறுப்பன் என்று சொல்லவும் எ-று.

துலாம் 4-ம் பாதம்.

வணிகனெனுந் துலாமனில் நாலாம் பாதம்
வந்துதித்த சுதன்வீதி வடக்குத் தெற்கு
அனிகனெனும் மேல்வாசல் மேற்கே தோப்பு
அடுத்திருக்கும் கிணறென்று அருகிற் சந்து
குணிகடக சிலைமேடங் கோயில் குண்டம்
கூறுமிவன் தெருவீதி குடியாங்கன்னி
கணிசமெனும் இவன் குலத்தைக் காக்குந் தெய்வம்
காத்தானும் மாரியுங் கண்டறிவ தாமே. 215

இ-ள். துலாம் நாலாம்பாதத்திற் பிறந்த ஜாதகற்கு, தென் வடலோடிய வீதி, தலைவாசல் மேற்கேயாகும். மேல்புறம் அடுத்திருக்குந் தோப்பு கிணறு அருகிற்சந்து இருக்கும். கடகம், தனுசு, மேடம் இவ்விராசிகளில் கோயில் குண்டம, இவன் வீதியிலே சத்த கன்னி பீடம் உண்டு. குடும்பத்தையுங் குலத்தையுங் காக்குந் தெய்வம் காத்தானும் மாரியும் உண்டென்று கண்டறிந்து விண்டுரைப்பாயாக எ-று.

விருச்சிகம்-முதற்பாதம்.

அறிவதென்ன விருச்சிகத்தின் முதலாம்பாதம்
அவதரித்தோன் கீழ் மேற்கு வீதியாகும்
தெரிவதென்ன தலைவாசல் தெற்கே காணும்
செப்புகிறேன் மேற்கதனிற் றடாகமுண்டு
நெறியான கீழ்புறததில் நீரோடுங்கால்
நிற்கும் வெகு மரங்களுண்டு அறிந்துகொள்ளு
பிரியமாய் வடபுறத்திற் பிடாரிகோயில்
பெரிதான பாட்டை யொன்று பத்தும்பாரே. 216

இ-ள். விருச்சிகம் முதற்பாதத்திற் பிறந்த ஜாதகனுக்கு கிழ மேலோடிய வீதி, தலைவாசல் தெற்கேயாகும். மேல்புறம் தடாகமும் கீழ்புறம் நீரோடுங் கால்வாயும், மரங்களும், வடபுறம் பிடாரிகோவிலும், பாட்டை சாரிகள் வழி நடக்கும் பெரிதான பாட்டையொன்று தோற்று மென்று சொல்லுவாயாக எ-று.

விருச்சிகம் 2-ம் பாதம்.

பத்துடைய விருச்சிகந்தா னிரண்டாம் பாதம்
பாலனுதித் திடும்வீதி வடக்குத் தெற்கு

கொத்துடைய தலைவாசல் மேற்கதாகும்
கொல்லையிலே குடியிருக்குங் குலதெய்வந்தான்
கத்துடைய கடகவிருச் சிகமீ னததிற்
காவு குண்டம் நீரோட்டங் கால்வாய் கோவில்
சத்துடைய கன்னிதகர் சாத்தான் மாரி
தானுண்டா மேரிகுளஞ் சாற்றுவாயே. 217

இ-ள். விருச்சிகம் இரண்டாம் பாதத்திற் பிறந்த ஜாதகற்கு, தென்வடலோடிய வீதி, தலைவாசல் மேற்கே யாகும். கொல்லைத்தோப்பிற் குடியிருக்கும் குலதெய்வந்தான் கற்கே விருச்சிக மீனமாகுந் திரிகோண விராசிகளில், தோப்புத் துறவுகளும், கால்வாய் நீரோட்டங்களும், ஆலயங்களும், மேடங்கன்னிராசிகளில், சாத்தான் காத்தான் மூத்தான் மாரிகோவில்களுமு, ஏரிகுளங்களும், உண்டாமென்று மண்டத் தோர்க்கு விண்டுரைப்பாயாக எ-று.

விருச்சிகம் 3-ம் பாதம்.

தேனென்றும் விருச்சிகந்தான் மூன்றும் பாதம்
ஜெனித்த சுதன் வீதியது கிழக்கு மேற்கு
ஆனென்னும் அவன்வாசல் வடக்கேயாகும்
அதுவுமே சந்துதனக் கடுத்தவீடாம்
மீனென்னும் மேடசிங்கங் கால்வாய் கோஷ்டம்
மென்மகரங் கன்னிகுண்டங் கோயிலாகும்
கோனென்றும் வாராமற் காக்குந் தெய்வம்
கொல்லையிலே குடியிருக்கும் வீரன்றானே, 218

இ-ள். விருச்சிகம் மூன்றும் பாதம் பிறந்த ஜாதகனுக்கு கிழமேலோடிய வீதி தலைவாசல் வடக்கேயாகும். அவன் வீடு சந்துதனக் கடுத்த வீடாம். மேடசிங்கம் கன்னி மகரம் இவ்விராசிகளில் கால்வாய் கோஷ்டம் குண்டம் கோயில் உண்டாயிருக்கும். கொல்லையிலே குடியிருக்கும் குடும்பத்தைக் காக்குங் குலதெய்வம் வல்லமைபொருந்திய மதுரை வீரனென்று சொல்லவும் எ-று."

விருச்சிகம் 4-ம் பாதம்

விட்டனெனும் விருச்சிகந்தான் நாலாம்பாதம்
விரும்பிவந்த சுதன்வீதி வடக்குத் தெற்கு
கிட்டவிவன் தலைவாசல் கிழக்கே யாகும்
கேளிருவர் பாகந்தான் குடியிருப்பு

துட்டனெனுந் தனுமேடந் தண்ணீர் குண்டம்
சொல்லுமதிற் கடககும்பம் யீசன்சத்தி
கட்டனெனு மிவன் குடியைக் காக்குந் தெய்வம்
கச்சைகட்டும் வீரனெனக் கண்டு கொள்ளே. 219

இ-ள். விருச்சிகம் நாலாம் பாதத்திற்பிறந்த ஜாதகற்கு தென் வடலோடிய வீதி, தலைவாசல் கிழக்கே யாகும். அவ்வீட்டில் இருவர்பாகங் குடி யிருப்பு. தனுசு மேடம், தண்ணீர்க்குண்டம், கடகம், கும்பம், இவ்விராசிகளில் ஈசன் சக்தி கோவிலிருக்கும். இவன்குடும்பத்தைக் காக்குங் குலதெய்வம் கருங்கச்சையை இடையில் வரிந்து கட்டும் மதுரை வீரனென்று சொல்லுவாயாக எ-று.

தனுசு முதற் பாதம்.

தனுசுமுதற் பாதமதிற் பிறந்தசேய்க்குத்
தானிருக்கும் வீதியது கிழக்கு மேற்கு
வனிதையே தலைவாசல் தெற்கேயாகும்
மனைக்கழகா மில்லமது இரண்டு கட்டாம்
அனுதினமும் உலகத்தோர் போற்றுகின்ற
அரசன்சத்தி கோவிலது மேற்கதாகும்
கனிதருமா பலாகொய்யாத் தோப்புத் தெற்கு
கண்டவுட னிதன்விவரங் கழறுவாயே. 220

இ-ள். தனுசு முதற்பாதத்திற் பிறந்த ஜாதகனுக்கு கிழமேலோடிய வீதி, தலைவாசல் தெற்கேயாகும். அம்மனையானது இரண்டு கட்டு வீடாம், சதாகாலமுந் தரணியிலுள்ளோர் போற்றித் துதிக்கின்ற சத்தி சிவன் கோவிலானது மேற்கேயிருக்கும். கொய்யா, மா, பலா முதலிய கனிகளைத்தரும் மரங்களடர்ந்த தோப்பு தெற்கே தோன்றுமெனச் சொல்லுவாயே எ-று.

தனுசு 2-ம் பாதம்.

வில்லென்ற தனுசுதனி லிரண்டாம் பாதம்
விரும்பிவந்த சுதன்வீதி வடக்குத் தெற்கு
இல்லென்ற தலைவாசல் மேற்கேயாகும்
எழிலீசன் கோவிலது கிழக்கே தோன்றும்
நல்லென் னீரோட்டங் கால்வாய் குண்டம
நவில்மிதுனந் தனுசுதனில் மதவேள்சத்தி

செல்லென்ற வீதியிலாங் குடும்பங் காக்கும்
தீரன்மா வீரனெனச் செப்புவாயே. 221

இ-ள். தனுசு இரண்டாம் பாதத்திற் பிறந்த ஜாதகற்குதென் வடலோடிய வீதி தலைவாசல் மேற்கேயாகும் இந்திரன் திக்காகிய கிழக்கு ஈசன் கோவிலும், மிதுனந்தனுசு ராசிகளில் நீரோட்டம், கால்வாய் குண்டமும், வீதியில் மதவேள் சத்தியும், குடும்பத்தைக் காக்குங்குலதெய்வம் மதுரை வீரனென்றுஞ்சொல்லுவாயாக எ-று.

தனுசு 3-ம் பாதம்.

காண்டீப மெனுந்தனுசு மூன்றாம் பாதம்
காணவந்த சுதனவீதி கிழக்கு மேற்கு
வேண்டமிவன் தலைவாசல் வடக்கே காணும்
மேலுமனை யிருபுறமுஞ் சந்தேயாகும்
பூண்டதுவாம் மேடத்திற் குண்டங் கோஷ்டம்
பூவைகன்னி தனுசதனிற் காத்தான் சாத்தான்
ஆண்டதிவன் குலதெய்வங் காளிமாரி
யாங்குடும்பந்தனைக் காக்கும் அய்யனாரே. 222

இ-ள். தனுசு மூன்றாம் பாதத்திற்பிறந்த ஜாதகனுக்கு கீழ்மே லோடிய வீதி தலைவாசல் வடக்கேயாகும். மனைக்கு இருபுறமும் சந்துபோகும். மேடம், துலாம், கன்னி, தனுசு. இவ்விராசிகளில், காத்தான், சாத்தான், காளி, கங்காளி, வீரி, மாரிகோஷ்டம், குண்டம் உண்டாங், இவன் குடும்பத்தைக் காக்குங் குலதெய்வம் ஐயனாரென்று சொல்லவும் எ-று.

தனுசு 4-ம் பாதம்.

கார்முகமா மெனுந்தனுசு நாலாம் பாகம்
காணவந்த சுதன்வீதி வடக்குத் தெற்கு
ஏர்முகமாந் தலைவாசல் கிழக்கேயாகும்
எதிர்வீடு பாழதிலே இருக்குஞ் சூழ்ச்சி
பேர்முமகா மேடகன்னி துலையிற் குண்டம்
பிரபலமா மரன்கோவில் மீனங்கால்வாய்
தேர்முகமா மிவன் குடும்பங் காக்குந் தெய்வம்
தென்மதுரை வீரனெனச் செப்புவாயே. 223

இ-ள். தனுசு நாலாம்பாதத்திற்பிறந்த ஜாதகனுக்கு தென்வடலோடிய வீதி தலைவாசல் கிழக்கேயாகும். ஏதோ ஒரு சூழ்ச்சியால் அதாவது உபாயத்தால் எதிர்வீடு பாழாய்ப்போகும். மேடம், கன்னி, துலாம், மீனம் இந்த ராசிகளில் பிரபலமான அரன்கோவிலும், குளமும், நீரோட்டக் கால்வாயு முண்டாயிருக்கும். இவன் குடும்பத்தைக் காக்குங் குலதெய்வம் தென் மதுரைவீரனெனச் சொல்லுவாயாக எ-று.

மகரம் முதற் பாதம்.

மகாமுதற் பாதமதில் ஜெனித்தபேர்க்கு
வழுத்துமில்லம் வீதியது கிழக்கு மேற்கு
அகமகிழத் தலைவாசல் தெற்கதாகும்
அதற்கெதிரே சந்தொன்று கடையின் பக்கம்
ஜெகம்புகழக் கோயிலது இருக்கும் பாரு
செப்புகிறேன் நீரோடுங் கால்வாயுண்டு
வகையுடனே பலமரங்கள் ஊரைச்சுற்றி
மனைவியுடன் பிறந்தமைத் துனனுமேதே. 224

இ-ள். மகரம் முதற்பாதத்திற் பிறந்த ஜாதகனுக்கு கிழமேலோடிய வீதி தலைவாசல் தெற்கேயாகும். அதற்கு எதிரே சந்தொன்று கடையின் பக்கம் கோயில் குண்டம் கால்வாய் இருக்கும் பாரு, ஊரைச்சுற்றிபல மரங்களுண்டு. இவன் மனைவியுடன்பிறந்த மைத்துனன் ஏது இல்லையென்று சொல்லவும் எ-று.

மகரம் 2-ம் பாதம்.

ஏதுவெனும் மகரமது இரண்டாம் பாதம்
ஏற்கவந்த சுதன்வீதி வடக்குத் தெற்கு
ஆதிமுத லிவன் வாசல் கிழக்கதாகும்
அந்த இல்லம் மூன்றிலொரு பங்கதாகும்
பாது துலை மேடம் நண்டு மகரம் பாரு
பண்டான கோவிலது பணிதிமேலாம்
மேதினியி லிவன் குடும்பங் காக்குந் தெய்வம்
வேன்மதுரை வீரனென்றே விளம்பலாமே. 225

இ-ள் மகரம் இரண்டாம் பாதத்திற் பிறந்த ஜாதகனுக்கு தென்வடலோடிய வீதிதலைவாசல் கிழக்கதாகும் அந்த வீடு மூன்றிலொரு பங்கதாகும் துலாம் மேடம் கடகம் மகரம் இவ்விராசிகளில்

கோவில் குண்டம் உண்டென்று சொல்லவும். இவன் குடும்பங் காக்குந் தெய்வம் மதுரைவீரனென்று விளம்புவாயாக எ-று.

மகரம் 3-ம் பாதம்.

வேம்பலாம் மகரமதில் மூன்றும் பாதம்
மேதினியில் வந்தசுதன் இல்லங்கேளு
கிளம்பலாம் இவன்வீதி கிழக்குமேற்கு
கேணியுண்டு தலைவாசல் வடக்கே காணும்
தளம்பலாம் பல விருட்சந் தோப்புத்தெற்கு
சங்கரனார் கோவிலது மேற்கேயுண்டு
குளம்பலா யெண்ணாதே மச்சான் நாலு
குறிப்புமிரு மாமனிரண்டத் தைபாரே. 226

இ-ள். மகரம் மூன்றும் பாதத்திற்பிறந்த ஜாதகனுக்கு கிழமேலோடிய வீதி தலைவாசல் வடக்கே காணும். பலவிருட்சங்களடர்ந்த பூஞ்சோலைகள் சூழ்ந்த தோப்பு தெற்கேயாகும். சங்கரன் கோவில் எங்கேயென்று கேட்பாயாகில் மேற்கேயென்றும், மைத்துனர் நாலு பேரென்றும், மாமனார் இருவரென்றும், அத்தைமார் இரண்டுபேரென்றும் சொல்லவேண்டியது எ-று.

மகரம் 4-ம் பாதம்.

பாரப்பால் மகரமது நாலாம் பாதம்
பாரதனிற் பாலகனு முதித்த இல்லம்
சீரப்பால் தெற்குவடக் கானவீதி
திகழ்தெருவின் தலைவாசல் மேற்கதாகும்
சாரப்பால் தகப்பனுடன் பிறப்பிரண்டு
தன்மாமன் ஐந்தாகும் மச்சானில்லை
சேரப்பால் ஈசானங் கோவிற் குண்டம்
சிறப்பாகுங் குலதெய்வம் வீரனாமே. 227

இ-ள். மகரம் நாலாம் பாதம் பிறந்த ஜாதகனுக்குத் தென்வடலோடிய வீதி தலைவாசல் மேற்கேயாகும். இவன் தகப்பனுடன் பிறந்தவர் இரண்டு பேராம். மாமன்மார் ஐந்து பேர்கள். மைத்துனர் இல்லை. ஈசானியதிசையில் ஈசன் கோவிலும் கிணறும் இருக்கும். இவன் குடும்பத்தைக் காக்குங் குலதெய்வம் மதுரை வீரனென்று சொல்லவும் எ-று.

குடம்பம் முதற் பாதம்

கும்பமுதற் பாதமதி லுதித்த சேய்க்குக்
கூறுகிறே னிவன்வீதி கிழக்கு மேற்கு
ஐம்பதாந் தலைவாசல் வடக்கேயாகும்
தண்ணீருந் தடாகமது கிழக்கே தோன்றும்
நிம்பரசு விநாயகரும் மேற்கதாகும்
நிலைதெற்கு விஷ்ணுவுட கோயில் நேரே
இன்பமுள்ள தகப்பனுடன் பிறப்புமைந்தாய்
இயம்பலா மிவன்மாமன் மூன்றுபேரே. 228

இ-ள். கும்பம் முதற்பாதத்திற் பிறந்த ஜாதகனுக்கு கிழமே லோடியவீதி தலைவாசல் வடக்கேயாகும். நிறைந்த நீர்த்தடாகம் கிழக்கே தோன்றும். வேம்பும் அரசும் விநாயகரும் மேற்குப்பக்க மிருக்கும். அதற்கு நேரே தென்புறம் விஷ்ணு கோயில் தோன்றும். இவன் தகப்பனுடன் கூடப்பிறந்தவர்கள் ஐந்துபேராம். மாமன்மார் மூன்று பேரிருப்பார்களென்று பெண்ணே சொல்லுவாயாக எ-று.

கும்பம் 2-ம் பாதம்

சாடியிரண் டாம்பாதம் பிறந்த சேய்க்குச்
சாற்றுகிறே னிவன்வீதி வடக்குத் தெற்கு
தேடிவந்தோன் தலைவாசல் மேற்கே காணும்
சிறுசந்து அடுத்தாப்போற் கடையுமுண்டு
நாடிவரும் நதியேரி வடக்கதாகும்
நல்லநீ ரோட்டமது கால்வாய்தெற்கு
பாடிதனி லிவன் விடாஞ் சொன்னே னின்னும்
பண்பான கோயில் திசை வடக்கதாமே. 229

இ-ள். கும்பம் இரண்டாம் பாதத்திற் பிறந்த ஜாதகற்கு தென் வடலோடிய வீதி. தலைவாசல் மேற்கே காணும். சிறுசந்தும், அடுத் தாப்போற் கடையுமுண்டு. வடபுறம் திடமான ஏரியும், நதியும், மேல்புறம் கோவிலும் தென்புறம் நீரோடுங் கால்வாயுந் தோன்றும். ஊரும்பேரும் மகாஉன்னதமாக இருக்குமென்று சொல்லவும் எ-று

கும்பம் 3-ம் பாதம்.

குடமதனில் மூன்றுங் கால் பிறந்த சேய்க்குக்
கூறுகிறேன் வீதியது கிழக்கு மேற்கு

இடமதனிற் சங்தொன்று அருகேபோகும்
இவன் வீட்டுத் தலைவாசல் தெற்கேகாணும்
கடமென்னுங் கால்வாயும் வடக்காங் தென்பால்
தன்னுடைய குலதெய்வங் கறுப்பனோடு
திடமென்னும் மாமதுரை வீரனென்றே
செப்பலாங் குடிகாக்க வந்ததாமே. 230

இ-ள். கும்பம் மூன்றும் பாதத்திற் பிறந்த ஜாதகற்கு கிழமே லோடிய வீதி தலைவாசல் தெற்கேகாணும். சமீபத்திற் சங்தொன்று போகும். வடபுறங்கால் வாயும், தென்புறம் தன்குலதெய்வம் கறுப் பன் மதுரைவீரன் குடிகாக்குந் தெய்வமெனச் சொல்லவும் எ-று.

கும்பம் 4-ம் பாதம்

வந்திக்கும் சாடிநாலாம் பாதந் தன்னில்
வந்தோர்க்கு வீதியது வடக்குத் தெற்கு
சந்திக்குந் தலைவாசல் கிழக்கதாகும்
சாளரமும் பின்புறமாம் மிகுபாலுண்டு
பந்திக்கு நேர்வடக்கு தெற்கிற் குண்டம்
பாங்கான கங்கையுண்டு மேற்கே காணும்
சிந்திக்குங் குல தெய்வம் தெரிவை தெய்வம்
சிறப்பான கோயிலுண்டு மீனம்நேரே. 231

இ-ள். கும்பம் நாலாம் பாதத்திற் பிறந்த ஜாதகனுக்கு தென் வடலோடிய வீதி, தலைவாசல் கிழக்கதாகும். சாளரமும், புறமி மிகுதியாயிருக்கும் நேர்வடக்கும், தெற்கும், குளம்,கிணறும், மேல் புறமிருந்து கீழ்முகமாகப் பெருமை பொருந்திய கங்காநதி நீர்பெரு கியோடும், வடகிழக்குத் திசையில் மனம்போலச் திந்திக்கும் மகா சிறப்புப்பொருந்திய கோயிலுண்டென்று சொல்லவும் எ-று.

மீனம் முதற் பாதம்.

மீனமுதற் பாதமதிற் பிறந்த சேய்க்கு
வீதியது கிழமேற்கு வீதியாகும்
தானமது தலைவாசல் வடக்கதாகும்
தடாகமுண்டு கீழ்மேலும் விடதாகும்
வானமளாவிய விருட்சம் பலவாங் தோப்பு
வடபாகங் கோவிலுடை வளமை கோஷ்டம்
கானமிகக் கடைத் தெருவும் அநேக முண்டு
களறிேனும் லக்கினமும் மீனமாமே. 232

இ-ள். மீனம் முதற்பாதத்திற் பிறந்த ஜாதகனுக்கு, கிழமே லோடிய வீதி தலைவாசல் வடக்கேயாகும். அடுத்து தடாக மிருக் கும், இவன் மனைக்குக் கீழ்புறமும், மேல்புறமும் வீடுகளுண்டு. ஓங்கி வளரும் பாங்கான பலசாதி விருட்சங்களிருப்பதால், சோலை சூழ்ந்த தோப்புகளாக இருக்கும். வடபுறத்தில் சிறப்புப் பொருந் திய கோவிலுண்டாம். வளமையான தெருக்களில் பெருக்கமுள்ள கோஷ்டமும் உண்டென்று சொல்லவும் எ-று.

### மீனம் 2-ம்பாதம்.

மீனமது-லக்கினந்தா னிரண்டாம் பாதம்
மேலான சுதன்வீதி வடக்குத்தெற்கு
ஆனதிவன் தலைவாசல் கிழக்கேயாகும்
அங்கமில்லை பிறந்தமனை தோஷமுண்டு
ஞானமிக வுணடாகும் ஈசன் கோயில்
நற்சூழி தென்மேற்குப் புறமே தோன்றும்
தானமது அம்மனையே சொந்தமல்ல
தனித்த விழற் கூரையெனச் சாற்றலாமே. 233

இ-ள். மீனம் இரண்டாம் பாதத்திற் பிறந்த ஜாதகனுக்குத் தென்வடலோடிய வீதி தலைவாசல் கிழக்கேயாகும், அம்மனை அழ கான கட்டடமில்லை. அதனால் தோஷமுண்டாம். ஞானமுடைய வன், தென்மேற்குத்திசையில் ஈசன் கோயில் தோன்றும். அவ்வீ டோ கூரைவீடாம், தனக்குச் சொந்தமில்லை என்று சொல்லவும் எ-று.

### மீனம் 3-ம் பாதம்.

சாற்றலாங் கெண்டையதில் மூன்றும் பாதங்
தனிற் பிறந்தோன் வீதியது கிழக்கு மேற்கு
தேற்றமாந் தலைவாசல் தெற்கதாகும்
துலைமகரங் கர்க்கடகம் காவுகுண்டம்
சீற்றமுள்ள சீயம்வில் லசமீன் கோயில்
சிறந்த இல்ல மதுகோடி யருகிற்சந்து
போற்றலா மிவன்குலத்துக் கேற்ற தெய்வம்
புகழ்பெரிய சாயியெனப் புகலலாமே. 234

இ-ள். மீனம் மூன்றாம் பாதத்திற்பிறந்த ஜாதகனுக்
லோடிய வீதி தலைவாசல் தெற்கேயாகும். துலாம் மகர
இந்தராசிகளில் நந்தன வனம் பூஞ்சோலைசாலைகளும் கிண
ஏரிகளுமுண்டாம். சிங்கம் தனுசு மேடம் மீனம் இந்த ராசிகளில்
ஆலயங்கள் அமைந்திருக்கும். வீட்டுக்கோடியில் பாட்டை
போல் ஒருசந்துபோகும். இவனுக்குக் குலதெய்வம் பெ
பெரியாண்டானென்று சொல்லவும் எ-று.

### மீனம் 4-ம் பாதம்.

புகலவே மச்சமது நாலாம் பாதம்
பொருந்தி வந்த சுதன்வீதி வடக்குத் தெற்கு
இகமதனி லிவன்வாசல் மேற்க தாகும்
இந்திரன்வாழ் திசையொடு மேற்றிசையிற்கு
சுகமான வாயுமனல் தெற்கே கோயில்
தோன்றுஞ்சூழ் வாவியொன்று சொல்லக்கே
நிகரான குலதெய்வந் தெற்கே யுண்டு
நீர்க்கரைபக் கந்தெற்கு நிகழ்த்தலாமே.

இ-ள். மீனம் நாலாம் பாதத்திற் பிறந்த ஜாதகனுக்
வடலோடிய வீதி தலைவாசல் மேற்கேயாகும். இந்திரன்
கிய கிழக்கும், வருணன் திசையாகிய் மேற்கும். குண்ட
டென்பதோடு, வாயு திசையாகிய வடமேற்கும், அக்கினி
கிய தென் கிழக்கும், எமன் திசையாகிய தெற்கும்கோயிலு
களுமுண்டு. இவனுக்குக் குலதெய்வம் நீர்க்கரைப்பக்கம்
மிருக்குமென்று சொல்லவும் எ-று.